වාර්ෂික වාර්තාව

# Annual Report

ஆண்டறிக்கை

# 2015

ශ්‍රී ජයවර්ධනපුර මහ රෝහල

Sri Jayewardenepura General Hospital

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

# ஆண்டறிக்கை

2015

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை

தயாரிப்பு:
திட்டமிடல் அலகு
ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை
முழு பதிப்புரிமை பெற்றது © 2015

# பொருளடக்கம்


| | |
|---|---|
| **1. கூட்டிணைந்த தகவல்கள்** | |
| 1.1 வரலாற்று விடயங்கள் | 4 |
| 1.2 கூட்டிணைந்த நிர்வாகம் | 5 |
| 1.3 எமது திருப்புமுனை | 7 |
| 1.4 தொலைநோக்கு, செயற்பணி | 13 |
| 1.5 எமது பலங்கள் | 14 |
| 1.6 எமது எதிர்பார்ப்புக்கள் | 15 |
| 1.7 மருத்துவமனைப் பணிக்குழு | 16 |
| 1.8 நிபுணத்துவ மருத்துவர் பிரிவு | 17 |
| 1.9 எமது சேவைகள் | 18 |
| 1.10 எமது இணையத்தளம் | 19 |
| **2. முகாமைத்துவ குழு** | |
| 2.1 தலைவரின் செய்தி | 21 |
| 2.2 பணிப்பாளரின் செய்தி | 22 |
| 2.3 பணிப்பாளர் சபை | 23 |
| 2.4 முகாமைத்துவ குழு | 24 |
| 2.5 நிபுணத்துவ மருத்துவர்கள் | 25 |
| **3. தொழிற்பாட்டுத் தகவல்கள்** | |
| 3.1 செயலாற்றுகைப் பொழிப்பு | 30 |
| 3.2 முழுச் செயற்றிறன் | 35 |
| 3.3 துறைசார் மீள்நோக்கு | 36 |
| 3.4 பத்து வருடகாலப் பொழிப்பு | 68 |
| **4. நிதி அறிக்கைகள்** | |
| 4.1 ஐந்தொகை | 71 |
| 4.2 வருமான அறிக்கை | 72 |
| 4.3 நிதி ஓட்டக் கூற்று | 73 |
| 4.4 கணக்குகளுக்கான குறிப்புக்கள் - 2015 | 74 |
| 4.5 முக்கிய கணக்கிடல் கொள்கை - 2015 | 82 |
| **5. கணக்காய்வு அறிக்கை** | |
| 5.1 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 86 |
| 5.2 கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிட்ட குறைகளை சரிசெய்வதற்கு எடுக்கப்பட்ட செயற்பாடுகள் | 109 |
| **6. எதிர்கால தொலைநோக்கு** | |
| 6.1 நிறுவனத்தின் செயலாற்றுகையை உயத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய மத்திய காலச் செயற்பாடுகள். | 131 |

# 1. கூட்டிணைந்த தகவல்கள்



# 1.1 வரலாற்று விடயங்கள்



இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாகிய அதிமேதகைய ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களின் கோரிக்கையின் கொள்ளத்தக்க விலையில் மக்களுக்கு வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது

முன்னால் மகளிர் விவகார, போதன வைத்தியசாலைகள் அமைச்சராகிய சுனேத்திரா ரணசிங்க அவர்களினால் 1985 பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி பேரில் ஜப்பான் குடியரசினால் இலங்கை பிரசைகளுக்காக வழங்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை, இலங்கை ஜனாதிபதியினாலும் ஜப்பான் குடியரசை பிரதிநிதித்துவப்படுத்தி மாண்புமிகு இஷிமக்சூ கித்தகாவா அவர்களினாலும் 1984 செப்டெம்பர் 17 ஆம் திகதியன்று விழாக்கோலமாக திறந்து வைக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை ஸ்தாபிக்கப்பட்டது. ஏனைய அரசாங்க மருத்துவமனைகளுடன் ஒப்பிடும் போது, சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சை சேவைகளை ஏற்று நியமிக்கப்பட்ட மருத்துவமனையின் முதலாவது பணிப்பாளர் சபை, மருத்துவர் ஆர்.பீ.ஜே.பீரிஸ் (தலைவர்), மருத்துவர் டீ.டீ.சமரசிங்க (அமைச்சின் பிரதிநிதி), திரு.எஸ்.பி.சந்திரதாச (நிதி அமைச்சின் பிரதிநிதி), திரு.கே.என்.சொக்சி (ஜனாதிபதி சட்டத்தரணி), திரு.எம்.ரீ.பெர்ணான்டோ (பட்டயம் பெற்ற கணக்காளர்), மருத்துவர் எஸ்.கே.கப்ரால் (பணிப்பாளர் - மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்), திரு.கே.டீ.எல்.ரத்னசேன (செயலாளர்) ஆகியோர்களைக் கொண்டிருந்ததோடு, முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டமானது 1985 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

1984 டிசெம்பர் 12 ஆம் திகதியன்று உடற்கூறு நிபுணத்துவ மருத்துவர் எச்.எச்.ஆர்.சமரசிங்கவின் பொறுப்பின்கீழ் மருத்துவமனைக்கு முதலாவது நோயாளி அனுமதிக்கப்பட்டதோடு, நிபுணத்துவ அறுவைச் சிகிச்சை மருத்துவர் திரு.கே.யோகேஸ்வரன், நிபுணத்துவ உணர்விழப்பு மருத்துவர் கே.பெரேராவின் ஒத்தாசையுடன் 1985 ஜனவரி மாதம் 12 ஆம் திகதியன்று முதலாவது அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. 1985 ஜனவரி 18 ஆம் திகதியன்று மருத்துவமனையில் முதலாவது மகப்பேறு நிபுணத்துவ பெண் நோயியல், மகப்பேறு மருத்துவர் கிங்ஸ்லி த சில்வாவின் மேற்பார்வையில் நிகழ்ந்தது.

இலங்கையில் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகளை விரிவுபடுத்துதல், மருத்துவ பட்டம், பட்டப்பின் படிப்பு உட்பட பிற சுகாதார சேவைகள் போன்றவற்றுக்கான பயிற்சி நிலையமொன்றாக செயற்படும் நோக்கத்தைக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தாபிக்கப்பட்டது. மருத்துவமனை செயற்பாடுகளின் கட்டுப்பாடு முகாமைத்துவ குழுவுக்கு கையளிக்கப் பட்டுள்ளதோடு, பணிப்பாளர் சபையினால் கொள்கை தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. மருத்துவமனையின் செயற்பாட்டுப் பணிகள், மூலதனச் செலவுகள் என்பவற்றுக்கு பொது திறைசேரியின் மானியம் மற்றும் மருத்துவமனையின் வருமானம் என்பன உபயோகப்படுத்தப் படுகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை, இவ் வேளையில் 31 வருடங்களுக்கு மேலாக சிகிச்சை சேவையையும், நவீன மருத்துவ வசதிகளையும் வழங்கி தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்துள்ளது.

# 1.2 கூட்டிணைந்த நிர்வாகம்

பொதுத் திறைசேரியின் அரச பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட " அரச முயற்சிகளுக்கான கூட்டுத்தாபன நிர்வாகத்தின் சிறந்த வியாபாரக் கோவை" என்ற பெயர் கொண்ட கையேடு ஸ்ரீ ஜயவர்தனபுர சபைக்கு வழிகாட்டுகின்றது . வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட தினம் தொடக்கம் இது வரை நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை இந்தக் கோவையில் அடங்கி உள்ள அடிப்படைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி உள்ளது

<u>பணிப்பாளர் சபையும் அங்கத்தவர்களும்</u>




பணிப்பாளர் சபையானது நிறை வேற்றுத் தரம் அற்ற சுதந்திரமான மூன்று பணிப்பாளர்களையும், நிறைவேற்றுத் தரம் அற்ற சுதந்திரமற்ற ஆறு பணிப்பாளர்களையும், தவிசாளரையும், மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளரையும் கொண்டது. முகாமைத்துவப் பணிப்பாளரானவர் பணிப்பாளர் சபையின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதுடன் முகாமைத்துவச் சபை நாளாந்தம் நிர்வாக பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும். ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளர் சபை சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டு உள்ள அதிகாரங்களுக்கு இணங்க சுகாதார அமைச்சருக்கு விசேட கட்டளைகளைச் செய்யும் அதிகாரம் உரித்தாகின்றது.

நிறை வேற்றுத் தரம் அற்ற பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் வைத்தியசாலையின் நாளாந்த நிர்வாக நடவடிக்கைகளில் பங்குபற்றாததுடன் வழிகாட்டல் மேற்பார்வை மொத்த மீளாய்வுச் செயற்பாட்டில் பங்குபற்றுவர் . பணிப்பாளர் சபையின் இரண்டு அங்கத்தவர்கள் பெறுகைக் குழுவாகவும் செயற்படுவதுடன் , ஒரு அங்கத்தவர் வரவு செலவுத் திட்ட நடைமுறைக் குழுவிலும் அங்கத்துவம் பெறுகின்றார் . கணக்காய்வு

# 1.2 கூட்டிணைந்த நிர்வாகம் - தொடர்பானது

## பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களின் ஊதியம்

தவிசாளரின் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களின் ஊதியம் 2003.01.01 ஆந் திகதி PED 04 ஆம் இலக்க அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டது.

## முகாமைத்துவச் சபை

முகாமைத்துவப் பணிப்பாளரின் தலைமையின் கீழ் காணப்படும் முகாமைத்துவச் சபை ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலைச் சட்டத்திற்கு இணங்கிய அங்கத்தவர்களைக் கொண்டதுடன் அது வைத்திசாலையின் நாளாந்த நடவடிக்கைகளின் முகாமைத்துவத்திற்கு மற்றும் பணிப்பாளர் சபைக்கு ஆலோசனை வழங்குவது இடம்பெறுகின்றது.

## கணக்காய்வுக் குழு

பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள திறைசேரியின் அங்கத்தவரின் தலைமையில் கணக்காய்வுச் சபை கூடுவதுடன் , பிற நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர் சபையின் இரு அங்கத்தவர்களையும் அது கொண்டது. கணக்காய்வாளர் திணைக்களத்தின் கணக்காய்வுப் பரிசோதகர் ஒருவர் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு அழைப்பின் பெயரில் கண்காணிப்பாளர் ஒருவராக பங்குபற்றுவார். கணக்காய்வுக் குழு உள்ளகக் கணக்காய்வாளரின் செயற்பாடுகளுக்கு பங்களிப்பினை வழங்கி பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களுக்கு இடையே தொடர்புகளை ஒழுங்குபடுத்துகின்றார்.

பணிப்பாளர் சபைக்கு ஒவ்வொரு தவணைக்குமான கணக்காய்வு அறிக்கையினை கணக்காய்வுக் குழு வழங்கும் .குழுவிற்கு வைத்தியசாலையினை வழிநடத்துதல் மற்றும் செயலாற்றுகை, நிதி நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான மேற்பார்வை, நிதி நிலமையின் பகுப்பாய்வு அத்துடன் நிர்வாக நடவடிக்கைகளைப் பேணிச்செல்லும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. .

## ஒழுக்க நெறி மற்றும் சிறந்த நடைமுறைகள் தொடர்பான கோவை

இந்த நிர்வாக விடய ஒழுங்கு விதிகள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் கொழும்பு பங்குச் சந்தை ஆகியன ஒன்று சேர்ந்து வெளியிடப்பட்ட 2013 கூட்டுத் தாபனங்களின் நிர்வாகம் தொடர்பான சிறந்த பாவனைக் கோவைக்கு மிகவும் இணங்கியதாகும்

# 1.3 எமது திருப்புமுனை



மேன்மை தங்கிய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களினால் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனை திறந்து வைக்கப்பட்டது.

## 1984

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை இலங்கை ஜனாதிபதியும் ஜப்பான் குடியரசின் பிரதிநிதி மாண்புமிகு இஷிமக்சூ கித்தகாவா அவர்களும் 1984 செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று விழாக்கோலமாக திறந்து வைத்தனர்.

1984 டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையில் முதலாவது நோயாளி அனுமதிக்கப்பட்டார்.

## 1986



**தேசிய தாதியர் கல்லூரி- ஸ்ரீ ஜயவர்த்தனபுர**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையின் இணை தாதி கல்லூரி 1986 யூலை மாதம் 01 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது

## 1987

மருத்துவர் எச்.எச்.ஆர்.சமரசிங்கவினால் இலங்கையில் முதலாவது எயிட்ஸ் நோயாளி இனங்காணப்பட்டார்.
முதலாவது தொற்று கட்டுப்பாட்டு குழுவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையில் தாபிக்கப்பட்டது.

## 1990

கண் மருத்துவ பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது.
லேசர் சிகிச்சை பிரிவும் ( Visual field analyzer ) இயந்திரமும் தாபிக்கப்பட்டது.



அடைபட்ட பகுதியை விட்டு வேறொரு வழியில் குருதி செல்வதற்கான இருதய அறுவைச் சிகிச்சை

## 1991

மருத்துவர் என்.யூ.குணசிங்கவினால் 1991 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதியன்று முதலாவது அடைபட்ட பகுதியை விட்டு வேறொரு வழியில் குருதி செல்வதற்கான இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
பேராசிரியர் ஜே.ஆர்.கொறாயாவினால் முதலாவது முதுகெலும்பு பக்கவாட்டு வளைவு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.



குருதி சுத்திகரிப்பு பிரிவு

## 1993

குருதி சுத்திகரிப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1993 ஆகஸ்ட் மாதம் உடலினுள் உட்செலுத்தப்பட்ட கெமரா உதவியுடன் பித்தப்பை அகற்றும் அறுவை சிகிச்சை (Laparoscopic Cholecystectomy)

## 1994

எலும்புமுறிவுப் பிரிவும் இருதய நோய் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது

யோனிக்குழாய் மூலம் பரிசோதனை செய்யக்கூடிய Ultrasound Scanner இயந்திரம் இலங்கையில் முதன்முதலாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் தாபிக்கப்பட்டது.



யோனிக்குழாய் மூலம் பரிசோதனை செய்யக்கூடிய இயந்திரம்

## 1995

மருத்துவர் பி.ஏ.குணரத்ன, மருத்துவர் ஏ.டீ.கப்புருகே ஆகியோர் இலங்கையில் முறையாக Arterial Switch சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

## 1998

Fiber Optic Bronchoscope இயந்திரமொன்று தாபிக்கப்பட்டது



முலை ஊடுகதிர்ப்பட இயந்திரம்

## 2000

2000 நவம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று மருத்துவர் டீ.எல்.பியறிசியினால் முதல் சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

## 2003

Mammography பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.



நிபுணத்துவ மருத்துவ கவனிப்புச் சேவை

## 2006

2006 மார்ச் மாதம் நிபுணத்துவ மருத்துவ கவனிப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவமனையின் மனையிடத்தில் "அரசாங்க மருந்தக" கிளையொன்றும் தாபிக்கப்பட்டது.

## 2007

நரம்பு பிரிவு, நரம்பு அறுவை சிகிச்சை பிரிவு,

மூட்டுவாதம் சம்பந்தமான பிரிவும் ஆரம்பிக்கப்பட்டன




'அரச ஒசுசல'

## 2009

சரும நோய் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

## 2010

நரம்பு அறுவை சிகிச்சைக்கான தீவிர கண்காணிப்பு பிரிவும் உளநோய் ஆலோசனைச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டன.

.




தேசிய உற்பத்தித்திறன்கள் விருது 2010/11

## 2011

தேசிய உற்பத்தித்திறன்கள் பிரிவின் ஒத்துழைப்புடன் மருத்துவமனையில் S5 கருதுகோள் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

## 2012

சுகாதார கல்வி பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

மருத்துவமனை 2010/11 தேசிய உற்பத்தித்திறன் விருதினை (சீ பிரிவு) பெற்றுக்கொண்டது

## 2013

2013 ஆகஸ்ட் மாதம் முதலாம் தடவையாக திறப்புத் துவார சத்திர சிகிச்சை மூலம் சிறுநீரகம் பொருத்துவதற்கான சிறுநீரகத்தினை பெறுதல்

.



முதலாம் தடவையாக திறப்புத் துவார சத்திர சிகிச்சை மூலம் சிறுநீரகம் பொருத்துவதற்கான சிறுநீரகத்தினை பெறுதல்

2013 ஆகஸ்ட் மாதம் இலங்கையில் முதலாவது தடவையாக இதயத்துடிப்பின் போதே இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாயில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளல்



இதயத்துடிப்பின் போதே இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாயில் பொருத்தும் சத்திர சிகிச்சை

2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வைத்தியக் கல்விப் பல்கலைக்கழக கல்விக் கல்லூரி நிர்மாணிக்கப்பட்டது.



சுகாதாரக் கல்விப் பல்கலைக்கழக கல்வியியல் நிறுவனம் திறந்து வைத்தல்

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ மாணவர்களுக்கு கிளினிக் பயிற்சிக்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனையில் பேராசிரியர் பிரிவை ஸ்தாபித்தலும் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மருத்துவ மாணவர்களுக்காகக் கிளினிக் பயிற்சி ஆரம்பித்தல்.

2014 ஆம் ஆண்டு ( டிசம்பர் மாதம் ) வைத்தியசாலையின் முப்பதாவது வருட நிறைவு விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது



நடைபவனி - முப்பதாவது வருட நிறைவு விழா

2015



புதிய CT இயந்திரத்தைக் கையளித்தபோது






கவுன்சிலிங் நிலையம்



மீண்டும் தயாரிக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு



2015

இருதய சிகிச்சைப் பிரிவினை திறந்த போது.



புதிய தாதிகள் விடுதிக்கு அடிக்கல் நாட்டப்பட்டபோது

.




2015

2015 சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்புக்கான விருது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்திய சாலையினால் வெற்றிகொள்ளப்பட்டது



# 1.4 தொலைநோக்கு, செயற்பணி

## தொலைநோக்கு

2030 ஆம் ஆண்டு அளவில் தென் ஆசியாவின் சிறந்த முன்னுரிமையான மூன்றாவது சுகாதார பாராமரிப்பு வழங்குனராகுதல்

## செயற்பணி

“ புதிய தொழிநுட்பத்துடன் செலவு குறைந்த உற்பத்தித்திறன்மிக்க சுகாதாரத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க தியாகத்துடன் விசேட, பாதுகாப்பான, ஒழுக்கம்மிக்க மற்றும் தரமான தர நிலைகளை பேணி மருத்துவ மற்றும் கூட்டு சுகாதார அறிவியல் தொடர்பான இளமானி மற்றும் முதுமானிக் கல்வியினைப் பெற்றுக்கொடுத்ததல் ”

# 1.5 எமது பலம்

- சிறந்த தகைமைகளைக் கொண்ட அனுபவம் மிக்க, செயலாற்றல் கொண்ட அர்ப்பணிப்புடனான மருத்துவ, தாதி மற்றும் தொழினுட்ப பதவியினர்களைக் கொண்ட எமக்கு சுகாதார துறையில் நீண்டகால நற்பெயர் உள்ளமை.

- விசேட சுகாதார பணியை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற சட்டமொன்றினால் எமக்கு அதிகாரமும் பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளமை (1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டம்)

- சகல வசதிகளுடனும் சிறந்த வடிவமைப்புடனும் கூடிய மருத்துவமனைக் கட்டடத்தொகுதி.

- நவீன மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள், உயர் இரசாயனகூட வசதிகளினால் நோயாளிகளுக்கான சிகிச்சை, பதவியினர் பயிற்சி, மருத்துவ கல்வி, ஆராய்ச்சி போன்றவற்றுக்கு கிடைக்கும் அளப்பரிய வசதி.

- பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கும் நிதிப்பலமும் சுயாதீனமாக நிதிசார் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமும்.

- விரிவுபடுத்தப்பட்ட மருத்துவ மாற்று அறுவைச் சிகிச்சை கவனிப்பு சேவை, தனியார் மருத்துவசாலைகளுடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கும் ஆற்றல்.



# 1.6 எமது எதிர்பார்ப்புகள்



- கூட்டிணைந்த திட்டத்துக்கு அமைவாக உலகளாவிய தரங்களை நோக்கி விருத்தியாதல்.
- நவீன மருத்துவ விஞ்ஞான உபகரணங்களை கொண்டிருத்தல்.
- மருத்துவமனை கட்டணங்கள் மக்களுக்கு ஏற்ககூடிய விதத்தில் இருத்தல்.
- சர்வதேச தரம்வாய்ந்த நோயாளர் கவனிப்பு சேவைகளை வழங்குதல்.
- மருத்துவ பட்டம் மற்றும் மருத்துவ பட்டப்பின் படிப்பு, பயிற்சி நிலையமொன்றாக செயலாற்றுதல்.
- சகல தரங்களுக்கும் போதுமான வினைத்திறனுடைய பதவியணியை கொண்டிருத்தல்.
- மக்களுக்கு ஏற்கக்கூடிய தொகையை அறவிட்டு வருமானம் ஈட்டுதல்.
- சுகாதார அமைச்சின் கீழ் சேவையாற்றிய பதவியினர்களின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு மதிப்பளித்தல்.

# 1.7 மருத்துவமனைப் பணிக்குழு

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது மருத்துவமனையின் அனைத்து பணிக்குழு உறுப்பினர்களும் 1921 ஆகும். அதிக எண்ணிக்கையான தரங்களைச் சேர்ந்த மருத்துவமனைப் பணிக்குழு பற்றிய சாராம்சம் கீழே காட்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1) பதவிநிலைப் பணிக்குழு | | 19 |
| 2) மருத்துவப் பணிக்குழு | | 306 |
| நிபுணத்துவ வைத்திய உத்தியோகத்தர்கள் | 37 | |
| வதிவிட வைத்திய நிபுணர் | 1 | |
| மருத்துவ உத்தியோகத்தர்கள் | 166 | |
| எல்லைக்குட்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் | 28 | |
| பட்டப் பின் எல்லைக்குட்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் | 20 | |
| பட்டப் பின் படிப்புப் பயிற்சி மருத்துவ உத்தியோகத்தர்கள் | 54 | |
| 3) தாதிப் பணிக்குழு | | 758 |
| தாதி சகோதரிகள் | 23 | |
| தாதி உத்தியோகத்தர்கள் | 551 | |
| மாணவத் தாதிகள் | 184 | |
| 4) தொழில் சார்ந்த மருத்துவத் துறையினர் | | 70 |
| a) எம்எல்ரி | 35 | |
| b) கதிர்ப்படம் பிடிப்பாளர்கள் | 08 | |
| c) பிசியோதெரப்பிஸ்கள் | 08 | |
| d) மருந்தாக்கியலாளர்கள் | 19 | |
| 5) பரா மெடிக்கல் அலுவலகர்கள் | | 27 |
| a) பீஎச்ஐ | 02 | |
| b) ECG எடுப்பவர்கள் (Cardiographers) | 09 | |
| c) ஆடியோ மெட்டிசியன் | 01 | |
| d) கண்சிகிச்சை தொழிநுட்பவியலாளர்கள் | 02 | |
| e) பேச்சு சிகிச்சையாளர்கள் | 01 | |
| f) ஈ.எம்.ரி | 9 | |
| g) பேபிலியூசிஸ்ட் | 3 | |
| 6) பிற பணிக்குழுவினர் | | |
| a) முகாமைத்துவ உதவியாளர்கள் (MN1,MN2) | 132 | 254 |
| b) பயிற்சியாளர்கள் | 11 | |
| c) பிற | 111 | |
| 7) கனிஷ்ட பணிக்குழு | | |
| a) ஓடலி மேற்பார்வையாளர்கள் | 06 | 311 |
| b) ஓடலிகள் | 305 | |
| c) தொழிலாளர்கள் | | |
| நிரந்தரம் | 77 | 176 |
| அமையம் | 58 | |
| d) கவனிப்பாளர்கள் | 41 | |
| மொத்தப் பணிக் குழுவினர்கள் | | **1921** |

# 1.8 நிபுணத்துவ மருத்துவர் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையினூடாக பரந்தளவில் நிபுணத்துவ வைத்திய சேவைகள் வழங்கப்படுகின்று.சகல நிபுணத்துவ பிரிவுக்கும் இலங்கையின் கீர்த்திமிகு மிகத் திறமைமிக்க நிபுணத்துவ மருத்துவர்களின் சேவை இங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையினால் சேவைகள் வழங்குகின்ற விஷேட மருத்துவப் பிரிவுகள் கீழ் காட்டப்படுகின்றன

1பொது மருத்துவப் பிரிவு

2. சத்திரசிகிச்சை மருத்துவப் பிரிவு

3.பெண்நோய் மகப்பேறு பிரிவு

4.சிறுவர் நோய் சிகிச்சைப் பிரிவு

5.உணர் விழப்புப் பிரிவு

6. தோல்நோய் பிரிவு

7.கண் நோய் விஷேட மருத்துவப் பிரிவு

8.தொண்டை, காது மற்றும் மூக்கு சம்பந்தமான நிபுணத்துவ மருத்துவப் பிரிவு

9.நரம்பு சார்ந்த நோய்ப் பிரிவு

10. தோல்நோய் பிரிவு

11.மார்பு நோய்ப் பிரிவு

12. நரம்பியல் நோய் அறுவைச் சிகிச்சைப் பிரிவு

13.இருதயநோய் நிபுணத்துவ மருத்துவ பிரிவு

14. இருதய சத்திரசிகிச்சை நிபுணத்துவ மருத்துவ பிரிவு

15.எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு

16. சிறுநீரக மற்றும் குருதி சுத்திகரித்தல் பிரிவு

17.பாலியல் நோய்கள் மற்றும் சிறுநீரகப் பொருத்துகைப் பிரிவு

18. மூட்டுவாத நோய் நிபுணத்துவ மருத்துவப் பிரிவு

19.எண்டோகிரினோலஜிப் பிரிவு

20. நோயியல் வரலாற்றுப் பிரிவு

21.நுண் உயிரின நிபுணத்துவ வைத்தியப் பிரிவு

22. குருதியியல் நிபுணத்துவ மருத்துவப் பிரிவு

23.இரசாயண வைத்தியப் பிரிவு

24.இரத்தோட்ட நிபுணத்துவ மருத்துவப் பிரிவு

25.கதிரியக்க நிபுணத்துவப் பிரிவு

# 1.9 எமது சேவைகள்

பரந்தளவிலான சேவைகள் ஒரே கூரையின் கீழ் சிறந்த தரத்தில் மிகவும் சகாய விலையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களுக்கு வழங்குவதே ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் முக்கிய குறிக்கோள் ஆகும். இதில் வழங்கப்படும்

## நோயாளர் கவனிப்புச் சேவைகள்

1. அவசர சிகிச்சைப் பிரிவு 24 மணிநேர சிகிச்சை மற்றும் அனுமதி

2. வெளி நோயாளர் சிகிச்சை (8.00 மு.ப. –4.00 பி.ப.)

3. எல்லா விசேட துறைகளுக்குமாக நிபுணத்துவச் சிகிச்சை

4. அவசர சிகிச்சைப் பிரிவு
- பிரதான அவசர சிகிச்சைப் பிரிவு
- நரம்பு சத்திர சிகிச்சை
- இருதய நோய்
- இருதய மார்பு சிகிச்சை

5. உயர் சார்பு அலகு
- சிறுவர் நோய்கள்
- நரம்பு நோய்கள்
- மார்பு நோய்கள்
- இருதய நோய்கள்
- பொது நோய்கள்
- பெண் நோய்கள்

6. . மருத்துவ பரிசோதனைப் பிரிவு
எல்லா நோய்களுக்குமுரிய வைத்தியப் பரிசோதனை

7. ஆய்வு கூடச்சேவைகள்
குருதியியல்
உயிர்வேதியல்
நுண்ணுயிரியல்
திசுத் துயிரியல்

8. கதிர் படம் பிடிக்கும் சேவை
- மெமோகிரபி
- எக்ஸ்றே சேவை
- அல்ட்ராசவுண்ட சேவை
- CT சேவை

9. மார்பு நோய் பரிசோதனை
- ECG சேவை
- உடற்பயிற்சி சேவை (ECG)
- ஹோல்டர் பரிசோதனை
- என்ஜியோகிரபி மற்றும் கார்டியாக் வடிக் குழாய்
- 2D எகோ

10. நரம்பியல் பரிசோதனைகள்
- EMG பரிசோதனை
- EEG பரிசோதனை

12. என்டோஸ் கொப்பிச் சேவை (UGIE,LGIE)

13. சிறுநீருடன் தொடர்புடைய சிகிச்சைச் சேவைகள்

14. மூக்கு வாய்,தொண்டையுடன் தொடர்புடைய பரிசோதனை

15. கண்ணுடன் தொடர்புடைய பரிசோதனை

கண், உளநோய், புற்றுநோய் சிகிச்சையளிப்பு

16. போசாக்கு ஆலோசனைச் சேவை மற்றும் தகவல்கள்

17 பிசியோதெரபி சேவைகள்

18. உள ஆலோசனைச் சேவைகள்

19. பேச்சுப் பயிற்சிச் சேவைகள்

20. உதவிச் சேவைகள்
- இரத்த மாற்றுதல் சேவை
- நிபுணத்துவ மருத்துவ சேவை (செனல் சேவை)
- சுகாதாரக் கல்விச் சேவை
- ஏற்பு மருந்து வழங்கும் சேவை
- தொற்று நோய் கட்டுப்பாட்டுச் சேவை
- பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சேவை
- மருந்தக சேவை (24 மணித்தியாலயம்)
- திடீர் அம்பியுலன்ஸ் சேவை

## ஏனைய சேவைகள்

- வங்கி (BOC,HNB)
- தன்னியக்க ரெலர் இயந்திர சேவை

(BOC, HNB, Peoples ,Commercial )

- சிற்றுண்டிச்சாலை வசதிகள்
- தபாலக வசதிகள்
- வாகனத் தரிப்பிட வசதிகள்
- வாணிபக் கூடம்

# 1.10 எமது இணையத்தளம்

www.sjghsrilanka.org




“ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் உத்தியோகபூர்வ இணையத் தளம். ”

# 2. முகாமைத்துவக் குழு



# 2.1 தவிசாளரின் செய்தி



சிறப்பான வருடம் ஒன்றின் முடிவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் 2015 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்காக இந்தச் செய்தியினை வெளியிட கிடைத்த சந்தர்ப்பத்தினையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் வைத்தியசாலையின் முகாமைத்துவத்திற்கு அதன் கால எல்லையின் ஆரம்ப வருடத்தினுள் தரம் மற்றும் சேவைகளின் எல்லையினை அதிகரித்ததன் மூலம் வைத்தியசாலையில் இயலுமான அளவு அபிவிருத்தி ஒன்றினை காட்டுவதற்கு இயலுமாக இருந்தது.

சிரேஷ்ட முகாமைத்துவம் குழு ஒன்றாக செயற்பட்டு கடந்த காலத்தில் தீர்க்கப்படாது அதன் முன்னேற்றத்திற்கு தடையாகக் காணப்பட்ட பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தினுள் நோயாளிகளின் திருப்திகரமான அறிக்கையின் மூலம் பணிப்பாளர் சபை பெற்றுக்கொண்ட பிரதிபலிப்பு மிகவும் பாராட்டிற்கு உரியதாகும்.வைத்தியசாலையின் சிகிச்சைச் சேவையினைப் பெற்றுக்கொள்ளும் நோயாளிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பானது அதன் சிகிச்சைச் சேவையின் தரத்தினைக் காட்டும் தரவு ஒன்றாகும்.

சுகாதார, போசாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்ன அவர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் மக்களின் தற்போதய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வைத்தியசாலையின் சேவைகளின் எல்லைகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதற்கு எங்களுக்கு இடம் கிடைத்தது.

தற்போதைய அரசினால் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கும், புதிய தொழினுட்பத்தினை அறிமுகப்படுத்துவதற்கும், மற்றும் சேவைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதற்காகவும், தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் மேலதிக நிதி வழங்கப்பட்டது.

நீண்ட காலம் தொடக்கம் தீர்க்கப்படாது காணப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, மற்றும் பணிக்குழு தொடர்பான பிரச்சினையைத் தீர்த்து,நோயாளிகள் தொடர்பாக பணிக்குழுவினர் காட்டும் எண்ணங்களில் தெளிவான மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தியதன் மூலம் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மொத்த சிகிச்சைச் சேவையும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

தரமான மற்றும் வழங்கும் சேவைகளின் எல்லைகளுள் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை இலங்கையின் தனியார் வைத்தியசாலைகளுக்கு மாதிரி ஒன்றாக மாற்றும் நோக்கத்துடன் புதிய முகாமைத்துவம் செயற்படுகின்றது.

இவ் விடயத்திற்காக நிபுணத்துவ வைத்தியர்களின், மற்றும் பணியாட்களினால் வைத்தியசாலையின் முகாமைத்துவத்திற்குக் கிடைக்கும் ஒத்துழைப்பு மற்றும் உபகாரம் சிறப்பானதாகும்.

இந்த வைத்தியசாலையின் மேம்பாட்டிற்காக பணிப்பாளர் சபைக்கு வழங்கிய வழிகாட்டல் மற்றும் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்த மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும், கௌரவ சுகாதார மற்றும் ,போசாக்கு, உள்நாட்டு வைத்திய அமைச்சர் அத்துடன் அமைச்சின் செயலாளருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வைத்தியசாலையினை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவத்தினால் எடுக்கும் பெறுமதிமிக்க முயற்சியானது முழுமையாக வெற்றியடைய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

வைத்தியர் எச்.ஏ.பீ.கஹந்தலியனகே

MBBS; MSc(Com.Med); DCEH(Lond); MMHI(Bostan); MCMA; FCMA;

தலைவர்

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை

# 2.2 பணிப்பாளரின் செய்தி



இந்த புகழ் பெற்ற தாபனத்தின் பணிப்பாளராக 2015 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைக்கு இச் செய்தியை வழங்குவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை நான் மிகவும் கௌரவமாகவும், சிறப்புரிமையாகவும் கருதுகின்றேன். கட்டணம் அறவிடும் பொது வைத்தியசாலை, மற்றும் மருத்துவ பட்டப் பின்படிப்பு பயிற்சி நிலையம் ஒன்றாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பல சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த இணையற்ற தாபனத்தின் எதிர்காலப் பயணத்திற்கு இடையூறு விளைவிக்கும், மற்றும் அதற்குத் தடையினை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பாக தெளிவான பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கு இவ் வருடத்தினுள் எங்களுக்கு இயலுமாக இருந்தது. நவீன தொழனுட்பத்துடன், நாட்டின் மிகவும் உபசரணையுள்ள, மற்றும் முன்னோடி மூன்றாம் நிலை நோய்களின் சிகிச்சை நிலையமாக இந்த வைத்தியசாலையினை மாற்றும் எங்களது முயற்சிக்கு மேற்கொள்ள வேண்டியுள்ள விடயங்களை இனங்காணுவதற்கு எங்களுக்கு இடம் கிடைத்தது.

அந்த முயற்சியின் முக்கியமான மற்றும் அத்தியாவசியமான பகுதியாக 32 வருட பழைமையான இந்த வைத்தியசாலையினை, நாளாந்த நோய் சிகிச்சை நடவடிக்கைகளுக்கு பாரிய தடைகள் ஏற்படாத படியும், படிப்படியாக புனர்நிர்மாணம் செய்யும் திட்டமும் எங்களினால் ஆரம்பிக்கப்பட்டது . அத்துடன் பிற முக்கியமானவைகள் என இனங்காணப்பட்ட செயற்பாடுகளுக்காகவும், ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த முயற்சியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக நோய் நிவாரண சேவைகளின் தற்போதைய கொள்கைகள் மற்றும் வளர்ச்சி தொடர்பாகவும், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சேவகர்களின் பங்களிப்பில் உள்ள முக்கியத்துவம், மற்றும் பங்குபற்றல் தொடர்பாகவும், அவர்களின் அறிவினை மேம்படுத்தும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை 1984 ஆம் ஆண்டில் அதன் சேவையினை மக்களுக்கு வழங்கியது, தொடக்கம் பல தசாப்தங்கள் பேணப்பட்டு வந்த கௌரவமான நிலைமையினை மறந்து விடாது அதனைப் பாதுகாத்து, தெளிவான நோக்குடன் , பாதுகாப்பான மற்றும் தரமான வைத்திய சிகிச்சைச் சேவையினை பெற்றுக் கொடுக்கும் முன்னோடியாக மாறும் எதிர்கால பயணத்தில் ஈடுபட்டுள்ளது.

கௌரவ சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்ன அவர்களுக்கும், கௌரவ பிரதி அமைச்சர் பைசால் காசிம் அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் வைத்தியர் டி.எம். ஆர் .பி திசாநாயக்க அவர்களுக்கும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்திய பாலித்த மஹிபால அவர்களுக்கும், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தவிசாளரான வைத்தியர் அதுல கஹந்தலியனகே அவர்களுக்கும், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கும், முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களுக்கும், பிரதிப் பணிபாளர் வைத்தியர் சந்துஷியா பெர்ணாந்து அவர்களுக்கும் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் எல்லாப் பணிக்குழுவினருக்கும் ,ஒவ்வொரு வேளையிலும் காட்டிய உற்சாகம், ,தொழிற் திறமை, மற்றும் அர்ப்பணிப்பிற்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வைத்தியர் சுசித சேனாரத்ன
பணிப்பாளர்
ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை

# 2.3 பணிப்பாளர் சபை



| | | |
|---|---|---|
| Dr . H.A.P..கஹண்ட லியனகே- | - | தலைவர் ஸ்ரீ.ஜ.பொ.வை |
| Dr . N.S.A.சேனாரத்ன | - | முகமைத்துவப் பணிப்பாளர், ஸ்ரீ.ஜ.பொ.வை |
| Dr . P..G மஹீபால | - | சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் |
| Mrs. A..K.குணசேகர | - | திறைசேரியின் பிரதிநிதி ( படத்தில் இல்லாதவர் ) |
| Prof ஜனக்க த சில்வா | - | பணிப்பாளர் – PGIM |
| Mrs நந்தா லலித் சேன்னாயக்க | - | அமைச்சின் பிரதிநிதி |
| Mr சமத் த சில்வா | - | அமைச்சின் பிரதிநிதி |
| Dr ஹர்ஷ சமரவீர | - | அமைச்சின் பிரதிநிதி |
| Dr V K.P. இந்திரரத்ன | - | நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி |
| Dr மாதவ கருணாரத்ன | - | நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி |
| Dr P. J .அம்பவத்த | - | நிபுணத்துவ மருத்துவர்களின் பிரதிநிதி |

# 2.4 முகாமைத்துவக் குழு

**Dr. சுசித சேனாரத்ன**



பணிப்பாளர்
குழுத் தலைவர்

**Dr. S.பெர்ணாண்டு**



பிரதிபணிப்பாளர் (பதில்.)

**Dr. ரொஹான் அலோசியஷ்**



சிறுவர் நோய் பற்றிய நிபுணத்துவ மருத்துவர்
அங்கத்தவர்

**Dr. ஹர்ஷ குணசேகர**



நரம்பியல் நோய் நிபுணத்துவ மருத்துவர்
அங்கத்தவர்

**Dr. (Mrs.) S. K. ஜயதிலக**



நுண்ணுயிர் நிபுணத்துவ மருத்துவர்
அங்கத்தவர்

**Mr.W.A.D.அல்விஸ்**



பிரதம கணக்காளர்
அங்கத்தவர்

**Mrs. திலானி ராஜபக்ஷ**



மருத்துவமனைச் செயலாளர்
அங்கத்தவர்

**Mrs. A. N. சப்புதன்திரி**



தலைமைத் தாதி
அங்கத்தவர்

# 2.5 நிபுணத்துவ மருத்துவர்கள்

## உடற்கூறு நிபுணத்துவ மருத்துவர்கள்



Dr. (Mrs.) **சம்பா ஜயசுந்தர**
*MBBS, MD*



Prof. **ஆர்.எல்.சத்தரசிங்க**
*MBBS, MD. MRCP (London), FRCP (Ed.), MRCP, FRCP (USA), FRCP (Cey), CCST (UK), MACG (UK)*



Dr. **சின்தக்க த சில்வா**
*MBBS, MD, MRCP (UK)*

## நிபுணத்துவ அறுவை சிகிச்சை மருத்துவர்கள்



Dr. D. L. .**பியசிறி**
*MBBS, MS, FRCS (Ed.)*

Dr. (Mrs.) D. H. **சமரகோன்**
*MBBS, MS (Colombo), MRCP (UK)*



Dr. S. A. **குணவர்தன**
*MBBS, MS, MRCS (Eng.)FRCS*

## சிறுவர் நோய் நிபுணத்துவ மருத்துவர்கள்

Dr. R. A. R. D. **அலோசியஸ்**
*MBBS, DCH, MD, MRCP*



## பெண் நோய் மற்றும் மகப்பேறு நிபுணத்துவ மருத்துவர்கள்



Dr. ஹேமந்த பெரேரா
*MBBS, MS (Sri Lanka), FRCOG (UK)*



Dr. மாதவ கருணாரத்ன
*MBBS, MS, FRCOG, FSLCOG*

## இருதய நோய் நிபுணத்துவ மருத்துவர்கள்



Dr. (Mrs.) N. L. அமரசேன
*MBBS, MD (Colombo), FRCA (London)*



Dr. J. P. ஹேரத்
*MBBS, MD*

மரபாய்வு நிபுணத்துவ மருத்துவர்கள்



Dr. (Mrs.) M. வீரசேகர
*MBBS, DCH, MD (Pead.), MRCP (UK)*

நரம்பியல் நிபுணத்துவ மருத்துவர்கள்



Dr. H. H. குணசேகர
*MBBS, MD, MRCP*

சிறுநீரக நோய் நிபுணத்துவ மருத்துவர்கள்



Dr. C. A. ஹேரத்
*MBBS, MD*

இருதய அறுவைச் சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்



Dr.A. D. கப்புருகே
*MBBS, MS, FRCS*



Dr. H. R. Y. de சில்வா
*MBBS, MS, MRCS (Eng), FRCS(C-TH)*

மூட்டுவாத நோய் நிபுணத்துவ மருத்துவர்



Dr. கலீல் காசிம்
*MBBS, MD*

தோல் நோய் நிபுணத்துவ மருத்துவர்



Dr. (Mrs.) D. ஆரியவம்ச
*MBBS, MD (Dermatology)*

கண் அறுவைச் சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்



Dr. D. H. வாரியப்பொல *MBBS, DO, FRCS (Ed), MS*

எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்

Dr. A. B. S. ஆனந்த பேரேரா
*MBBS, MS, FRCS*



நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணத்துவ மருத்துவர்



Dr. (Mrs.) M. விஜேரத்ன
*MBBS (Hons, Melb.), MS (SL), FRCS (Ed.)*

காது மூக்குத் தொண்டை பற்றிய நிபுணத்துவ அறுவைச் சிகிச்சை மருத்துவர்



அசோகா ஜயசேன
*MBBS, MS, FRCS*

## உணர்விழப்பு நிபுணத்துவ மருத்துவர்கள்



Dr. V. K. P. இந்திரரத்ன
*MBBS, MD, FFARCSI, FRCA*



Dr. (Mrs.) J. S. K. ராஜசிங்க
*MBBS, MD (Anaesthesia), FRCA (UK)*



Dr. (Mrs.) R. P. S. பலிஹவதன
*MBBS, MD (Anaesthesia), FRCA (UK)*

## கதிரியக்க நிபுணத்துவ மருத்துவர்கள்



Dr. D. J. விக்கிரமரத்ன

*MBBS (Cey), MD (Radiology*



Dr. (Mrs.) N. M. P. K.அரம்பேபொல

*MBBS, MD (Radiology)*



Dr. (Mrs.) R. M. S. T. S.சமரவீர

*MBBS, MD (Radiology)*

## குருதியில் நிபுணத்துவ மருத்துவர்



Dr. (Ms.) C. காரியவசம்
*MBBS, Dip. Path., MD (Haematology)*

## நுண்ணுயிர் நிபுணத்துவ மருத்துவர்



Dr. (Mrs.) S. K. ஜயதிலக
*MBBS, Dip. Medical Micro., MD*

## நோயியல் நிபுணத்துவ மருத்துவர்கள்



Dr. (Mrs.) M. ஜோசப்

*MBBS, Dip. Path., MD (Pathology)*



Dr. P. J. அம்பவத்த

*MBBS, Dip. Path., MD (Pathology)*



Dr. சொனாலி றொட்றிகோ

*MBBS, Dip. Path., MD (Pathology)*

வதிவிட உடல் நோய் நிபுணத்துவ மருத்துவர்



Dr. (Mrs.) **சியாமா சுபசிங்க**

*MBBS, MD*

வதிவிட சிறுநீரக நோய் நிபுணத்துவ மருத்துவர்



Dr. M. C. B. **கலஹிடியாவ**

*MBBS, MD (Col), MRCP (UK)*

வதிவிட பாலியல் மற்றும் சிறுநீரக மாற்று நிபுணத்துவ சத்திர சிகிச்சை மருத்துவர்



Dr, L. **நிரோஷன் செனிவிரத்ன**

*MBBS (Col), MS (SL), MRCS (UK)*

உணர்விழப்பு வைத்திய நிபுணர்



Dr. (Mrs.) C.R. **பிலிமத்தலாவ**

*MBBS, MD*

இரத்தமாற்று வைத்திய நிபுணர்



Dr. (Mrs.) A.M. **அபேயவர்தன**

*MBBS, MD (Transfution Medicie)*

# 3. தொழிற்பாட்டுத் தகவல்கள்



# 3.1 செயலாற்றுகைப் பொழிப்பு



1983 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை 1984 செப்டெம்பர் மாதம் 17 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது. கௌரவ சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நிர்வாகம் செய்யும் பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை மருத்துவ நோயாளர் சிகிச்சைச் சேவைகள் வழங்குவதைவிட, மேலதிகமாக பட்டதாரி எதிர்பார்ப்பாளர்களுக்கும் பட்டப் பின் படிப்பு பட்டதாரி எதிர்பார்ப்பாளர்களுக்கும் பயிற்சி வழங்கும் நிலையமுமாக விளங்குகிறது.

2015 ஆம் ஆண்டின் வைத்தியசாலையின் பணிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 1921.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி |
|---|---|---|
| நிறைவேற்று பதவியினர்கள் | 22 | 19 |
| மருத்துவர்கள் | 203 | 306 |
| தாதிப் பணிக்குழு | 880 | 758 |
| குறை நிரப்பு வைத்தியப் பணியாளர்கள் | 78 | 70 |
| இடைக்கால மருத்துவப் பணியாளர்கள் | 30 | 27 |
| பிற பணிக்குழு | 247 | 254 |
| கனிஷ்ட பணிக்குழு | 466 | 487 |
| மொத்தம் | 1926 | 1921 |

வைத்தியசாலை மூலம் வழங்கப்படும் உள்ளக மற்றும் வெளியக நோயாளர் சிகிச்சைச் சேவைகள் சம்பந்தமான சுட்டிகளின் ஒப்பு நோக்கும் சாராம்சம் கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது

| சுட்டிகள் | 2015 | 2014 | அதிகரிப்பு/ இறக்கம் (%) |
|---|---|---|---|
| 1. நோயாளர் கட்டில்களின் எண்ணிக்கை | 1076 | 1079 | -0.3 |
| 2.சேர்க்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை | 55143 | 53424 | 3.2 |
| 3. நோயாளர் பொதுவாகத் தங்குதல் (நாட்கள்) | 4.5 | 4.7 | -4.3 |
| 4. மருத்துவமனைக் கட்டில்கள் பாவிக்கும் விகிதம் (%) | 63.04 | 64.10 | -1.7 |
| அ சாதாரண வாட்டுக்களில் கட்டில்கள் பாவிக்கும் விகிதம் (%) | 63.52 | 64.28 | -1.2 |
| ஆ. கட்டணம் செலுத்தும் வாட்டுக்களில் கட்டில்கள் பாவிக்கும் விகிதம் (%) | 62.38 | 61.96 | 0.7 |
| 5. வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர் எண்ணிக்கை | 21377 | 18733 | 14.1 |
| 6. அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்ற நோயாளர் எண்ணிக்கை | 36752 | 35060 | 4.8 |
| 7. கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளர்களின் எண்ணிக்கை, | 158453 | 158174 | 0.2 |
| 8. செய்யப்பட்ட முழு அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 13915 | 13628 | 2.1 |
| 9. செய்யப்பட்ட இருதய அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 407 | 385 | 5.7 |
| 10. செய்யப்பட்ட சிறுநீரகப் பொருத்துகைகளின் எண்ணிக்கை | 23 | 22 | 4.5 |
| 11. செய்யப்பட்ட இரத்தக் கசிவுகளின் எண்ணிக்கை | 6171 | 6008 | 2.7 |
| 12. செய்யப்பட்ட எக்கோ பரிசோதனைகளின் எண்ணிக்கை | 14303 | 12964 | 10.3 |
| 13.செய்யப்பட்ட என்ஜயோ கிரம் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 688 | 689 | -0.1 |
| 14 செய்யப்பட்ட Stress பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1723 | 1538 | 12.0 |
| 15.மொத்தப் பிறப்புக்களின் எண்ணிக்கை | 3602 | 3937 | -8.5 |
| 16. செய்யப்பட்ட ஈ.சீ.ஜீ பரிசோதனைகளின் எண்ணிக்கை | 38858 | 34502 | 12.6 |
| 17.செய்யப்பட்ட EMG பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1363 | 1312 | 3.9 |
| 18. செய்யப்பட்ட X கதிர் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 65946 | 62500 | 5.5 |
| 19.நடந்த CT கற்கைகளின் எண்ணிக்கை | 6116 | 6721 | -9.0 |
| 20.செய்யப்பட்ட மெமோகிரம் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 383 | 430 | -10.9 |
| 21.செய்யப்பட்ட பிசியோதெறப்பி பரிசோதனைகளின் எண்ணிக்கை | 7708 | 3243 | 137.7 |
| 22.செய்யப்பட்ட சனல் சேவைகளின் எண்ணிக்கை | 9363 | 9824 | -4.7 |
| 23. செய்யப்பட்ட கண் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 4157 | 4012 | 3.6 |
| 24.செய்யப்பட்ட போசணை ஆலோசனைகளின் எண்ணிக்கை | 1098 | 1371 | -19.9 |
| 25. செய்யப்பட்ட பேச்சுப் பயிற்சிகளின் எண்ணிக்கை | 886 | 926 | -4.3 |
| 26. செய்யப்பட்ட வைத்தியப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1250 | 3091 | -59.6 |
| 27. செய்யப்பட்ட உளவியல் ஆலோசனைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 1664 | 1204 | 38.2 |
| 28. செய்யப்பட்ட நோய்ப் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 922177 | 899057 | 2.6 |
| 29.செய்யப்பட்ட எணடெஸ்கொபி பரிசோதனைகளின் எண்ணிக்கை | 4632 | 4412 | 5.0 |
| 30.சேகரிக்கப்பட்ட இரத்த மாதிரிகளின் எண்ணிக்கை | 4877 | 4414 | 10.5 |
| 31.மொத்த இறப்புக்களின் எண்ணிக்கை | 740 | 689 | 7.4 |

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனையில் 2015 ஆம் ஆண்டில் பெரும்பாலான பிரிவுகளில் சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது சிறப்பான அதிகரிப்பு ஒன்றைக் காட்டுகின்றது..

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை மூலம் 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வதிவிட நோய் சிகிச்சைச் சேவைகளின் ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய சாராம்சம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| பிரிவு | அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் | | அதிகரிப்பு/ குறைவு (%) | படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | | அதிகரிப்பு/ குறைவு (%) |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | | 2014 | 2015 | |
| உடற்கூறு மருத்துவப் பிரிவு | 16187 | 16557 | 2.29 | 105.60 | 103.6 | -1.89 |
| அறுவைச் சிகிச்சைப் பிரிவு | 7651 | 7712 | 0.80 | 51.90 | 56.78 | 9.4 |
| பெண்நோய், மகப்பேறு பிரிவு | 8214 | 7769 | -5.42 | 83.75 | 79.44 | -5.15 |
| சிறுவர் நோய் சிகிச்சைப் பிரிவு | 2581 | 2823 | 9.38 | 56.23 | 53.66 | -4.57 |
| தொண்டை, காது, மூக்கு சிகிச்சை (ENT) பிரிவு | 1201 | 1316 | 9.58 | 29.09 | 30.98 | 6.5 |
| எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு | 1824 | 2040 | 11.84 | 47.84 | 48.93 | 2.28 |
| கண் நோய் பிரிவு | 1540 | 1445 | -6.17 | 41.36 | 38.55 | -6.79 |
| இருதய நோய் பிரிவு | 2172 | 2234 | 2.85 | 64.52 | 63.5 | -1.58 |
| இருதய அறுவைச் சிகிச்சை பிரிவு | 829 | 823 | -0.72 | 69.92 | 64.54 | -7.69 |
| தோல் நோய் பிரிவு | 33 | 22 | -33.33 | 10.02 | 4.52 | -54.89 |
| பிறந்த புதிய குழந்தைகளுக்கான தீவிர கண்காணிப்புப் பிரிவு | 930 | 886 | -4.73 | 75.10 | 61.96 | -17.50 |
| நரம்பியல் நோய்ப் பிரிவு | 311 | 412 | 32.48 | 30.52 | 34.86 | 14.22 |
| நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவு | 863 | 904 | 4.75 | 39.99 | 44.97 | 12.45 |
| சிறுநீரக மற்றும் குருதி சுத்திகரித்தல் பிரிவு | 6203 | 6410 | 3.34 | 71.54 | 74.81 | 4.57 |
| பொது தீவிர சிகிச்சைப் பிரிவு | 841 | 695 | -17.36 | 90.51 | 92.3 | 1.98 |
| இருதய தீவிர அறுவைச் சிகிச்சைப் பிரிவு | 483 | 521 | 7.87 | 72.13 | 80.29 | 11.31 |
| கொடுப்பனவு வாட்டு தரம் - I | 1892 | 1805 | -4.60 | 102.65 | 101.81 | -0.82 |
| கொடுப்பனவு வாட்டு தரம் - II | 4877 | 5287 | 8.41 | 53.21 | 55.34 | 4.00 |

2015 ஆம் ஆண்டிற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையின் சுருக்கமான நிதிச் செயலாற்றுகை கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | நிதி (ரூபா. '000) | | அதிகரிப்பு / குறைவு | |
|---|---|---|---|---|
| | 2014 | 2015 | பெறுமதி (ரூபா. '000) | விகிதம் (%) |
| நடவடிக்கைகளுக்காகக் கிடைத்த வருமானம் | 1,316,437 | 1,493,892 | 177,455 | 13.48 |
| அரச ஒதுக்கீடு - மீண்டெழும் செலவு | 1,700,000 | 920,086 | -779,914 | -45.88 |
| வேறு வருமானம் | 34,271 | 40,089 | 5,818 | 16.98 |
| வேறு நடவடிக்கை வருமானம் (வட்டி) | 5,470 | 7,163 | 1,693 | 30.95 |
| மூலதன மானியம் கிரமமாகக் குறைப்பு | 156,602 | 174,691 | 18,089 | 11.55 |
| **முழு வருமானம்** | 3,056,178 | 2,461,230 | -594,948 | -19.47 |
| | | | | |
| வழங்கல் பொருட்களுக்கான செலவு | 727,714 | 867,508 | 139,794 | 19.21 |
| சம்பளம் மற்றும் வேதனச் செலவு | 1.273.118 | 1,572,238 | 299,120 | 23.50 |
| பெறுமானத் தேய்வுகளும் பதிலீடுகளும் | 156,602 | 174,691 | 18,089 | 11.55 |
| வேறு நடைமுறைச் செலவு | 326,724 | 361,807 | 35,083 | 10.74 |
| **முழுச் செலவு** | 2,484,158 | 2,976,244 | 492,086 | 19.81 |
| | | | | |
| நடவடிக்கைகளினால் கிடைத்த இலாபம் / நட்டம் | 728,623 | (340,000) | -1,068,623 | -146.66 |
| நிதிச் செலவு | 4,990 | 6,462 | 1,472 | 29.50 |
| வேறு செலவு | - | 2,330 | 2,330 | |
| வரி செலுத்த முன் இலாபம் / நட்டம் | 723,632 | (349,115) | -1,072,747 | -148.24 |
| வருமான வரி | 3,018 | 3,503 | 485 | 16.07 |
| **வரி செலுத்தியதன் பின் இலாபம் / நட்டம்** | 720,613 | 352,618 | -367,995 | -51.07 |
| | | | | |

2015 ஆம் ஆண்டில் மருத்துவமனையில் நடாத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் கீழ்க்காணும் செயற்றிட்டங்களைப் பிரதானமாகக் குறிப்பிடலாம்.

1. கணினி மயப்படுத்தப்பட்ட பட்டியல் தயாரிக்கும் தொகுதியினை நிர்மாணித்தல்.
2. மருத்துவமனை கணினி வலையமைப்பு நிர்மாணித்தல்.
3. வாட்டுகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்
4. வெற்றிடமான பதவிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் புதிய பதவிகளை உருவாக்குதல்.
5. பாலியல் நோய்களுக்காக அறுவைச் சிகிச்சைச் சேவையினை வழங்குதல்.
6. நோயாளிகளுக்கும் பிரமுகர்களுக்குமான வாகனத் தரிப்பிட வசதி ஏற்படுத்தப்பட்டது.
7. தாதிகளின் உத்தியோக பூர்வ இல்ல நிர்மாணச் செயற்றிட்டவேலை ஆரம்பிக்கப்பட்டது.
8. மீண்டும் அவசர சிகிச்சைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.
9. ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் இணையத்தளம் ஸ்தாபிக்கப்பட்டது
10. இருதய மார்பு சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது
11. இதயத்திலிருந்து இதயத்திற்கு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது.
12. CT ஸ்கனர் இயந்திரம் ஒன்று அமைக்கப்பட்டது.
13. " மித்துர பியச " ஆலோசனை நிலையத்தினை திறந்து வைக்கப்பட்டது.
14. வைத்தியசாலையினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தில் பொதுவான அதிகரிப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.
15. நோயாளிகளினதும் பணிக்குழுவினரினதும் நலன் புரிச் செயற்பாடு அதிகரிக்கப்பட்டது.

# 3.2 முழுச் செயற்றிறன்

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தவணை 1 | தவணை 2 | தவணை 3 | தவணை 4 |
| மருத்துவமனைப் படுக்கைகளின் எண்ணிக்கை | 1047 | 1088 | 1078 | 1079 | 1076 | 1080 | 1080 | 1078 | 1076 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 52554 | 57119 | 54283 | 53424 | 55143 | 12861 | 13784 | 14029 | 14469 |
| வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற எண்ணிக்கை | 16434 | 16533 | 18843 | 18733 | 21377 | 4734 | 5520 | 5455 | 5668 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 147289 | 147757 | 151156 | 158174 | 158451 | 38923 | 38140 | 40353 | 41035 |
| நடாத்தப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 13173 | 13613 | 13630 | 13683 | 14049 | 3419 | 3351 | 3628 | 3651 |
| படுக்கைகள் உபயோகப்படுத்தும் விகிதாசாரம் (%) | 66.80 | 70.47 | 64.07 | 64.1 | 63.04 | 61.04 | 61.04 | 64.43 | 66 |
| மருத்துவமனை வருமானம் (ரூபா. மில்லியன்) | 1693 | 1857 | 2157 | 3056 | 2461 | 611 | 615 | 618 | 617 |
| சிசு மரண எண்ணிக்கை | 12 | 27 | 21 | 14 | 11 | 3 | 1 | 3 | 3 |
| மொத்த மரண எண்ணிக்கை | 707 | 748 | 714 | 689 | 740 | 197 | 172 | 183 | 188 |

## காலாண்டு செயற்றிறன்-2015







## ஐந்து வருட பொழிப்பு






# 3.3 துறைசார் மீள்நோக்கு

## I. பொது மருத்துவப் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் பொது மருத்துவ பிரிவு சகல நவீன நோயாளிகளுக்கான கவனிப்பு வசதிகளுடன் கூடிய 3 காவறைகளைக் (காவறை இலக்கம் 6, 12, 17) கொண்டுள்ளது. பொது மருத்துவ பிரிவின் மூலம் வெளிநோயாளர் சிகிச்சை மேற்கொள்ளப்படுவதோடு, நீரிழிவு உட்பட ஏனைய சுரப்பி வகையில் உள்ளாரசுரக்கும் நோய் சார்ந்த நிலைமைகளுக்கு விசேட கிளினிக்குகளும் நடாத்தப்படுகின்றன. இலங்கையில் உயர் அத்துடன் அதிகரித்து வரும் காசநோய் சம்பந்தமான விசேட கிளினிக்கு மூலம் காசநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது. பல மருத்துவ குழுக்கள் பல்வேறுபட்ட அவசர மற்றும் நாளாந்த மருத்துவ சிகிச்சை சேவைகளில் ஈடுபடுவதோடு, மிகச் சிறந்த சேவையொன்று வழங்குவதற்கு ஏனைய விசேட பிரிவுடன் நெருங்கிய உறவை பேணி பணியாற்றுகின்றன.



மார்புசளி சார்ந்த பல்வேறு நோய்களை நிர்ணயிப்பதற்கும் அதற்கு சிகிச்சை அளிப்பதற்கும் நவீன Fiber-Optic bronchoscopy வசதிகள் பொது மருத்துவ பிரிவினால் வழங்கப்படுகின்றது. இரப்பை நோய் சம்பந்தமான சிகிச்சையளிப்புக்காக endoscopic வசதிகளையும் பொது மருத்துவ பிரிவு கொண்டுள்ளது பொது மருத்துவப் பிரிவில் , 2015 ஆம் ஆண்டின் படுக்கைகளின் பாவனை விகிதம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உயர்ந்த மட்டத்தில் பேணப்பட்டுள்ளது

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தவணை 1 | தவணை 2 | தவணை 3 | தவணை 4 |
| நடாத்தப்பட்ட கிளினிக்குகள் | 344 | 395 | 291 | 293 | 292 | 72 | 72 | 74 | 74 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 36863 | 39638 | 38508 | 35965 | 34076 | 8460 | 8254 | 8800 | 8562 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 16986 | 19714 | 16496 | 16187 | 16557 | 3832 | 4189 | 4022 | 4514 |
| படுக்கைகள் உபயோகப்படுத்திய விகிதாசாரம் (%) | 115.87 | 126.13 | 105.81 | 105.59 | 103.6 | 102.56 | 101.87 | 98.54 | 102.56 |

ஐந்து வருட பொழிப்பு




காலாண்டு செயற்றிறன்-2015



# II. சத்திரசிகிச்சை மருத்துவப் பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் அறுவைச் சிகிச்சை பிரிவு சாதாரண 3 காவறைகள் (காவறை இலக்கம் 8,14,15) உட்பட கட்டணம் செலுத்தும் காவறைகள் ஆகியவற்றைக் கொண்டு நோயாளிகளுக்கான கவனிப்புச் சேவையை வழங்குகின்றது. அறுவைச் சிகிச்சை பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சை கிளினிக்குகள் மூலம் அறுவைச் சிகிச்சைக்கு முன்னரான அத்துடன் பின்னரான சேவைகள் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை நவீன வசதிகளுடன் கூடிய சத்திரசிகிச்சைகூட வசதிகளுடன் சிக்கலான அறுவைச் சிகிச்சை நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்ட நவீன அறுவைச் சிகிச்சை தீவிர கண்காணிப்புப் பிரிவையும் கொண்டுள்ளது. உடலுக்குள் சிறிய கமெராவை செலுத்தி மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட குணமடையாத நோய்களுக்கான பரிசோதனை, நோயாளிகளுக்கான கவனிப்பு சேவை போட்டிகரமான விலைகளின் கீழ் அறுவைச் சிகிச்சை பிரிவினால் வழங்கப்படுகின்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மூலம் மேற்கொள்ளப்படும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் மிக குறுகிய காலப்பகுதிக்குள் வெற்றிகண்டுள்ளன.



.இலங்கையில் தற்போதைய நோய் நிலை தொடர்பிலான போக்கை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனையின் ஊடாக மார்பாகம் சார்ந்த நோய் நிலைமைகளுக் காகவும் பல்வேறுசிகிச்சை சேவைகள் வழங்கப்படுகின்றன. மார்பக புற்றுநோய் பரிசோதனை களும் மார்பக மீள் சீராக்கல் அறுவை சிகிச்சையம்கூட ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனையில் மேற்கொள்ளப்படுகின் றது. நோயாளிகளின் வசதி கருதி அறுவைச் சிகிச்சை பிரிவின் மூலம் ஒருநாள் அறுவைச் ஒருநாள் அறுவைச் சிகிச்சை சேவையும் வழங்கப் படுகின்றது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும்

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தவணை 1 | தவணை2 | தவணை 3 | தவணை 4 |
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 444 | 450 | 381 | 391 | 392 | 98 | 94 | 99 | 101 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 13001 | 13164 | 11716 | 11640 | 13263 | 3233 | 3145 | 3401 | 3484 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 6763 | 7115 | 6927 | 7651 | 7712 | 1935 | 1945 | 2046 | 1786 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சை | 3713 | 3923 | 3495 | 3174 | 3327 | 788 | 791 | 818 | 930 |
| படுக்கைகளின் பயன்படுத்துகை விகிதாசாரம் (%) | 47.93 | 54.84 | 47.88 | 51.9 | 56.77 | 52.63 | 54.58 | 58.58 | 61.28 |

ஐந்து வருட பொழிப்பு






# III. பெண் நோய்,மகப் பேறு பிரிவு

சாதாரண கர்ப்பிணி தாய்மார்களிலிருந்து உட்சிக்கல் வாய்ந்த அத்துடன் அவதானம் மிக்க கர்ப்ப நிலைமைகள் வரை கவனிப்பு சேவைகள் பெண்நோய், மகப்பேறு பிரிவினால் வழங்கப்படுகின்றது. வலி தடுப்பு ஊசி, வலி தடுப்பு காஸ் ((Entonox gas) மற்றும் இடுப்புப் பகுதிக்கு வழங்கு வலி தடுப்பு ஊசி பயன்படுத்தி மிக சௌகரியமான மகப்பேறு உறுதிப்படுத்தப்படுகின்றது கரு வளர்ச்சி மற்றும் மாற்றங்களை கண்டறிதல் என்பனவற்றிற்காக செய்யப்படும் ஸ்கான் பரிசோதனைக்கு அதிநவீன தொழினுட்பம் பயன்படுத்தப்படுகின்றது



புற்றுநோய் மற்றும் புற்றுநோயல்லாத நிலைமைகள் அத்துடன் Urogynecological அறுவை சிகிச்சை, பல்வேறுபட்ட நோய் நிர்ணயம், Therapeutic அறுவைச் சிகிச்சை நடவடிக்கைமுறை மற்றும் பெண்நோய் அல்ட்றாசவுட் ஸ்கான் பரிசோதனை உட்பட பல அவசர மற்றும் அவசரமில்லாத பெண்நோய் கவனிப்பு சேவைகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.ஆரம்ப பரிசோதனையிலிருந்து தேவையான சிகிச்சை வரையிலான உயர் தரத்தி லான கருவளத்துக்கான சிகிச்சையும் குடும்பக் கட்டுப்பாட்டு சேவையும் இந்த பெண்நோய், மகப்பேறு பிரிவினால் வழங்கப்படுகின்றது. கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை சென்ற வருடத்தை விட 2015 ஆம்

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தவணை 1 | தவணை 2 | தவணை 3 | தவணை 4 |
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 294 | 335 | 327 | 296 | 338 | 83 | 83 | 87 | 85 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 25421 | 23901 | 26464 | 28007 | 25314 | 6835 | 6146 | 6021 | 6312 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 7871 | 8706 | 8659 | 8214 | 7769 | 1892 | 1929 | 1971 | 1887 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 83.25 | 93.42 | 88.48 | 83.75 | 79.44 | 80.89 | 78.46 | 83.33 | 75.06 |
| பிறப்புக்களின் எண்ணிக்கை | 3877 | 4156 | 4016 | 3937 | 3602 | 906 | 918 | 902 | 876 |
| Gyn சத்திர சிகிச்சை | 1235 | 1444 | 1416 | 1256 | 1291 | 347 | 256 | 341 | 347 |
| Obs சத்திர சிகிச்சை | 2078 | 2276 | 2198 | 2118 | 1767 | 444 | 475 | 463 | 485 |
| சிசேரியன் அறுவைச்சிகிச்சை | 2077 | 2285 | 2180 | 2070 | 1863 | 437 | 478 | 465 | 483 |

ஐந்து வருட பொழிப்பு




காலாண்டு செயற்றிறன்-2015



# IV. சிறுவர் நோய் சிகிச்சை பிரிவு

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் சிறுவர்நோய் சிகிச்சைப் பிரிவு நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தைகளுக்கு உள்ளக மற்று வெளிநோயாளர் பிரிவு மூலம் சேவையை வழங்குகின்றது. சகல விதத்திலுமான அவசர மருத்துவ சிகிச்சை வழங்கும் வசதிகளுடனும் 47 படுக்கைகளையும் கொண்ட சிறுவர் காவறையின் மூலம் நோய்வாய்ப்பட்டுள்ள குழந்தைகளுக்கு தங்கி சிகிச்சை பெறுவதற்கான சேவையை வழங்குகின்றது.



சிறுவர் கிளினிக், ஆரோக்கியமான குழந்தைகளுக்கான கிளினிக், தடுப்பூசி வழங்கும் கிளினிக், சிறுவர் காசநோய் கிளினிக் போன்றவை இந்த பிரிவினால் வாராந்தம் நடாத்தப்படுவதோடு, இதில் அர்ப்பணிப்புமிக்க அனுபவம் வாய்ந்த மருத்துவ பதவியணி மூலம் ஆகக்கூடுதலான கவனிப்பு சேவை வழங்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை சென்ற வருடத்தை விட கூடிய பெறுமதியைக் காட்டுகிறது.

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தவணை 1 | தவணை2 | தவணை 3 | தவணை4 |
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 337 | 346 | 332 | 341 | 345 | 85 | 85 | 86 | 89 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 7300 | 6249 | 6594 | 7137 | 6188 | 1475 | 1478 | 1571 | 1664 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 3284 | 3796 | 3091 | 2581 | 2823 | 521 | 925 | 719 | 658 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 70.20 | 81.28 | 63.52 | 56.23 | 53.66 | 42.41 | 67.46 | 55.44 | 49.33 |

ஐந்து வருட பொழிப்பு




காலாண்டு செயற்றிறன்-2015



# V. தொண்டை,காது,மூக்கு சிகிச்சைப் பிரிவு (ENT)

மிக அனுபவம்வாய்ந்த, வினைத்திறன்மிக்க பதவியணி மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை தொண்டை,காது, மூக்கு பிரிவு உள்ளக மற்று வெளிநோயாளர் சேவைகளை வழங்குகின்றது. 60 படுக்கைகளைக் கொண்ட காவறை மூலம் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கான சேவை வழங்கப்படுவதோடு, நவீன தொழினுட்ப கருவிகளைக் கொண்ட கிளினிக் மூலம் வெளிநோயாளர் கவனிப்புச் சேவையும் வழங்கப்படுகின்றது.

தொண்டை, காது, மூக்கு பிரிவின் கீழ் பேச்சு மற்றும் செவிப்புல பிரிவு வேறாக தாபிக்கப்பட்டுள்ளது. இந்த பிரிவின் மூலம் செவிப்புல பரிசோதனையும் பேச்சு சிகிச்சை கிளினிக்கும் நடாத்தப்பட்டு வருகின்றது. தலை மற்றும் கழுத்து சார்ந்த பிரதான அறுவைச் சிகிச்சையும் சிறு கமெரா உதவியுடன் மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சை அடங்கலாக பாரிய அளவிலான அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.



செவிப்புலம் சார்ந்த பல்வேறுபட்ட பரிசோதனைகளை (Pure tone audiometry, tympanometry, brainstem evoke response assessments) மேற்கொள் வதற்கு தேவையான சகல வசதி களும் செவிப்புல பரிசோதனை கூடத்தில் உள்ளதோடு, Fiber-optic laryngoscopy மற்றும் naso-endoscopic பரிசோதனை செய்யக்கூடிய வசதிகளையும் இந்த பிரிவு கொண்டுள்ளது.

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தவணை 1 | தவணை 2 | தவணை 3 | தவணை 4 |
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 98 | 98 | 101 | 94 | 95 | 22 | 24 | 25 | 24 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 6382 | 6077 | 6504 | 6271 | 6321 | 1461 | 1512 | 1689 | 1659 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1314 | 1378 | 1331 | 1201 | 1316 | 297 | 313 | 372 | 334 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 29.70 | 32.57 | 31.91 | 29.09 | 30.98 | 27.64 | 28.47 | 35.89 | 31.94 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 543 | 539 | 493 | 451 | 483 | 138 | 113 | 105 | 127 |

ஐந்து வருட பொழிப்பு






# VI. எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு

சிறந்த முறையில் தாபிக்கப்பட்டதும் அங்கீகாரம் பெற்றதுமான எலும்புமுறிவு சிகிச்சை பிரிவொன்று ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை கொண்டுள்ளது. சகல விதத்திலுமான எலும்புமுறிவு அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் நவீன கருவிகள் இந்த பிரிவிடம் உள்ளது. மருத்துவ பட்டப்பின் படிப்பு அபேட்சகர்களுக்கிடையில் இந்த பிரிவு மிகப் பிரபல்யமானது. முள்ளந்தண்டு சார்ந்த அறுவை சிகிச்சை (Scoliosis Cirrection Surgeries and other Specialised Spinal Surgeries) மேற்கொள்ளும் போது இந்தப் பிரிவு மிக உயர்வான வெற்றியை கண்டுள்ளது. இது இலங்கையில் சிறுவர் எலும்புமுறிவு சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் முன்னுரிமை பெற்ற மத்திய நிலையமொன்றாகும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவ மனையின் எலும்புமுறிவு சிகிச்சைப் பிரிவு இடுப்பு, முழங்கால், தோள், முழங்கை போன்ற மூட்டு இணைப்பு அறுவைச் சிகிச்சைகளை செய்யும் முன்னோடியான விசேட பிரிவொன் றாகும். நீண்டகாலமான வழங்கும் இந்த சேவைகள் மிகுந்த உயர் வெற்றியை கொண்டுள்ளது. நோய் நிர்ணய மற்றும் athroscopy பரிசோத னையும் எலும்புமுறிவு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின் றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையின் எலும்புமுறிவு சிகிச்சை பிரிவு தொழில்சார் விளையாட்டு வீரர்களின் காயங் களுக்கு சிகிச்சை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு மருத்துவ நிலையமொன்றுமாகும்.



எலும்புமுறிவு சிகிச்சை பிரிவின் மூலம் நடாத்தப்பட்ட கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது.

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தவணை 1 | தவணை 2 | தவணை 3 | தவணை 4 |
| நடாத்தப்பட்ட கிளினிக்குகளின் எண்ணிக்கை | 99 | 102 | 96 | 95 | 99 | 24 | 24 | 25 | 26 |
| கிளினிக்குகளில் கலந்து கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 8721 | 7639 | 7964 | 8145 | 8751 | 2044 | 2101 | 2300 | 2306 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை | 1984 | 2107 | 2174 | 1824 | 2040 | 467 | 491 | 563 | 519 |
| படுக்கைகள் பயன்படுத்தப்பட்ட விகிதாசாரம் (%) | 66.60 | 59.31 | 59.70 | 47.84 | 48.93 | 44.96 | 47.28 | 53.6 | 49.86 |
| மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை எண்ணிக்கை | 1966 | 1624 | 1798 | 1366 | 1501 | 362 | 406 | 401 | 332 |

ஐந்து வருட பொழிப்பு






# VII. கண் நோய்ப் பிரிவு

பெரும்பாலான கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு முழுமையான கவனிப்பு சேவைகளை வழங்கும் நல் அங்கீகாரம்பெற்று கண்நோய் பிரிவொன்றை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை கொண்டுள்ளது. அதிநவீன நோய் நிர்ணய மற்றும் சிகிச்சை வசதிகளைக் கொண்ட கண் கிளினிக் வாரத்துக்கு ஐந்து நாட்கள் நடாத்தப்படுகின்றது. பொது கண் பரிசோதனை, கண்பார்வை குறைபாட்டுக்கான சிகிச்சையளித்தல், நீரிழிவு நோயினால் உருவான கண் குறைபாடுகளுக்கு சிகிச்சையளித்தல் என்பன கண்நோய் கிளினிக்கில் மேற்கொள்ளப்படுகின்றன. கண் சத்திரசிகிச்சை கூடம் நவீன நோய் நிர்ணய மற்றும் சிகிச்சை வசதிகளுடன் அரசாங்கத்துக்குச் சொந்தமான தரம்வாய்ந்த சத்திர சிகிச்சை கூடமாகும்.



(ஆ) பொதுவான கடமை நேரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சத்திரசிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காக தொழிற்கட்டணம் அறவிடமுடியாதிருந்த போதிலும் 14 வைத்தியர்களினால் 2015 சனவரி முதல் திசெம்பர் வரை பொதுவான கடமை நேரங்களில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காக ரூபா 1,917,075 தொழிற் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வைத்திய நிபுணத்துவ உத்தியோகத்தர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் உதவிய பதவியணியினர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழிற்கட்டணத்தின் அடிப்படையில் உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வைத்தியசாலை முகாமைத்துவத்தால் தொழிற்கட்டணத்தின் அடிப்படையில் உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது அவ்வாறு அறவிடப்படாதிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட உழைக்கும் போதே செலுத்தும் வரியின் பெறுமதி முறையே ரூபா 35,367,508 மற்றும் ரூபா 39,377,486 ஆக இருந்தன.

## 4.4 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஏப்ரல் முதல் 2016 மார்ச் வரையான காலத்தில் வைத்தியசாலை பூங்காவைப் பராமரித்தல் மற்றும் அழகுபடுத்தும் செயற்பாடுகளைக் மேற்கொள்வதற்கான கொள்வனவுகளின் போது கிடைத்த ஆகக் குறைந்த மூன்று கேள்விகள் நிராகரிக்கப்பட்டு மாதமொன்றிற்கு ரூபா 588,800 தொகையான நான்காவது ஆகக் குறைந்த கேள்வி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் முன்னைய ஆண்டின் போதும் இந்த செயற்பாட்டின் ஒப்பந்தக்காராக இருந்த போதிலும், உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய ஊழியர் எண்ணிக்கையில் 18 சதவீதமும், பரிசோதனையாளர் எண்ணிக்கையில் 5 சதவீதமும் குறைவாக சேவையில் ஈடுபடுத்தியிருந்தமை இந்த கொள்வனவின் போது கவனத்தில்

கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் ஏப்ரல் 01 முதல் திசெம்பர் 31 வரையான காலத்தின் போது ஈடுபடுத்தப்பட்ட மொத்த ஊழியர் எண்ணிக்கை 2,994 ஆக இருந்ததுடன் அது இருக்க வேண்டிய ஊழியர் எண்ணிக்கையில் 27.4 சதவீத குறைவான எண்ணிக்கையாகும்.

(ஆ) மருந்தின் பெயருக்குப் பதிலாக வியாபாரப் பெயரில் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின்போது 8 வகையான மருந்துகளில் 23,534 அலகுகள் வியாபாரப் பெயரில் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டிருந்த மேலதிக கிரயம் ரூபா 2,897,050 ஆக இருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) வைத்தியசாலையில் வாகனத் தரிப்பிடத்தை விரிவுபடுத்தும் செயற்பாட்டிற்காக ரூபா 11,209,829 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் 112 நாட்களில் பூர்த்தி செய்யும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2012 செப்தெம்பர் 05 ஆந் திகதி ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2013 சனவரி 09 ஆந் திகதியளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வரையிலும் அந்த வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. வாகனத் தரிப்பிடத்தை நிரப்புவதற்காக பயன்படுத்தப்பட்ட மண் மாதிரியின் தரம் மற்றும் மண் அடர்த்தி நிலை தொடர்பான பரிசோதனைகளில் தோல்வியடைந்திருந்ததுடன் Expansion Loints இல் தார் மற்றும் மணல் கலவை இட்டு மூடப்பட்டிருக்கவில்லை. ஒட்டுமொத்த தாமதக் காலம் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகையால் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 1,120,982 ஆக இருந்ததுடன் ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 995,454 தொகையான 3 ஆவது இடைக்கால பட்டியல்களுக்கு பணம் செலுத்தாமல் தாமதக் கட்டணத்தை ஈடு செய்வதற்கு மதியுரையாயாளர் சிபாரிசு செய்திருந்த போதிலும், 01 வருடம் 06 மாதங்களுக்கு பின்னர் அந்த இடைக்கால பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. காலம் முடிவடைவதற்கு முன்னர் செயலாற்றல் பிணைமுறியை பணமாக்குவதற்கு வைத்தியசாலை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அது 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி காலாவதியாகியிருந்துது.

(ஈ) வைத்தியசாலைக்கு கணனி மென்பொருள் முறைமையொன்றைத் தாபிக்கும் செயற்பாடு 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 24,953,859 ஒப்பந்தப் பெறுமதியில் தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காலம் 26 வாரங்களாகவும், மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்தின் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல் முறையே 65 சதவீதம் மற்றும் 26 சதவீத அளவாகும் வரையில், 2014 ஆம் ஆண்டின் போது வேலை

கைவிடப்பட்டிருந்தது. அதன் எஞ்சிய வேலைகள் ரூபா 8,250,000 ஒப்பந்தப் பெறுமதியில் 06 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு வேறொரு ஒப்பந்தக் கம்பனிக்கு 2014 திசெம்பர் மாதத்தின் போது கையளிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், முதலாவது ஒப்பந்தத்தின் செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்ட முதலாவது ஒப்பந்தக் கம்பனியின் பங்காளர் நிறுவனமான புதிய கம்பனியினால் இந்த மென்பொருள் முறைமை தாபித்தல் செயற்பாடுகளில் 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று தொடர்ச்சியாக இருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வரையிலும் அதனைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. இரண்டாவது ஒப்பந்தத்தின் தாமதக் காலம் வருடமொன்றிற்கு மேற்பட்டிருந்ததுடன் பௌதீக செயலாற்றல் 90 சதவீதமாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்யும் நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிராததுடன், செயலாற்றல் பிணை முறியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4(i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட எல்லையினை விஞ்சி ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதமான ரூபா 4,140,000 வேலை ஆரம்பிப்பு முற்பண பிணை முறியொன்றைப் பெற்றுக் கொள்ளாது வழங்கப்பட்டிருந்தது.

(உ) வைத்தியசாலையில் புதிய இருதய சத்திரசிகிச்சை (Cordilogy Building) கட்டிடத்தின் வெளிச்சுவரில் நீர்க்கசிவினைத்தடுக்கும் செயற்பாடு கையளிக்கப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து 3 வருட உத்தரவாதச் சான்றிதழ் பெறப்பட வேண்டியமை நிபந்தனையில் காணப்பட்ட போதிலும் உத்தரவாத சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படாது மீளாய்வாண்டின் போது ரூபா 263,812 மாத்திரம் நிறுத்தி வைக்கப்பட்டு மொத்த ஒப்பந்தப் பெறுமதியிலும் எஞ்சிய தொகையான ரூபா 2,374,312 ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

வைத்தியசாலையில் பல்வேறு பிரிவுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் பாவனைக்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்ட உபகரணங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பிரிவு | சொத்து வகை | அளவு | பாவனைக்கு எடுக்க முடியாது காணப்பட்ட காலம் வருடம் |
|---|---|---|---|
| ஆய்வுகூடம் | ஆய்வுகூட உபகரணம் | 55 வகைகளில் 72 அலகுகள் | 2 முதல் 25 வரை |
| சுகாதார கற்கைகள் பிரிவு | உபகரணங்கள் | 4 வகைகளில் 4 அலகுகள் | 13 இற்கு மேல் |
| இரத்த வங்கி | உபகரணங்கள் | 2 அலகுகள் | 1 இற்கு மேல் |
| வாட்டு இல 02 | உபகரணங்கள் | 2 அலகுகள் | 1 இற்கு மேல் |
| வைத்திய அறிக்கைப் பிரிவு | உபகரணங்கள் | 2 வகைகளில் 6 அலகுகள் | 2 இற்கு மேல் |

மேற்கூறப்பட்ட பாவனைக்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்ட உபகரணங்களை முறையாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சுகாதாரக் கற்கைப் பிரிவில் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்ற பொருட்களில் 3 அலகுகளும் 7 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து செயற்படு நிலையில் இனங்கண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 பிரதான களஞ்சியங்களிலும், உப களஞ்சியங்களிலும் காணப்பட்ட காலாவதியான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை பொருள் இருப்புக்களின் மொத்த கிரயம் ரூபா 5,415,699 ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| காலாவதியான ஆண்டு | காலாவதியான மருந்துகளின் கிரயம் |
|---|---|
| | ரூபா |
| மீளாய்வாண்டு | 866,713 |
| 01 வருட முதல் 3 வருடங்களுக்கு இடையே | 268,170 |
| 03 வருடங்களுக்கு மேல் | 162,716 |
| முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தல் தொடர்பாக ஆய்வின் பின்னர் சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படாமையினால் நரம்பியல் சத்திர சிகிச்சை அலகிற்கு கொள்வனவு செய்யப்பட்ட சத்திரசிகிச்சைப் பொருட்கள் | 4,118,100 |
| | 5,415,699 |

காலாவதியான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை பொருள் இருப்புக்கள் முறையானதாக அழித்து புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கும், பொறுப்புவாய்ந்த தரப்பினர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், காலவதியான மருந்து இருப்புக்களின் அளவைக் குறைப்பதற்கும் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினை உள்ளடக்கிய கடந்த 04 வருடங்களின் போது மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 301,443 மொத்தக் கிரயமான 14 மருந்து வகைகளில் 5,553 அலகுகளின் தரம் ஒவ்வாமையாக இருந்த போதிலும் அந்தப் பெறுமதியை மருந்துவ வழங்கல் பிரிவிலிருந்து அறவிடுவதற்கோ அல்லது அதற்குப் பதிலாக நல்ல தரத்திலுள்ள மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ශ්‍රී ලංකා විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் போது வைத்தியசாலையின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் கணக்காளர் போன்ற பிரதான பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு நேரடியாக முன்னின்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாக கட்டளை இடப்பட்டிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வரையிலும் அந்தப் பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆகஸ்ட் 10 இல் உள்ளவாறு எழுதுவினைஞர் / முகாமைத்துவ உதவியாளர் பதவியின் வெற்றிட எண்ணிக்கை 09 ஆக இருந்த போதிலும், நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் முறையே 9 பேரும் 8 பேரும் ஆக மொத்தமாக 17 பேர் வாட்டு எழுதுவினைஞர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்றியும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 8 உத்தியோகத்தர்களுக்கு 2015 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையான காலத்தில் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் மேலதிக நேரப்படிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,771,766 ஆகும்.

(இ) வைத்தியசாலை பதவியணியினரின் சம்பள அதிகரிப்பை அங்கீகரித்துக் கொள்வதற்கு முன்னர், சித்திபெறவேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எத்தகையது மற்றும் அதில் சித்தி பெறப்பட்டதா என கவனத்தில் கொள்ளப்படாதிருந்ததுடன் சம்பள ஏற்ற படிவங்களில் அது தொடர்பில் குறிப்பிடும் தேவைகளும் இனங்காணப்பட்டிருக்கவிலலை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்ணைந்த திட்டம்

2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் வரையான காலத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் 2015 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு பணிகளுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த இலக்குகள் மற்றும் நோக்கங்களைக் கைப்பற்றும் செயல்முன்னேற்றத்தைப் போன்றே பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அதற்காக செலவிடப்பட்ட தொகையினை இனங்காணக்கூடிய வகையில் காலாண்டு ரீதியாக செயல்முன்னேற்ற அறிக்கை தயாரித்து அவற்றின் பிரதிகள் உரிய அமைச்சிற்கும், பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 230 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் 3 நிர்மாண செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது அமுல்படுத்தப்பட்டிருந்த வைத்தியர்களுக்கான சிற்றுண்டிச்சாலையைத் தாபித்தல், இருதய நோயாளிகளுக்காக உயர் தரத்தினையுடைய ஆய்வுகூடமொன்றை நிர்மாணித்தல், புதிய நிதி மற்றும் நிர்வாகக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் போன்ற பணிகள் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மத்திய காற்றுச்சீராக்கல் முறைமையை மீண்டும் அமைத்தல் மற்றும் மின்சார வழங்கல் முறைமையினை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகள் கூட்டிணைந்த

திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்திற்கு இணைந்ததாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டின் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த 260 பொருள் விடயங்களை இவ்வாண்டின் போது கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ரூபா 95,940,345 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் 27 வைத்திய உபகரண அலகுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் 91 சதவீதம் முதல் 2,902 சதவீதம் வரையிலான வீச்சிலான அதிகரிப்புடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொள்வனவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுக்குரிய செலவினங்களை உள்ளடக்கி வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிராத 6 செலவின விடயங்களுக்காக ரூபா 34,881,433 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,450,000 தொகையான மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 05 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 49 சதவீதம் முதல் 707 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்களும், 08 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 61 சதவீதம் முதல் 245 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்களும் காணப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.5 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

எதிர்வரும் 5 வருடங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் நாளதுவரையாக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பொது முயற்சிகள் குழுவிற்கு ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது வைத்தியசாலைச் சபையின் தலைவருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வரையிலும் அந்தக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது வைத்தியசாலைச் சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | வைத்தியசாலைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட சகல நிலையான சொத்துக்களையும் பௌதீக ரீதியில் இனங்கண்டு பெறுமதியை மதிப்பீடு செய்து பதிவேடுகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இருப்புக் கட்டுப்பாடு | மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை களஞ்சியத்தைப் போல ஏனைய உப களஞ்சியங்களில் இருப்புப் பதிவேடு நாளது வரையாக பேணப்பட்டிருக்காமை. |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்த்தல், பதவியுயர்வு, தரமிடல் மற்றும் சம்பள அளவுத் திட்டம் தொடர்பாக முறையான நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தவதற்கும் அங்கீகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | |
|---|---|
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்தம் தொடர்பாக தொடர்ச்சியான மேற்பார்வை, ஆய்வு மற்றும் கவனத்திற்கு எடுக்கப்படாமை. |
| (உ) கொள்வனவுக் கட்டுப்பாடு | தேவையினை இனங்கண்டு கொள்வனவு மேற்கொள்ளப்படாமை மற்றும் நிபந்தனையின் பிரகாரம் வழங்குனர்களிடமிருந்து சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின்2015 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக் கூற்றுத் தொடர்பான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2) ( சீ ) பிரிவிற்கு இணங்க கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதற்கு உரிய தெளிவுபடுத்தல்கள்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | திருத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் |
|---|---|---|
| 2.2 | நிதிக் கூற்றுத் தொடர்பாக கருத்தினைத் தெரிவித்தல். | |
| 2.2.1 | இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டுத் தரம் 07<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| அ) | வைத்தியசாலைக்கு உரிய 09 வகையினைச் சேர்ந்த சொத்துக்களை மேம்படுத்துவதற்காக செலவு செய்யப்படிருந்த ரூபா 4,258,177/- நிதி மூலதன செலவாக கணக்கு வைக்கப்படாது மீண்டெழும் செலவாக கணக்கு வைக்கப்பட்டிந்தது. | இது தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு அலுவலகர் ஒருவர் நியமிக்கப்படுவதுடன் அதன் மூலம் மூலதனச் செலவு மற்றும் மீண்டெழும் செலவினை இனங்கண்டு சரியாக கணக்கு வைக்க இயலுமாக இருக்கும். |
| (ஆ) | அசையாத சொத்துக்களுக்காக உற்பத்தித்திறன் மிக்க ஆயுட் கா லத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக செலவுகள் ரூபா 1,678,856,148 ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் அடைந்திருந்த போதும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுப்பது காணப்பட்டது. அதற்கு இணங்கியதாக மதிப்பிடப்பட்ட போதுகாணப்பட்ட தவறை இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டுத் தரத்தின் 03 இற்கு இணங்க மீள் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைத்தியசாலையின் சொத்துக்கள் ஆலை மற்றும் உபகரணங்கள் பெருமளவில் காணப்படுகின்றபடியால் மீண்டும் பெறுமதியினைக் கணக்கிடுவது மிகவும் கஷ்டமான விடயமாகும். எனினும் பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடி வெளித்தாபனங்களினது பங்களிப்புடன் இந்தச் சொத்துக்களை மீள் கணக்கிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| 2.2.2 | கணக்கீட்டுக் குறைபாடுகள்<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன | |
| (அ) | கடமையாற்றிக் கொண்டிருக்கும் 21 சேவகர்களுக்காக பணிக் கொடைக்காக ஏற்பாடு ஒதுக்கப்படாமை மற்றும் 2015 டிசம்பர் 31 ஆந் திகதியில் கடமையாற்றிக் கொண்டிருந்த 113 பேருக்காக அதிக ஏற்பாடு ஏற்படுத்தப்படிருந்தன் காரணமாக மீளாய்வு வருடத்தின் பணிக்கொடை ஏற்பாட்டுச் செலவு ரூபா 1,788,516/- இனால் அதிகமாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் கடமையிலிருந்து அகன்ற அலுவலகர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 115,868/- பணிக்கொடை மீண்டும் அறவிடப்பட வேண்டிய நிதியாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.. | 2016 கணக்கினை தயாரிக்கும் போது திருத்தப்படும். இந்த நிதியினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | கடந்த வருடம் கடமையிலிருந்து அகன்ற அலுவலகர் ஒருவருக்கு மீளாய்வு வருடத்தில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 65,383/- பணிக்கொடையானது செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைக் கணக்கிற்கு பற்று வைக்கப்படாது பணிக்கொடைக் கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான தவறுகளை குறைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த தவறை 2016 ஆண்டின் கணக்கினை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | கணிப்பீடு செய்தபோது இடம்பெற்ற வழுவின் காரணமாக நடைமுறையில்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் ரூபா 18,191,156/- குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.. | 2016 கணக்கினை தயாரிக்கும் போது திருத்த நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட தினம்தொடக்கம் மீளாய்வு வருடம் வரை உள்நாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த பல்வேறுபட்ட நடைமுறையில்லாத சொத்துக்களின் உண்மையான பெறுமதியினை கணக்கு வைக்கும் முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு இணங்க மீளாய்வு வருடத்தில் நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த 44 உபகரண அலகுகள் மற்றும் 4493 இன்வென்றி வகைகளின் உண்மையான பெறுமதியினை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைத்தியசாலைக்கு கிடைக்கும் நன்கொடைகளை கணக்கு வைப்பதற்கு ஏற்ற முறையில் புதிய முறை ஒன்றினை தயாரித்து நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | புதிய தாதிகளுக்கான விடுதியின் நிர்மாணத்திற்காக இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,133,975/- ஆலோசனைக் கட்டணம் நடைபெறும் வேலைக் கணக்கிற்கு வரவு வைக்கப்படாது மீண்டெழும் செலவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2016கணக்கினை தயாரிக்கும் போது திருத்த நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (ஊ) | நிதிக் கூற்றினை தயாரிக்கும் இயல்பின் அடிப்படையின் கீழ் கணக்குத் தயாரிக்கப்பட்டுள்ளது என கணக்குக் குறிப்பின் மூலம் காட்டப்பட்டுள்ள போதும் மீளாய்வு வருடத்திற்கு உரிய ரூபா.2,610,060/- ஆவணத் திரட்டுச் செலவுகள் மற்றும் ரூபா 217,056/- இயல்பாகச் சேர்ந்த அடிப்படையின் முன் கொண்டுவரப்பட்ட செலவு கட்டணக் கொடுப்பனவு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | தவறினை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளுகின்றேன். |
| (எ) | கணக்கீட்டின் போது ஏற்பட்ட வழுவினால் மீளாய்வு வருடத்தின் இறுதியில் இருந்தவியாபார இருப்புக்களால் மற்றும் காலாவதியான இருப்புக்களின் செலவுகள் முறையே ரூபா 591,575/- மற்றும் ரூபா 679,322/- குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்தக் களஞ்சியம் இவ்வேளையில் கணினிமயப்படுத்தப்பட்டுள்ள படியால் இவ்வாறான குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதபடி நடவடிக்கை எடுக்கின்றேன். . |
| 2.2.3 | <u>தெளிவுபடுத்தப்படாத வேறுபாடுகள்</u><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன | |
| (அ) | பின்வரும் விடயங்களுக்குரியதாக நிதிக் கூற்று மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த கோப்பு மற்றும் ஆவணங்களுக்கு இணங்க ரூபா 13,211,360/-வேறுபாடு காணப்பட்ட போதும் வேறுபாட்டிற்கு காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை. | |

| விபரம் | கணக்காய்விற்குச் சமர்ப்பித்த கோப்பு / ஆவணங்களுக்கு | நிதிக் கூற்றுக்கு இணங்கபெறுமதி | கோப்பு / ஆவணங்களுக்கு இணங்க பெறுமதி | වෙනස | |
|---|---|---|---|---|---|
| | | | | | நிலையான சொத்து ஏட்டிற்கு ஏனைய ரூபா, 8,387,725.00 உம் கட்டடங்கள் மற்றும் கணினி உதிரிப்பாகங்கள் ரூபா 340,500.00 உம் சேர்க்கப்பட வேண்டும் மிகுதி நிலையான சொத்துக்களில் சில வகைகள் 2016 ஆம் ஆண்டின் நிலையானசொத்து ஏட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. |
| வருடத்தினுள் கொள்வனவுசெய்யப்பட்ட நடைமுறையல்லாதசொத்துக்களின் செலவு | நிலையானசொத்து ஏடு | 300,039,300 | 287,472,439 | 12,566,861 | 2016 கணக்கினை தயாரிக்கும் போது திருத்த நடவடிக்கை எடுப்பேன். |
| ஜனாதிபதி நிதியத்தில் 2015 செப்டெம்பர் 31 ஆந் திகதி அறவிடப்பட வேண்டிய வைத்திய சாலைக் கட்டணம். | வைத்திய சாலைக் கட்டணங்களுக் குரிய கோப்பு | 11,920,902 | 11,620,902 | 300,000 | 2016 கணக்கினை தயாரிக்கும் போது திருத்த நடவடிக்கை எடுப்பேன். |
| காப்புறுதிக் கூட்டித்தாபனங்கள் 8 இல் இருந்து 2015 டிசம்பர் 31 ஆந் திகதிஅறவிடப்படவேண்டிய கூட்டுத்தாபனங்களின் வைத்தியசாலைக் கட்டணங்கள் | காப்புறுதிக் கூட்டுத் தாபனங்களின் வைத்தியசாலைக் கட்டணங்களுக் குரிய ஆவணங்கள் | 10,150,639 | 9,914,766 | 235,873 | 2016 கணக்கினை தயாரிக்கும் போது திருத்த நடவடிக்கை எடுப்பேன். |
| 2015 டிசம்பர் 31 ஆந் திகதியில்10 அலுவலகர்களின் இடர் கடன் | கடன் ஏடுகள் | 1,398,166 | 1,506,792 | 108,626 | |
| | | | | 13,211,360 | |

| | | |
|---|---|---|
| (ஆ) | மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31 ஆந் திகதி வியாபார கடன் பட்டோர் கணக்கின் 06 நிலுவைகளின் மொத்தப் பெறுமதி மற்றும் அதற்காக கிடைக்கப்பெற்ற நிலுவை உறுதிப்படுத்தல் சான்றிதழ்களின் மொத்தப் பெறுமதிகளுக்கிடையேரூபா 7,492,933/-வேறுபாடு ஒன்று காணப்பட்ட போதும் வேறுபாட்டிற்கு உரிய காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை. | 2015.12.31 ஆந் திகதி ரூபா 500,000.00/- விட அதிகமான நிலுவை காணப்படும் எல்லா கடன்பட்டோருக்கும் நிலுவையினை உறுதிப்படுத்தும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்குப் பிரதிபலிப்பினைக் காட்டிய கடன்பட்டோர் நிலுவையினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எங்களது வைத்தியசாலையின் எல்லாக் களஞ்சியங்களும் டிசம்பர் மாதம் இரண்டாம் வாரம் தொடக்கம் இருப்புக் கணக்கெடுப்பு நடவடிக்கைக்காக மூடப்பட்டு இருப்பதே இதற்குக் காரணமாகியபடியால் அக்காலத்தில் கிடைக்கப்பெறும் பொருட்களுக்காக அடுத்த வருட ஜனவரி மாதத்திலேGRN வழங்கப்பட்டதே ஆகும். |

2.2.4 கணக்காய்விற்கு சான்றுகள் இல்லாமை.

பின்வரும் விடயங்களின் முன்னால்சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி (ரூ.) | சமர்ப்பிக்கப்படாத எழுத்து மூலமான சாட்சி |
|---|---|---|---|
| (அ) | கணக்குகளில் அகற்றப்பட்ட நடைமுறையற்றசொத்துக்கள் | 29,287,000 | அகற்றுவதற்காக கணக்களில் இருந்து அகற்றப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் செலவு மற்றும் கூட்டுமொத்த நிலுவைகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு எழுத்து மூலமான சாட்சி. |
| (ஆ) | கணக்குகளில் அகற்றப்பட்ட நடைமுறையற்றசொத்துக்கள் | 2,268,500 | சொத்துக்களை அகற்றுவதற்குரிய அகற்றல் சபையின் சிபார்சு மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம். |
| (இ) | கடன் பட்டோர் நிலுவை | 132,220,019 | நிலுவை உறுதிப்படுத்தப்பட்டது |
| (ஈ) | அறவிடப்பட வேண்டிய வைத்திய சாலைக் கட்டணம் | 11,307,230 | நிலுவை உறுதிப்படுத்தப்பட்டது |
| (உ) | வைத்திய வழங்கல் பிரிவிற்கு செலுத்தவேண்டிய பெறுமதி | 41,688,054 | நிலுவை உறுதிப்படுத்தப்பட்டது |

(அ) வழங்கல் பிரிவின் மூலம் விற்கப்பட்டது.

(ஆ) அகற்றப்பட்ட சொத்துக்களுக்காக அகற்றல் சபையின் அறிக்கை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது அந்த ஆவணங்களை கணக்காய்விற்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.

(இ) வியாபார கடன்பட்டோர் - வைத்திய வழங்கல் பிரிவு - இப்பெறுமதி 15 வருட அளவு பழைமையான நிலுவையாகும்.

(ஈ) அறவிடப்பட வேண்டிய வைத்திசாலைக் கட்டணம் -

ஏனைய தாபனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய வைத்திய சாலைக் கட்டண ஆவணம் இவ் வேளையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடற்படையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வைத்திய சாலைக் கட்டணம் அறவிட முடியாத நிலுவையாகிய படியால் அதனை கணக்கிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கின்றேன்.

(உ) இத் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.3 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 03 அரச தாபனங்களிலிலிருந்து கிடைக்க வேண்டிய வைத்தியசாலைக் கட்டணம் ரூபா6,349,313/- உம், சுகாதார அமைச்சிலிருந்து கிடைக்க வேண்டிய பயிற்சி வைத்தியர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா.1,112,280/- உம், தனியார் நிறுவனங்கள் 03 இல் இருந்து கிடைக்க வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 78,675/- ஆக மொத்தம் ரூபா 7,540,268/- அறவிட்டுக்கொள்ள 02-06 வருட காலத்தினுள் போதியளவு நடவடிக்கை எடுக்கப்படிருக்கவில்லை.

இந்த நிதியினை அறவிட தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்தபோதும் சில நிதியை அறவிடக் கூடியதாக இருந்தது.மேலும் அறவிட முடியாத நிதியினை பணிப்பாளர் சபையின் கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஆ) 2015 டிசம்பர் 31 ஆந் திகதி கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் ரூபா 2,453,571/- ஆனதை 2 தொடக்கம் 5 வருட காலத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதியில் 2013 ஆம் ஆண்டிற்கு உரிய ரூபா 718,947/- நிதி 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளது. மிகுதி நிதியினை அமைச்சின் அங்கீகாரம் கிடைத்தவுடன் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(இ) கொள்வனவு செய்யப்பட்ட வைத்திய வழங்கல்களுக்காக ரூபா 10,838,120 ஆனது , சுகாதார அமைச்சுக்கும், ரூபா 437,799 ஆனது, நீர்க் கட்டணமாக தேசிய நீர் வழங்கல் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் 5 வருடங்களை விட அதிக காலம் தொடக்கம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வியாபார கடன் கொடுத்தோரின் கீழ் பிரதானமானவராக அமைவது வைத்திய வழங்கல் பிரிவு, கணக்காய்வாளர் திணைக்களம், மற்றும் தொழிற் கட்டணமாகும். இதில் வைத்திய வழங்கல் பிரிவிற்கு செலுத்தப்படவேண்டிய நிதியை எதிர் காலத்தில் சத்திர சிகிச்சை நடவடிக்கைக்காக பதிலீடு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்தவேண்டிய நிதியை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஈ) 5 வருடங்களை விட அதிக காலம் தொடக்கம் வைத்தியர்களுக்கு தீர்க்கப்படாமல் காணப்பட்ட தொழிற் கட்டணம் ரூபா 3,616,142/- ஐ வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடங்களில் சேகரிக்கப்பட்ட எனினும் உரிய சேவகர்களினால் பெறுக்கொள்ளாதே தொழிற் கட்டணமாகக் காணப்படுகின்றது.

2.4 **சட்டதிட்டங்களுக்கும், விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் மற்றும் முகாமைத்துவ முடிவுகளுக்கும் இணங்காமை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

சட்டதிட்டங்கள், பிரமாணங்கள், விதிகளுடனான தொடர்பு

(அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை.

| | | |
|---|---|---|
| (i) | Viiஅத்தியாயத்தின் 4 மற்றும் 5 ஆம் பிரிவுகள் | 4 இலிகிதர் பதவி அலுவலகர்களுக்கு இலத்திரனியல் படப்பிடிப்பாளர் பதவியின் 111 ஆவது தர பதவியினை வழங்கி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக இலத்திரனியல் படப்பிடிப்பாளர் பதவியின் 11 ஆம் தரத்திற்குரிய சம்பளத் திட்டத்தில் அமர்த்தபட்டு இருந்தனர் மேலும் பதவிக்குரிய வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் சித்திபெறாது இருந்ததுடன் தொடர்ச்சியாக சம்பள ஏற்றம் அவ் அலுவலகர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | Xxxஅத்தியாயத்தின் 4.1 பிரிவு | ஒழுங்கான அங்கீகாரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளாது வைத்திய சாலையின் 06 வைத்தியர்கள் உள்ளடங்கலாக 09 அலுவலகர்கள் 2013,2014, மற்றும் 2015 நொவம்பர் 30 வரையிலான கால எல்லையினுள் கடமை நேரத்தினுள் சுகாதார கற்கை பல்கலைக்கழக வித்தியாலயத்தின் விரிவுரைகளில் பங்கு பற்றி அதற்காக மொத்தம் ரூபா 877,125.00 படியைப் பெற்றுக்கொண்டிருந்தனர். |
| (ஆ) | 1978 டிசம்பர் 19 ஆந் திகதி 842 ஆம் இலக்க திறைசேரியின் சுற்றறிக்கை | நிலையான சொத்து கணக்கினைப் பதியும் போது ஒழுங்கான நடைமுறை ஒழுங்கு விதிகளை கடைபிடிப்பதற்கு மற்றும் நிலையான சொத்து ஏட்டினைப் பேணிச் செல்வதற்கு வைத்தியசாலை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதி PED/12 ஆம் இலக்க அரசபொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1பந்தி | எல்லாத் தரங்களுக்கும் ஆட்சேர்க்கும் மற்றும் பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கை ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றம் உரிய அமைச்சின் அனுமதியினைப் பெற்ற பின் சம்பளம் மற்றும் ஊழியர்கள் ஆணைக் குழுவின் சிபார்சு மற்றும் முகா மைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெறுக்கொள்ள வேண்டிய போதும் தயாரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு வழங்கும் ஒழுங்கு விதிகளுக்காக சிபார்சு மற்றும் அனுமதியினைப் பெற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(i) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 04 அலுவலகர்களும் இலிகிதர் பதவியின் 1 ஆம் தரத்தில் கடமையாற்றி தாபனத்தின் தேவைக்கு இணங்க சுகாதார அமைச்சின் இலத்திரனியல் தொழிநுட்பவியலாளர் பதவிக்குரிய பாட நெறியினை பூர்த்தி செய்த பின் அப் பதவியில் நியமிக்கப்பட்ட அலுவலகர்கள் ஆவர். அவர்களை புதிய பதவிக்கு நியமிக்கும் போது அப் பதவியின் iii தரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் புதிய பதவியில் நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர்கள் இலிகிதர் பதவியில் முதலாம் வகுப்பின் 99312-6x2100 -9 x3624 – 161828 சம்பளத்தினைப் பெற்றனர். அவர்கள் அந்தச் சம்பள மட்டத்தினை விட குறைந்த சம்பள மட்டத்தின் கீழ் புதிய பதவியின் 3 ஆம் தரத்திற்கு உரிய சம்பள அளவான 94932-7x 2436 – 5x 3888-131424 ஐ பெற்றுக் கொடுப்பது சிக்கல் மிக்க நிலமையாகக் காணப்பட்ட படியால் புதிய பதவியின் ii தரத்தின் சம்பள திட்டமான ரூபா 113724 – 16 x3888 – 175432 அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் ஆகுமாறு வழங்கப்பட்டுள்ளது. அந்தச் சலுகையினை வழங்கும் போது இரண்டாம் தரத்திற்கு உரிய பதவியாகக் கருதக் கூடாது என அந்தக் கட்டளையில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. ( இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)

(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொதுவைத்திய சாலை மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலம் முடிவடைந்ததும், மீண்டும் உடன் படிக்கையில் கைச்சாத்து இடாதபடியால் புரிந்துணர்வு உடன்படிக்கை அதிகாரமற்றதாகி சுகாதார கற்கைநெறி பல்கலைக்கழக வித்தியாலயத்தின் எல்லா நிர்வாக நடவடிக்கைகளும் ஸ்ரீ ஜயவர்தன வைத்திய சாலைக்குக் கையளிக்கபட்டதுடன் அதற்காக நிதி மற்றும் ஏனைய வளங்கல்களை வழங்குவது வைத்தியசாலையின் மூலம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.
ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்திய சாலை போதனா வைத்திய சாலையாகுவதுடன் அது பல்வேறுபட்ட முறையில் சுகாதாரக் கல்வி நடவடிக்கையினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தற்போது சுகாதார கற்கைநெறி பல்கலைக்கழக வித்தியாலயமும் ஸ்ரீ ஜயவர்தன புர பொதுவைத்திய சாலையின் நிர்வாக நடவடிக்கையின் ஒரு பகுதியாகும்.
இதற்கு இணங்க எதிர்காலத்தில் தேவையான முறையில் வைத்திய சாலையினுள்ளும் முன்னரைப் போல் வளப் பங்களிபினைப் வழங்க நடவடிக்கை எடுக்க தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இவ் வேளையில் வைத்திய சலையில் நிலையானசொத்து ஏடு ஒன்று பேணப்படுவதுடன், சுற்றறிக்கைக்கு இணங்கிய வகையில் நிலையான சொத்துகுரிய ஏடு ஒன்றினை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) 2003 யூன் 03 ஆந் திகதி PED/12 ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்புத் திட்டம் காணப்படுவதுடன் அது அரசபொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடு, அரசின் சட்டரீதியிலான தாபனங்களின் நல்லாட்சிக்கு வழிகாட்டும் கோவையின் 9.3.1 பந்தி மற்றும் 2009 யூலை 08 ஆந் திகதி PED/PU ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைத் திருத்தி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்படப்பட்ட போதும் அதற்கு இது வரை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. (இணைப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)

| | | |
|---|---|---|
| 3. | <u>நிதி மீளாய்வு</u> | |
| 3.1 | <u>நிதி விளைவுகள்</u><br>சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கு இணங்க, மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான வைத்திய சாலைச் சபையின் வழிகாட்டலின் கீழ் ரூபா 352,618,182/- ஆனது வரி பின்னரான பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் அதற்கு மாறாக கடந்த வருடத்தில் ரூபா 720,613,254/- வரி பின்னரான மேலதிகமாகியதனால் கடந்த வருடத்திற்கு இணைந்த வகையில் மீளாய்வு வருடத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,073,231,436/- இனால் குறைவாகக் காணப்பட்டது. மீளாய்வு வருடத்தின் அரச மானியம் ரூபா 779,914,000/- இனால் குறைவடைந்ததும் பணியாட்களுக்கான செலவு ரூபா 299,119,863/- இனால் அதிகரித்ததும் குறைபாட்டிற்கு பிரதான காரணமாக இருந்தது..<br><br>சபையின் மீளாய்வு வருடம் மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளை விபரிக்கும் வேளையில் 2012 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறை காணப்பட்டபோதும் 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் நிதி மேலதிகம் ஏற்பட்டு 2015 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது ஊழிய ஊதியம், அரச வரி மற்றும் நடைமுறையற்றச் சொத்துக்களுக்கான தேய்மானத்தினைக் கருத்தில் கொண்டபோது சபையின் முழுப் பங்களிப்பு 2012 தொடக்கம் 2014 வரை ரூபா 716,896,615/- தொடக்கம் ரூபா 1,739,662,005/- வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. எவ்வாறான போதும் மீளாய்வு வருடத்தில் முழு பங்களிப்பு ரூபா 950,142,035/- வரை குறைந்து காணப்பட்டதுடன் அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 789,519,970/- இனால் குறைவாகக் காணப்பட்டது. | |
| 3.2 | <u>வைத்திய சாலைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீயிலான சம்பவங்கள்</u><br>வைத்திய சாலையின் 06 பணியாட்களினால் வயதடைய முன் ஓய்வு பெறச் செய்தது, பதவி உயர்வு கிடைக்கப் பெறாமை மற்றும் நிதி மோசடி காரணமாக சேவையிலிருந்து அகற்றப்பட்டமை போன்ற விடயங்களின் கீழ் ரூபா 11 மில்லியனும், 02 வெளி நபர்களினால் நோய் நிவாரணச் சேவையில் காணப்பட்ட பலவீனத்தின் காரணமாக ரூபா 62.5 மில்லியன் இளப்பீட்டினைக் கோரி வைத்திய சாலைக்கு எதிராக நீதிமன்றங்களில் முறையே 06 மற்றும் 02 வழக்குகள் மீளாய்வு வருடத்தினுள் தொடுக்கப்பட்டிருந்தன | |

| | | |
|---|---|---|
| 4. | செயற்பாட்டு மீளாய்வு | |
| 4.1 | முகாமைத்துவ செயற்பாடுகள்<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (அ) | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சுடன் ஒன்றிணைந்து சுகாதாரத் துறையின் கைத்தொழிற் பிரிவின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை ஸ்தாபிக்கும் நோக்கில், சுகாதார கற்கை பல்கலைக்கழகக் கல்லூரியை ஸ்தாபிப்பதற்கு 2013 மே மாதம் 09 ஆந் திகதி புரிந்துணர்வு உடன் படிக்கைக்கு வரப்பட்டது. இந்த உடன்படிக்கைக்கு இணங்க, 2013 ஒக்டோபர் மாதத்தில் வைத்தியசாலைச் சுற்றாடலில் அமைக்கப்பட்டிருந்த இந்தத் தாபனத்தின் நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் வைத்தியசாலையினால் செலுத்தப்பட்டு இருந்தது. எவ்வாறான போதும் 2016 மே மாதம் 09 ஆந் திகதி உரிய புரிந்துணர்வு உடன்படிக்கை இரத்தாகி இருந்தபடியால் வித்தியாலயத்தினை தொடர்ச்சியாக நடாத்துவது தொடர்பான நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் வித்தியாலயத்தினை ஒழுங்கான அடிப்படையில் ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சுடன் 2013 மே மாதம் 09 ஆந் திகதி செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இணங்க சுகாதார கற்கை நெறி பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது காணப்பட்ட பணிப்பாளர் சபையினால் அவ்வாறு அறவிடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ள போதும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் அவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என நிபந்தனை விதிக்கப்படவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கையின் 4.vi (b) பிரிவிற்கு இணங்க அவ்வாறான முடிவொன்று எடுக்கப்பட்டால் இரு பகுதியும் ஒன்றுசேர்ந்து புரிந்துணர்வு உடன்படிக்கையினை மீள் திருத்தம் செய்ய வேண்டும். எனினும் அதற்காக அந்த உடன்படிக்கை மீள் திருத்தப்படவில்லை.<br><br>புரிந்துணர்வு உடன்படிக்கையின் 3.vi பிரிவிற்கு இணங்க மருத்துவ கற்கை நெறி பல்கலைக்கழகக் கல்லூரியை பேணிச் செல்ல இடத்தினைப் பெற்றுகொடுப்பது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பொறுப்பு ஆகுவதுடன் உடன்படிக்கைக்கு இணங்க நிதியை அறவிட முடியாது போனது . அத்தோடு அவ்வாறு நிதியினைச் செலுத்த பல்கலைக்கழக வித்தியாலயத்திற்கு நிதிரீதியில் இயலுமை இருக்கவில்லை. .<br><br>இதைவிட மருத்துவ கற்கை நெறி பல்கலைக்கழகக் கல்லூரியின் செலவு மற்றும் ஏனைய செலவுகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என புரிந்துணர்வு உடன் படிக்கையின் 3. Vii ஆம் இலக்க பிரிவிற்கு இணங்க ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளபடியால் நீர் மற்றும் மின்சாரக் கட்டணத்தினை அறவிடுவது மேற்கொள்ள முடியாமல் இருந்தது.<br><br>ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை மற்றும் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு சுகாதார கற்கை நெறி பல்கலைககழகக் கல்லூரியை ஆரம்பிப்பதற்காக 2013 மே மாதம் 09 ஆந் திகதி தொடக்கம் 2016 மே மாதம் 09 வரை நடைமுறைக்கு வருமாறு இரு பகுதியினரினாலும் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 03 (vi) ஆம் இலக்கத்தில் ஸ்ரீ ஜயவர்தபுர பொது வைத்தியசாலை மருத்துவ கற்கை நெறி பல்கலைக் கழகக்கல்லூரியைப் பேணிச் செல்வதற்கு இடமும் வசதியும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையினால் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது.<br><br>பல்கலைக்கழகக் கல்லூரி அதற்காக குத்தகையோ அல்லது பாடநெறிக் கட்டணங்களில் 25% அறவிட்டால் புரிந்துணர்வு உடன்படிக்கை திருத்தப்பட வேண்டியிருந்தது. இரு பகுதியினரினாலும் அந்த புரிந்துணர்வு உடன்படிக்கையினைப் பேணிச்செல்ல எண்ணாதபடியால் அது திருத்தப்படவில்லை. இதற்கு இணங்க அந்தப் பணிப்பாளர் சபையின் முடிவினை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. எவ்வாறான போதும் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதிக்குப் பின் அந்த புரிந்துணர்வு நடவடிக்கை அதிகாரமற்றதாகி உள்ளது. .<br>தற்போது ஆட்சேர்க்கப்படும் பிள்ளைகளின் கற்கை நடவடிக்கையினை மேற்கொண்டு செல்ல சுகாதார அமைச்சரின் ஆலோசனையின் கீழ் சுகாதார அமைச்சின் செயலாளரினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அது பற்றி அறிந்து தேவையான வசதிகளை வழங்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கற்கை நடவடிக்கையினை முன் போல் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சுற்றாடலில் பேணிச் செல்வதற்கும் அதற்குத் தேவையான நிதி ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் மூலம் வழங்கப்பட வேண்டும். என தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2016.06.15 ஆந் திகதி பல்கலைக்கழக தாபனத்தில் நடைபெற்ற குழுவின் குழுக் கூட்ட முடிவு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது ( இணைப்பு முன்வைக்கப்பட்டுள்ளது) |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2015 டிசம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 546,490/ பெறுமதியான 11 வகையைச் சேர்ந்த 12,322 பிரிவுகளும் மற்றும் ரூபா 5,686,759/- பெறுமதியான சத்திர சிகிச்சைப் பொருட்கள் மற்றும் கதிர்படம் பிடிப்பதற்குரிய 32 வகைகளுக்குரிய 4,778 பிரிவுகளும் குறுங்காலத்தில் காலாவதியாகும் மற்றும் மாற்றப்பட முடியாத பொருட்களாக களஞ்சியத்தில் காணப்பட்டன. இதைவிட மீளாய்வு வருடத்தினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா.585,643/- பெறுமதியான சத்திரசிகிச்சைப் பொருட்கள் மற்றும் 12 வகையைச் சேர்ந்த 2208 பிரிவுகளில் ஒரு பிரிவு கூட வருடத்தினுள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த மருந்துகளைப் பயன்படுத்துவது தொடர்பாக ஒழுங்கான கவனம் செலுத்தப்பட்டு இருக்காததுடன் தேவையினை ஒழுங்கான முறையில் இனங்காணாது கொள்வனவு செய்தமை, பாவனைக்கு எடுக்கும்படி மருந்தினைப் பெயர் குறித்த வைத்தியர் ஓய்வு பெற்றமை மற்றும் புதிய சத்திரசிகிச்சை வைத்தியர் அதனை பயன்படுத்த பணிக்காமை போன்ற காரணங்கள் இவ்வாறான இருப்புக்கள் காணப்படக் காரணமாக அமைந்திருந்தன.<br>. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளில் 17 மருந்துகள் மட்டுமே 2016 ஆம் ஆண்டினுள் காலாவதி ஆக இருந்தன எனவும். மிகுதி மருந்துகள் 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் காலாவதி ஆக உள்ளன.போட்டோ பிரதி இணைக்கப்பட்டுள்ளது ( இணைப்பு முன் வைக்கப்பட்டுள்ளது)<br><br>இந்த 38 மருந்துகள் பின்வருமாறு 2016.08.24 ஆந் திகதி அளவில் பகிரப்பட்டு உள்ளன. சில மருந்துகளின் காலாவதியாகும் தினம் நீண்ட நாளுக்கு மாற்றப்பட்டுள்ளது.சில மருந்துகளை மாற்றுவதற்கு முயற்சி செய்த போதும் அரச வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் காலாவதியாகும் தினம் ஒரே நாளாகக் காணப்பட்டபடியால் மாற்ற முடியாமல் போனது இந்த 38 மருந்துகளில் பெரும்பாலானவை பாவனை செய்யப்பட்டதுடன் மேலும் சில மருந்துகள் பயன்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. |
| (இ) | உள்ளக மருந்துக் களஞ்சியத்தில் மற்றும் சத்திர சிகிச்சை பொருட்களுக்கான களஞ்சியத்தில் ரூபா 973,665/- பெறுமதியான 24 வகையைச் சேர்ந்த 1658 பிரிவுகளும், ரூபா 143,782/ - பெறுமதியான சத்திரசிகிச்சைக்குரிய பொருட்கள் 18 இற்குரிய 2321 பிரிவுகளும் அடிப்படை ஆவணங்கள் இன்றி இருப்புப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன | இந்த 18 சத்திர சிகிச்சைப் பொருட்களின் மேலதிக இருப்பிற்கு பின்வருவன காரணமாகின<br>வாட்டுக்கள் மற்றும் பிரிவுகளினால் விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெறுமிடத்து அது கணனியினால் வழங்கப்படும்.பொருட்களை எடுத்துச்செல்ல வருகை தரும்போது அச்சுப் பதிப்புச் செய்து வழங்கப்படும். இது சத்திர சிகிச்சைக் களஞ்சியத்தினால் பொதுவாக மேற்கொள்ளப்படும் முறை ஒன்றாகும். 30 அளவான பிரிவுகளுக்கு வழங்கும் போது காலத்தினை மீதப்படுத்த வேண்டியபடியால் இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் பொருட்கள் கொண்டு செல்லப்படாத சந்தர்ப்பமும் காணப்படுகின்றது அக் காலத்தில் மீண்டும் இருப்பினைச் சேகரித்துக் கொள்ளும் முறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை அப்போது களஞ்சியத்திலிருந்து கணினியில் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதும், வழங்கப்படவில்லை. தற்போது இந் நிலையிலிருந்து விடுபட பொருட்களை எடுத்துச் செல்ல வரும்போது மட்டும் கணனியில் தகவல்களை உள்ளடக்கி வழங்குவது இடம் பெறுகின்றது. திருப்பி அனுப்பும் ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. வழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.<br>பௌதீக இருப்பினை கணினிமயப்படுத்தும் போது அடையாளத்தினை மாற்றி தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.<br>பௌதீக இருப்பு ஒரே தினத்தில் பெருமளவான வகைகளை கணக்கிடுவதற்கு ஏற்பட்டமையால் ( 1000 அளவான வகை) அங்கு ஏற்பட்ட கவனயீனத்தினால் ( குறைவான மற்றும் அதிகமான இரண்டு சந்தர்ப்பங்களிலும் சிறிய அளவு இவ்வாறு ஏற்பட்டுள்ளது )<br>ஒரே உருப்படி பல வியாபாரப் பெயர்களில் வரும்போது அடையாளம் மாறி வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.<br>வழங்கல் பிரிவினால் அடையாளம் இடும்போது ஒரே உருப்படிக்கு 2 அடையாளங்கள் இடப்பட்ட சந்தர்ப்பம். உதா: Oxygen face mask – SUCOF 038 மற்றும்<br>உரிய உருப்படிக்கு உரித்தல்லாத ST தவறினால் ஏட்டில் குறிப்பிடப்படுவது இடம்பெற்று உள்ளது . பெரும்பாலும் ஒரே சமமான பெயரினை உடைய உருப்படிகள் உதாரணம் : Disposable needle,gloves<br><br>2015.12.31 ஆந் திகதியில் இருப்பு ஏடு சரியாக செப்பனிட்டு இருக்காமை தொடர்பாக, |

2015.12.31 ஆந் திகதியில் இருப்பு ஏடு சரியாக செப்பனிட்டு இருக்காமை தொடர்பாக,

1. செப்பனிடும்போது குறைபாடு காணப்படுகின்றமை. அக் குறைபாடு மேலதிக இருப்பாக புத்தகங்களில் கொண்டு வரப்பட்டுள்ளன
உதாரணம்: Disposable gloves
2. சில பிரிவுகள் கடனுக்குப் பெற்று கடனைத் தீர்க்காத சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றமை.
உதாரணம்: E.G.G. Electrodes.
3. அடையாளம் மாற்றப்பட்டு இருப்பு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டமை

உள்ளக மருந்தகத்தினால் நாளாந்தம் கணினியின் மூலம் மருந்துகளை வழங்குவது வைத்தியசாலையின் வாட்டுக்களுக்கு வழங்கப்படுகின்றது.
. இதற்கு இணங்க ஏதாவது நோயாளி ஒருவருக்கு மருந்தினை வழங்கும் போது சிலவேளையில் நாங்கள் வழங்கும் மருந்து நோயாளிக்கு தேவைப்படாமை அல்லது உரிய வைத்தியரினால் அந்த மருந்தினை வழங்குவதை நிறுத்துவதற்கு பணிக்கப்படுமிடத்து அல்லது வழங்கும் போது அடையாளம் தவறாக உள்ளடக்கப்பட்டாலோ நோயாளியின் பில்லிலிருந்து அந்த மருந்து அகற்றப்பட வேண்டும். (Drug return) என்ற முறையின் மூலமே இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது.
மேலே குறிப்பிடப்பட்ட (Drugs return) முறையினை பயன்படுத்தும் போது தேவையற்ற மருந்துகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டு இருந்தால் உரிய மருந்துகளை உரிய முறையில் நோயாளியின் பில்லிலிருந்து கழிப்பது இடம்பெறும். எனினும் இம் முறையில் மருந்தகத்தில் பௌதீக இருப்பு மற்றும் நாளின் இறுதியில் **எடுக்கப்படும்** Drug Item Summary இல் குறிப்பிடப்படும் இருப்புக்கள் ஆவணப்படுத்தப்பட்ட பின் குறிப்பிடப்படும் இருப்பின் அளவானது தொகையின் நிலுவையில் தெளிவாகத் தெரிவதில்லை.
நாளாந்தம் அல்லது வாராந்தம் அல்லது மாதாந்தம் இந்த மருந்துகளை வழங்கும் பொழிப்பு மருந்து இருப்புப் புத்தகத்தில் பதியப்படும். அவ்வேளையில் பொழிப்பாக்கப்பட்ட மருந்துகள் மற்றும் உண்மையாக பௌதீக ரீதியிலான மருந்துகளின் அளவுகளுக்கிடையே வேறுபாடு ஒன்று ஏற்படும் இது கணினி அமைப்பு ஒழுங்கான முறையில் இயங்காததால் ஏற்பட்ட ஒன்றாகும். இதன் காரணமாக நாளாந்தப் பொழிப்பின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தக நிலுவையினை விட பௌதீக இருப்பு பெரும்பாலும் அதிகமாகும். அந்த அதிகரிக்கும் மருந்தின் அளவு மேலதிக இருப்பாக ஆவணப்படுத்தப்படும். கணினி அமைப்பில் ஏற்படும் இந்த தவறினை திருத்தக்கூடிய வேறு நடவடிக்கை ஒன்று இல்லாததால் மேலதிகமாக காட்டப்படுவதுடன் இந்த இருப்பினை புத்தகத்தில் பதிவது மருந்தாளர்களால் மேற்கொள்ளப்படும் தவறு என்று கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளது.

இந்த கணினி அமைப்பினுள் காணப்படும் தவறினைத் திருத்தித் தரும்படி பிரதான மருந்தாளரினால் கணனி அமைப்பிற்குப் பொறுப்பான மேற்பார்வை அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் திருத்தப்படும்.

02. மேலும் இந்த மருந்துக் களஞ்சியத்திற்குரிய மருந்து இருப்பினை கணினியில் உள்ளடக்குவதற்காக கணனிப் பிரிவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் மிகவும் வேலைப்பழு நிறைந்த அதாவது வாட்டுக்களின் நோயாளிகளுக்கு கணினியின் உதவியுடன் மருந்துகளை வழங்கிக் கொண்டிருந்த வேளையிலேயே அதற்கு உரியதாக அக் கடமையைச் செய்ய அவர்கள் மருந்தகத்திற்கு வருகை தந்தனர். அவ்வாறு மேற்கொள்ளும் போது மருந்துக் களஞ்சியத்தில் காணப்படும் இருப்பில் ஒரு பகுதி நோயாளிகளுக்கு பில் இடப்பட்டும், இன்னும் சில நோயாளிகளுக்கு பில் செய்யப்பட்டுக் கொண்டிருந்த போதே இவ்வாறு நிகழ்ந்தது. . நிலமை இவ்வாறு இருந்த வேளையில் பௌதீக நிலுவையை கணினியில் உள்ளடக்கிய அளவுகளின் சரியான தன்மை தொடர்பாக திருப்திப்பட முடியாது என பிரதான மருந்தாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு இணங்க இந்த விடயம் பலவகையினால் ஏற்பட்ட குறைபாடு ஒன்றாகுவதுடன் இவ்வாறான குறைபாடு ஒன்று எதிர்காலத்தில் சீர் செய்யப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.
இவ்வேளையில் மேலே குறிப்பிட்ட கணினிமயப்படுத்தப்பட்ட குறைபாடு ஓரளவு திருத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, ஏதாவது நோயாளி ஒருவருக்கு பில் இடப்பட்டு மீண்டும் அந் நோயாளியின் பில்லில் அந்த மருந்தை திருப்பி அனுப்பும் போது முன்னரைப் போல் அல்லாது உரிய முறையில் நாளின் இறுதியில் மருந்து திருப்பு அனுப்பும் பொழிப்பில் அந்த திருப்பி அனுப்பப்பட்ட பொருள் குறைந்து காட்டும்.
இவ்வாறு கணினிமயப்படுத்தப்பட்ட பெருமளவு குறைபாடு இவ்வேளையில் ஓரளவில் திருத்தப்பட்டுள்ளன.

Sy : Lactulose/Paracetomal
வைத்தியசாலையினுள் காணப்படும் எல்லா வாட்டுக்களுக்கும் மருந்துகள் உள்ளக மருந்தகம் II இன் மூலமே வழங்கப்படுகின்றது. இவ்வாறு மருந்துகளை வழங்கும் போது வழங்கப்படும் மருந்து நோயாளிக்குத் தேவையில்லாதவிடத்து அல்லது வைத்தியரினால் அந்த மருந்து இடை நிறுத்தப்பட்டு இருந்தால் அந்த மருந்து நோயாளியின் பில்லில் பட்டியலிடப்பட்டு இருந்தால் அந்த மருந்து நோயாளியின் பில்லில் இருந்து கழிக்கப்பட வேண்டும். அவ்வாறு கழிக்கும்போது நோயாளியின் பில்லில் கழிக்கப்பட்ட போதும் நாளின் இறுதியில் எடுக்கும் Drug Item Summary இல் அந்த குறைவு இடம்பெறுவது இல்லை.. நிலமை இவ்வாறானபடியால் இந்த இருப்பினை வழங்குவதை புத்தகங்களில் குறித்து பொழிப்பாக்கப்படும்போது பௌதீக இருப்பு மற்றும் புத்தகங்களில் உள்ள நிலுவைக்கு இடையே வேறுபாடு ஒன்று ஏற்படும்.. இவ் இருப்பு மேலதிக இருப்பாக குறிப்பிடப்படும். இது மேலதிக இருப்பாக ( பௌதீக) இருப்புப் புத்தகத்திற்கு எடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| (ஈ) | 2015 யூலை 08 ஆந் திகதியில் காணப்பட்ட இருப்பு, முதலாவது முறையாக கணினிமயப் படுத்தப்பட்டிருந்த போதும் அன்றைய தினம் பௌதீக இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அன்றைய தினத்தில் இருப்பு ஏட்டிற்கு இணங்க 152 சத்திர சிகிச்சை உபகரண வகைகளைச் சேர்ந்த 388,016 அலகுகள் காணப்பட்ட கணினித் தரவுகளுக்கு இணங்க அந்த அலகுகள் 412,755 ஆக இருந்தது. 44,047 அலகுகளில் இருப்பு மேலதிகமும் ,21,683 அலகுகளில் இருப்பு பற்றாக்குறையும் காணப்பட்டபோதும் அதற்கு காரணத்தினை ஆராய்ந்து அறிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதியில் வருட இறுதி இருப்பு கணக்கெடுப்பு ஆவணத்திற்கு இணங்க முதலாவதாக 2015.01.01 தொடக்கம் கணினிமயப்படுத்தப்பட்டது. அதற்காக அதிகாரம் பெற்ற குழு நியமிக்கப்பட்டிருந்தது.<br>இதற்கு இணங்க 2015.01.01 ஆந் திகதி தொடக்கம் கணினி, இருப்புப் புத்தகம் மற்றும் பௌதீக இருப்பு ஆகிய விடயங்களை செப்பனிட்டு வெளியிடுவது இடம்பெற்றது.கணினி அமைப்பில் ஏற்பட்ட பின்வரும் காரணத்தினால் மீண்டும் 2015.07.08 ஆந் திகதி தொடக்கம் பௌதீக இருப்புக்களை கணினிமயப்படுத்தி செயற்படுத்த கணினிப் பிரிவிடமிருந்து களஞ்சியப் பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.<br><br>இதற்கு இணங்க 2015.07.08 ஆந் திகதி தொடக்கம் இருப்பு நிலுவைகளை உள்ளடக்குவதற்கு எல்லா வகைகளும் உள்ளடங்கும் புத்தகம் ஒன்று அச்சுப்பதிப்புச் செய்து சத்திர சிகிச்சை களஞ்சியங்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. அதற்கு இணங்க சத்திர சிகிச்சைக் களஞ்சியத்தின் மருந்தாளர் மற்றும் கனிஷ்ட பணிக்குழு அங்கத்தவர்களினதும் பங்களிப்புடன் இருப்பினைக் கணக்கிட்டு கணக்காய்வுப் பிரிவினால் வழங்கப்பட்ட புத்தகத்தில் குறிப்பிட்டு கணினிப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டபடியால் பௌதீக இருப்பு கணிப்பு மேற்கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்த எழுத்து மூலமான சாட்சி ஒன்றினை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க சத்திர சிகிச்சை பொருட் களஞ்சியத்திற்கு இயலாமல் போனது.<br>கணினி அமைப்பில் ஏற்பட்ட விடயங்கள்<br>ஆரம்பம் தொடக்கம் கணினி அமைப்பு நாள் ஒன்றில் பலமுறை செயல் இளந்தமை. அச் சந்தர்ப்பங்களில் தரவுகளை உள்ளடக்குபவரை அழைத்து பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. சிலவேளையில் இதை பழைய நிலைக்குக் கொண்டுவர சேவகிக்கு நீண்டநேரம் எடுத்தது.<br>தரவுகளை உள்ளடக்கி களஞ்சியப்படுத்தும்படி (Save)கட்டளையினை வழங்கிய சந்தர்ப்பங்களில் மற்றும் அச்சுப்பதிப்புச் செய்யும் சந்தர்ப்பங்களில் அமைப்பு அதிகமாக செயலிழப்பது இடம் பெற்றது அவ்வேளையில் . மீண்டும் இயங்கும் நிலைக்குக் கொண்டுவரமுடியாமல் போனதனால் புதிதாக வழங்குவதை ஆரம்பிக்க வேண்டியிருந்தது<br>மேலும் பல சந்தர்ப்பங்களில் களஞ்சியத்தில் பொருட்களை வேண்டுகோள் விடுத்தும் களஞ்சியத்தில் கணினித் தரவுகள் தெரிவதில்லை என்றும் தாதிச் சகோதரிகளிடமிருந்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மீண்டும் பௌதிக கணக்கெடுப்புத் தரவுகளைப் பதியும் சேவகிகள் கணினியில் உள்ளடக்கி உள்ளனர்.<br>இதன் காரணமாக பல வேலைப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதுடன், மீண்டும் பழைய நிலைக்குக் கொண்'டுவரும்வரை உரிய நேரத்தினுள் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் வாட்டுக்களுக்கு கடனின் அடிப்படையில் பொருட்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. (மீண்டும் வழமையான நிலைக்குக் கொண்டு வரும் வரை)<br><br>இந்த இருப்பில் மேலதிகம் மற்றும் பற்றாக்குறை ஏற்பட பின்வரும் காரணங்கள் தாக்கத்தினைச் செலுத்தி உள்ளன. இக் காரணங்களில் சிலவற்றுக்கு இப்போது தீர்வு வழங்கப்பட்டுள்ளது.. Manual இருந்து கணினி அமைப்பிற்கு மாறும்போது இவ்வாறான நிலமை ஆரம்ப காலங்களில் ஏற்பட்டுள்ளது என்பதே எங்களது எண்ணமாகும். இவ்வாறான நிலமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.<br><br>வழங்கப்பட்ட பொருளினை மீண்டும் பெற்றுக்கொள்ளும் முறை ஒன்று இல்லாமை. தற்போது return note இடுவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது . Eg: Bill 338113 ring pressures.<br>கணினிமயப்படுத்தும்போது சிலவகைப் பொருட்கள் 2 அடையாளங்களில் இடப்பட்டிருந்தமை..உதாரணம்: SUCT 028, SUCY 034, Clinical Thermometer (ஒரு அடையாளம் இரத்துச் செய்யப்பட்டு ஒன்று மட்டும் செயற்பட வைக்கப்பட்டுள்ளது )<br>களஞ்சியத்தில் இடவசதி வரையறுக்கப்பட்டபடியால் பல பொருட்களை ஒரு கருமப்பீடத்தில் களஞ்சியப்படுத்த ஏற்பட்டபடியால் சில சந்தர்ப்பங்களில் குறியீட்டு இலக்கம் மாற்றப்பட்டு வழங்கப்படுவது இடம்பெற்றுள்ளது.<br>பௌதீக இருப்பினை கணக்கிட்ட வேளையில் ஏற்பட்ட கவனயீனம். அதாவது பெருமளவு பொருட்கள் ஒரே தினத்தில் மருந்தாளருக்கு மேலதிகமாக உதவிக் காயாரியாலய சேவகர்களின் ஒத்துழைப்புடன் கணக்கிட்ட வேளையில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.<br><br>சில சந்தர்ப்பங்களில் பொருட்களைப் பின்னர் வழங்கும் சந்தர்ப்பங்களில் (கணினி மயப்படுத்திய போதும்) பொருட்களை கொண்டுசெல்ல பிரிவுகளில் இருந்து வருகை தராமை. அவ்வேளையில் மேலதிகமாகக் காரணமாகும். உதாரணம் :Disposable gloves மேலதிக இருப்புக்களின் எண்ணிக்கையினை பற்றாக்குறையான இருப்புக்களின் எண்ணிக்கைக்கு பதிலீடு செய்தபோது இந்தப் பற்றாக்குறை ஏற்படவில்லை உதாரணம்: Disposable needles 21G அதிகமாக உள்ளது. Disposable needles 22Gகுறைவாக உள்ளது. இது அடையாள இலக்கம் மாற்றப்பட்டு நிகழ்ந்துள்ளபடியால் பற்றாக்குறைக்கு மேலதிகம் பதிலீடு செய்யப்படும்.<br>சில STV இருப்பு ஏட்டில் பதிவு செய்யாமல் தவறு நிகழ்ந்துள்ளது. அதனை பதிவு செய்தால் பற்றாக்குறை தவிர்க்கப்படும்.<br>சில பிரிவுகளில் கடனுக்கு வாங்கி கடன் தீர்க்கப்படாத சந்தர்ப்பங்களில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது இது STV இடப்பட்டால் தீர்க்கப்படும்.<br><br>இதற்கு இணங்க நிகழ்ந்துள்ள தவறு மற்றும் கணினிப் பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. இந் நிலமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்கும். |

| | | |
|---|---|---|
| 4.2 | முரண்பாட்டிற்கு உட்பட்ட கொடுக்கல் வாங்கல்<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன | |
| (அ) | ஒப்படைக்கப்பட வேண்டிய விஷேட கடமைகள் மற்றும் அதற்குப் பதிலாக மாதாந்தம், சம்பளம் மற்றும் படி செலுத்தப்பட வேண்டிய அடிப்படையினை இனங்காணாது, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் 11 அத்தியாயத்தின் 9.1 பிரிவிற்கு இணங்க அமைச்சரவையின் முன் அனுமதியின்றி 68 வயதினைத் தாண்டிய ஒய்வுபெற்ற இரண்டு கதிர்படம் படிப்பாளர்கள் ஒரு வருடத்திற்கு விடய ஒப்படைப்பின் அடிப்படையில் 2015 ஆகஸ்ட் 21 மற்றும் 25 ஆகிய தினங்களில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். 2007 மே மாதம் 11 ஆந் திகதி 09/2007 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாட்டிற்கு இணங்க, ஓய்வுபெற்ற அலுவலகர் ஒருவரை மீண்டும் சேவைக்கு அமர்த்தும் போது ஓய்வுபெற்ற வேளையில் கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 50% அல்லது ரூபா 15,000/- ஆகிய இரண்டில் அதிகமான நிதியை மாதாந்தப் படியாகச் செலுத்த வேண்டிய போதும் அதற்கு மாறாக 2015 யூலை தொடக்கம் 2016 ஜனவரி வரையிலான காலத்தினுள் அந்த அலுவலகர்கள் இருவருக்கும் முறையே ரூபா 358,680/- உம் மற்றும் ரூபா 215,698/- உம் ஆக அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | தாபனத்தின் கதிர்படம் பிடிப்பாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 12 ஆகுவதுடன், அப்போது 06 கதிர்படம் பிடிப்பாளர்களே நிரந்தர சேவையில் ஈடுபட்டிருந்தனர். விண்ணப்பம் கோரப்பட்ட போதும் தகைமைபெற்ற விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறவில்லை அதனால் வெற்றிடங்களை நிரப்புவது பிரச்சினைமிக்க நிலமையாகியதுடன் நோய் நிவாரண சேவையினை தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்காக இவ்வாறு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதுடன் அதற்கு மாற்று நடவடிக்கையாக பயிற்சி அடிப்படையில் கதிர்படம் பிடிப்பாளரை ஆட்சேர்த்து கதிர்படம் பிடிப்பாளர்களுக்கான பாடசாலைக்கு அனுப்பி பயிற்சி வழங்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |
| (ஆ) | 2014 மார்ச் 19 ஆந் திகதி அன்பளிப்பாக கிடைக்கப் பெற்று ஒரு வருடத்தினை விடக் குறைந்த காலம் உபயோகிக்கப்பட்டிருந்த 3 மயக்க மருந்து இயந்திரங்கள் கோளாறுகள் எனக் குறிப்பிட்டு அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக ரூபா 29,900,000/-செலவு செய்யப்பட்டு புதிய 04 இயந்திரங்கள் 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பழைய இயந்திரங்கள் 03 அகற்றுவதற்கு அவை கோளாறு உடையன என்று தொழில்நுட்பக் குழுவின் சிபார்சு பெறப்பட்டிருக்காததுடன் நீர்கொழும்பு, களுத்துறை மற்றும் மொனறாகலை மாவட்ட வைத்திய சாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த இந்த 03 இயந்திரங்களும் எந்தவித கோளாறுகளும் இன்றி பயன்படுத்தப்படுகின்றன என்பது கணக்காய்வினால் உறுதிப்படுத்தப்பட்டது.<br><br>அவுஸ்ரேலியாவின்"Royal Perth"வைத்தியசாலையின் 2015 ஏபிரல் 21 ஆந் திகதி கடித்ததின் மூலம் 04 புதிய மயக்க மருந்து வழங்கும் இயந்திரங்களை வழங்குவதாக அறிவித்திருந்தபோதும் மேலே உள்ள 04 இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்காக 2015 மே மாதம் 14 ஆந் திகதி கட்டளை அனுப்பப்பட்டிருந்தது. நன்கொடையாக 04 புதிய இயந்திரங்கள் கிடைக்கும் என அறிவித்திருந்த போதும் ரூபா 29,900,000/* செலவு செய்து 04 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் நன்கொடையாகக் கிடைத்த 4 இயந்திரங்களும் 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி அளவிலும் பயன்படுத்தப்படாமல் வைத்தியசாலையில் காணப்பட்டன. எவ்வாறான போதும் நன்கொடையாகக் கிடைத்த 04 இயந்திரங்கள் கோளாறு உள்ளவையாகையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதவை என தவிசாளர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார். | 2014 மார்ச் மாதம் வைத்தியசாலைக்குச் கிடைத்திருந்த 03 உணர்விழப்பு இயந்திரங்கள் அவுஸ்ரேலியா வைத்தியசாலை ஒன்றில் பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட இயந்திரங்களாகும் .வேபரயிசர் (Vaporizers) இல்லாது இந்த 03 இயந்திரங்களும் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அவை தற்போது காணப்படும் தரத்திற்கு இணங்காதவைகளாகும். வைத்தியசாலையின் பிரதான உணர்விழர்பு விசேடவைத்தியரின் ஆலோசனைக்கு இணங்க அவ்வேளையில் வைத்திய சாலையில் பயன்படுத்தப்பட்டிருந்த உணர்விழப்பு இயந்திரங்களின் வேபரயிசர் (Vaporizers) களற்றி இவ்வாறு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற இயந்திரங்களுக்கு பொருத்தி பல்வேறுபட்ட தடைகளின் கீழ் 1 ½ வருடங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன்.விசேடமாக நீண்டகாலம் எடுக்கும் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும்போது இந்நிலமை தோன்றி உள்ளது.<br>மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி இந்த இயந்திரங்கள் பயன்படுத்தக்கூடிய நிலமைக்கு மாற்றி பல்வேறுபட்ட தடைகளுக்கு மத்தியில் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் ஆகுவதுடன் புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்த பின் அந்த இயந்திரங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ள எல்லைப்புற வைத்தியசாலைகளுக்கு மேலதிக இயந்திரங்கள் (Backup Machines) ஆகப் பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ளன.<br>இந்த மூன்று இயந்திரங்களையும் அகற்ற முன் தொழில்நுட்ப அலுவலகரினால் பரிசோதனைக்கு உட்படுத்தாமையானது தவறு என ஏற்றுக்கொள்கின்றேன்.மேலே (2) (அ) இல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளபடி பல்வேறுபட்ட தடைகளின் கீழ் அவ் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் நோயாளிகளுக்காக மேற்கொள்ளப்படும் கஸ்டமான சத்திரசிகிச்சைகளில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் தொடர்பாக விசேட வைத்தியர்களினால் இடைக்கிடையே எழுத்து மூலமாக வைத்தியசாலையின் முகாமைத்துவத்திற்கு குறிப்பெடுத்து அறிவிக்கப்படப்டுள்ளது.( இணைப்பு முன்வைக்கப்பட்டுள்ளது) இதற்கு இணங்க இந்த இயந்திரங்கள் வேண்டுகோள் விடுக்கப்பட்ட வைத்திய சாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br>2015 பெப்ரவரி மாதத்தில் 04 புதிய உணர்விழப்பு இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு இணங்க கேள்வி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது அவுஸ்ரேலியாவின் Royal Perth வைத்தியசாலையில் இருந்து எங்களது வைத்தியசாலைக்கு 04 உணர்விழப்பு இயந்திரங்கள் கிடைக்கும் என 2015 ஏப்ரல் மாதம் அந்த வைத்தியசாலையினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வேளையில் வைத்திசாலையினால் பயன்படுத்தபட்ட 03 பழைய இயந்திரங்களின் பிரச்சினை மிக்க நிலமை மற்றும் அந்த இயந்திரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கின்றபடியால் வைத்தியசாலைக்காக 07 புதிய இயந்திரங்களின் தேவை காணப்பட்டபடியாலும் புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்யக் கட்டளை வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | இவ்வாறு நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 04 இயந்திரங்களைப் பெற்றுக்கொண்டபின் சுகாதார அமைச்சின் கீழ் உயிரியல் வைத்திய சேவைப் பிரிவின் மூலம் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கைக்கு இணங்க நோயாளிகளை உணர்விழக்கச் செய்வதற்கு இந்த இயந்திரங்களை சிபார்சு செய்யவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது ( இணைப்பு முன்வைக்கப்பட்டுள்ளது)<br>பயன்படுத்த முன் அந்த இயந்திரங்களின் நிலமையினைப் பரசோதிப்பதற்காக உயிரியல் வைத்திய சேவைப் பிரிவின் மூலம் அறிக்கை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த 04 இயந்திரங்களும் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன என்பதனை அறிவிக்கின்றேன் அந்த அறிக்கைக்கு இணங்க அவ் இயந்திரங்களை பயன்படுத்த சிபார்சு செய்யப்படாதபடியால். அந்த இயந்திரங்கள் உபயோகத்திற்கு எடுக்கப்படவில்லை. |
| 4.3 | <u>வழிகாட்டல் செயற்பாடுகள்</u><br>வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சை மற்றும் நோய் சிகிச்சைக்காக நோயாளிகளிடமிருந்து தொழில்சார் கட்டணம் அறவிடப்பட்டு அந்தக் கட்டணத்தில் 99.85% சத்திர சிகிச்சையில் பங்குபற்றிய விசேட வைத்திய உத்தியோகத்தர்கள் ,வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் உதவிப் பணியாட்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டினுள் மட்டும் அவ்வாறு செலுத்தப்படிருந்த மொத்த தொழில்சார் கட்டணம் ரூபா 243,870,143/- ஆகும். .<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன | |
| (அ) | சாதாரண கடமை நேரத்தின் பின் வைத்தியர்களுக்கு தனிப்பட்ட சேவையில் ஈடுபட அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் அறவிடப்படவேண்டிய தெழில்சார் கட்டணப் பெறுமதி அல்லது வைத்தியர்கள் மற்றும் உதவி பணியாட்களுக்கு செலுத்தபடும் பெறுமதி மற்றும் அது கணக்கிடப்படும் முறை தொடர்பாக உறுதியான முறை ஒன்று முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் தனது தனிப்பட்ட விருப்பத்திற்கு இணங்க உரிய வைத்தியரினால் அறவிடப்படும் தொழில்சார் கட்டணம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | ஸ்ரீ ஜயவர்தன புரவைத்தியசாலை 20 வாட்டுக்களைக் கொண்டதுடன் 3,4,5 ஆகிய வாட்டுக்களில் சேர்க்கப்படும் நோயாளிகளிடமிருந்தே தொழில்சார் கட்டணம் அறவிடப்படுகின்றது இந்த நோயாளிகளில் பெரும்பான்மையானோர் வைத்தியர்களிடம் தனிப்பட ரீதியில் சேவையினைப் பெற்றுக்கொண்டு அந்த வைத்தியர்களின் மீது முழு நம்பிக்கை வைத்து வரும் நோயாளிகள் ஆகுவதுடன் அவர்கள் அதிக விலை கொடுத்து தமது நோய் நிவாரண சேவைகளை மிகவும் விரைவாக மற்றும் அதிக வசதிகளுடன் பெற்று வைத்தியசாலையில் இருந்து செல்ல எண்ணுபவர்களாகும்.. இந்த நோயாளிகளிடமிருந்து சத்திர சிகிச்சை மற்றும் பிறநோய் அவதானிப்பு நடவடிக்கைக்காக மட்டும் தொழில்சார் கட்டணத்தினை அறவிடுவதுடன் நோயாளிகள் தங்கியிருக்கும் காலத்தினுள் வைதியசாலைக் கட்டணம் அறவிடப்படுவதுடன் வைத்தியசாலைக் கட்டணம், மருந்துகள், இரசாணய கூடப் பரிசோதனை மற்றும் பிற நடவடிக்கைகளுக்காக கணிசமான நிதியை நோயாளிகளிடமிருந்து வைத்தியசாலை அறவிடுகின்றது.<br>சத்திர சிகிச்சையில் பங்குபற்றிய வைத்திய உத்தியோகத்தர்கள் ,ஓடலி மற்றும் உதவிப் பணியாட்களுக்கு தொழில்சார் கட்டணத்தினைத் தீர்மானித்தல் அந்த உத்தியோகத்தர்கள் சத்திர சிகிச்சைக்குப் வழங்கிய பங்களிப்பிற்கு இணங்க பிரதான வைத்தியரினால் தீர்மானிக்கப்படும். இது தொடர்பாக எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.<br>இதற்காக தற்போது வைத்தியர்கள் அல்லாத பணிக் குழுவினர்களுக்காக வருகை மற்றும் வெளிச்செல்லும் குறிக்கும் ஏட்டினைப் பேணிச்செல்வதுடன் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கைவிரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக ஒழுங்கான நடவடிக்கையினை அறிமுகப்படுத்த எண்ணுகின்றேன். |
| (ஆ) | பொதுவான கடமை நேரத்தில் மேற்கொள்ளும் சத்திர சிகிச்சை மற்றும் பரிசோதனைகளுக்காக தொழில்சார் கட்டணம் அறவிடப்படாதபோதும் வைத்தியர்களினால் 2015 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான பொதுவான கடமை நேரத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த சத்திர சிகிச்சை மற்றும் பரிசோதனைகளுக்காக ரூபா 1,197,075/- தொழில்சார் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது . | சாதாரண கடமை நேரத்தின் பின் வைத்தியர்களுக்கு தனிபட்ட சேவையில் ஈடுபட்ட அமைச்சரவையின் அங்கீகாரம் காணப்படுவதுடன் தொழில் சார் கட்டணத்தில் 95% விட அதிக அளவானவை சாதாரண கடமை நேரத்திற்குப் புறம்பாக மேற்கொள்ளப்படும் நோய் நிவாரண நடவடிக்கைக்குக்கு உரியனவாகும். எவ்வாறானபோதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முறையில் வைத்தியசாலையின் வளங்களை கடமை நேரத்தில் ஏனைய கடமை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஒன்று ஏற்படாதபடி பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தில் கட்டணம் செலுத்தும் வாட்டுக்களில் உள்ள நோயாளிகளுக்காக சத்திர சிகிச்சை மற்றும் ஏனைய வைத்திய சேவை வழங்கலின் மூலம் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்த முடியும் என்பதே எங்களது எண்ணமாகும்.<br>உதாரணமாக: சத்திர சிகிச்சைக் கூடம் அதிகாலை தொடக்கம் நள்ளிரவு வரை 24 மணிநேரமும் திறந்து குளிரூட்டி வசதி மற்றும் உபகரணங்களுடன் இயங்குவதுடன் இதற்காக வைத்தியர்கள் , தாதிகள் மற்றும் ஏனைய பணிக்குழுவினர் தயாராக உள்ளனர் எனினும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொது சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படாதபோது கட்டணம் செலுத்தும் வாட்டுக்களில் காணப்படும் நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | | வைத்தியசாலையின்மூலம் தொழில்சார் கட்டணம் செலுத்த ஆரம்பிக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டு **தொடக்கம் தொழில் சார் கட்டணங்களில்** இருந்து உழைக்கும் போதான கொடுப்பனவு வரி அறவிடப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றேன்.<br>எவ்வாறான போதும், இந்த தொழில்சார் கட்டணத்திற்காக உழைக்கும் போது செலுத்தும் வரியைக் கழிப்பது தொடர்பாக ஆலோசனை வேண்டி முகாமைத்துவ குழுப்பத்திரம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்குப் பதில் கிடைத்த பின் உடனடியாக எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை |
| 4.4 | <u>பெறுகை மற்றும் ஒப்பந்த நடவடிக்கை</u><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன . | | |
| | (அ) | 2015 ஏப்ரல் தொடக்கம் 2016 மார்ச் வரையிலான கால எல்லையினுள் வைத்தியசாலையின் பூங்காப் பராமரிப்பு மற்றும் அழகுபடுத்தும் நடவடடிக்கையினைப் பேணிச் செல்வதற்காகற்காக கேள்வி நடை முறையில் கிடைக்கப்பெற்ற ஆகக்குறைந்த விலை மனுவினை நிராகரித்து மாதாந்தம் ரூபா 588,800/- ஆகிய நான்காவதாக ஆகக் குறைந்த விலைமனுவைக் கொண்ட ஒப்பந்தக்காரரே கடந்த வருடத்திலும் இந்த விடயத்தின் ஒப்பந்தக் காரரானபோதும் ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இணங்க கடமையில் ஈடுபட வேண்டிய சேவகர்களின் எண்ணிக்கை 18% மற்றும் பரிசோதனையாளர்களின் எண்ணிக்கை 5% ஐ விடக் குறைவாக கடமையில் ஈடுபடுத்தியமை தொடர்பாக இந்தக் கேள்வி விடயத்தில் கவனிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மீளாய்வு வருடத்தின் ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆந் திகதி வரையினுள் ஈடுபடுத்தப்பட்டிருந்த மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 2994 ஆகியதுடன் அது இருக்க வேண்டிய எண்ணிக்கையில் 27.4% அளவு குறைவான எண்ணிக்கையாகும். | 2014-2015 கேள்வி வழங்கப்பட்டு முதல் 8 மாதங்கள் சென்ற பின் மட்டும் அதாவது 2015 ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் அபாண்ஸ் தாபனத்தின் வேலை நடவடிக்கைகள் பொதுவாக திருப்திப்படக் கூடிய நிலையில் காணப்பட்டது ( இந்தக் கேள்வி வெளியிடப்பட்ட மற்றும் தொழிநுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதி) ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்படும் விசேட வேலை நடவடிக்கைகளிலும் இக் கால எல்லையினுள் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். அதற்கு இணங்க அவர்களின் நடவடிக்கை திருப்பதிகரமான முறையில் இடம்பெற்ற படியால் இந்தக் கேள்வி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>அழிந்து கொண்டிருக்கும் மது மர தளிர்களை பழைய நிலைக்குக் கொண்டுவருதல்.<br>வாட் இல 1 உரிய அழிந்து கொண்டிருகும் அசல மரங்களை மீண்டும் தளிர்க்கச்செய்தல்.<br>எறும்புக் கூடுகளாகக் காணப்பட்டு அழிந்து கொண்டு வைத்தியசாலை முழுவதும் பரவியிருக்கும் மரங்களை தளிர்க்கச் செய்து பழைய நிலைக்குக் கொண்டுவருதல்.<br>இப்பிலுப்பில்,வெறலு போன்ற பாரிய மரங்களை அகற்றிய பின் சாரதிகளின் அறை மற்றும் விசேட வைத்தியர்களின் போசனசாலைக்கு முன்னால் பூங்காக் கிளைகள் அகற்றப்பட்டு மீண்டும் செப்பனிடுதல்<br>வைத்திய சாலையின் 30 வருட ஆண்டு நிறைவிற்காக நவம்பர், டிசம்பர் மாதங்களில் பூங்கா மற்றும் பூச் சாடிகளை வைத்தல்.<br>வாட்டு இல 01 முன்னால் சுறுவட்டம் ஒன்றினை புதிதாக அமைத்து பூச் செடிகளை நாட்டுதல்.<br>ஒவ்வொரு வாட்டிற்கும் முன்னால் காணப்படும் பூச் சாடிகளைப் பராமரித்தல்.<br><br>ஒப்பந்த நிபந்தனைகளில் காணப்படும் குறைபாடுகளை திருத்திக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன்.<br><br>இரண்டாம் முறை அதாவது 2015-2016 வருடங்களுக்காக ஜனவரி மாதத்தில் டென்டர் கோரப்பட்ட போது, அபாண்ஸ் தாபனத்தின் நாளாந்த நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக பூங்கா அலங்காரக் குழுவின் அங்கத்தவர்களினால் முன்வைக்கப்பட்ட அறிக்கைக்கு இணங்க தண்டம் அறவிட்ட போதும்,கேள்வி விண்ணப்பத்தினை நிராகரிக்கக் கூடிய மு றையில் அபாண்ஸ் தாபனத்தின் சேவைகள் குறைந்திருக்கவில்லை.<br>ஒப்பந்தம் மற்றும் நிபந்தனைக்கு இணங்க 15 சேவகர்கள் இருக்க வேண்டிய போதும் அவ்வாறு வருகை தாரத சந்தர்ப்பங்களில் உப குழுவின் சிபார்சின் படி தாபனப் பிரிவினால் ஒப்பந்தம் மற்றும் நிபந்தனைக்கு இணங்க நாட் சம்பளத்துடன் 25% சேர்த்து தண்டப் பணத்தினைத் தீர்மானித்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ( இணைப்பு சமர்ப்பிக்கப்டுள்து)<br>மேலும் சேவகர்களை குறைவாக கடமையில் ஈடுபடுத்தியதினால் பூங்காவின் பராமரிப்பு நடவடிக்கை திருப்பதிப்படும் நிலையில் இல்லை எனவும்,சேவை நிலமையினை உயர்ந்த தரத்திற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல சந்தர்ப்பங்களில் அபாண்ஸ் தனியார் தாபனத்திற்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | மருந்துப் பெயர்களுக்குப் பதிலாக வியாபாரப் பெயர்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வு வருடத்தினுள் 8 மருந்து வகைகளுக்குரிய 23,534 அலகுகளை வியாபாரப் பெயர்களில் கொள்வனவு செய்வதற்காக செலவு செய்திருந்த மேலதிக செலவு ரூபா .2,897,050/- என்பது எழுமாற்றான பரிசோதனையின் போது தெரியவந்தது. | மருந்து வகைகள் மருந்துப் பெயர்களின் கீழ் விலைமனு கோரப்பட்டுள்ளது . எனினும் மருந்தினைத் தெரிவு செய்யும் போது அதன் தரம் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படுவதுடன் இந்த மருந்துகளும் தரத்தில் உயர்ந்த மட்டத்தில் பெற்றுக் கொள்ள வேண்டிய மருந்துகளாகும். அதற்கு இணங்க ஆகக் குறைந்த விலையின் கீழ் அல்லாது தரம் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நடுத்தர அளவான விலையின் கீழ் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க வியாபாரப் பெயர்களில் அல்லாது தரத்தின் அடிப்படையிலேயே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.<br>சில சந்தர்ப்பங்களில் விசேடமாக கட்டணம் செலுத்தும் வாட்டுக்களில் காணப்படும் நோயாளிகளுக்காக அவர்களின் தேவை மற்றும் வைத்தியர்களின் சிபார்சின் கீழ் வியாபாரப் பெயர்களில் மருந்துகளைக் கொள்வனவு செய்யவேண்டி ஏற்படும். இந்த வைத்தியசாலையில் நோயாளிகளிடமிருந்து கட்டணம் அறவிடப்படுவதனால் நோயாளிகளை தக்கவைத்துக் கொள்ள அவ்வாறு மேற்கொள்ளவேண்டி ஏற்படுகின்றது. |
| (இ) | வைத்திய சாலையின் வாகன தரிப்பிடத்தினை விஸ்தரிக்கும் நடவடிக்கைக்காக ரூபா 11,209,829 ஒப்பந்தப் பெறுமதிக்கு 112 நாட்களில் பூர்த்தி செய்யும் இணக்கத்தின் கீழ் 2012 செப்டெம்பர் 05 ஆந் திகதி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது உடன்படிக்கைக்கு இணங்க , 2013 ஜனவரி 09 ஆந் திகதி அளவில் வேலை நிறைவு செய்யப்பட வேண்டி போதும் 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி அளவிலும் கூட அதன் வேலைகள் நிறைவுபெற்று இருக்க வில்லை . வாகனத் தரிப்பிடத்தினை நிரப்ப பயன்படுத்திய மண் மாதிரிகளின் தன்மை மற்றும் மண் தரம் தொடர்பான பரிசோதனையில் தகமையிளந்து காணப்பட்டதுடன் தார் மற்றும் மண் கலக்கப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை.மொத்த தாமத காலம் 03 வருடங்களை விட அதிகமானதுடன் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 995,454/- இனை 3 ஆவது இடைக்கால பட்டியலுக்கு நிதியினைச் செலுத்தாது தாமதக் கட்டணத்திற்காக பதிலிடு செய்ய ஆலோசனையாளர்கள் சிபார்சு செய்திருந்த போதும் இந்த சிபார்சு 1 வருடம் 06 மாதங்களின் பின் அந்த இடைக்கால பட்டியலுக்குச் செலுத்தப்பட்டிருந்து காலம் முடிவடைய முன் செயற்றிறன் பிணைமுறியை நிதியாக மாற்ற வைத்தியசாலை நடவடிக்கை எடுத்து இருக்காததுடன் அது 2014 ஒக்டோபர் 01 ஆந் திகதி காலம் காலாவதியாகியிருந்தது | இந்த வாகன தரிப்பிடத்தினை விஸ்தரிப்பது 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பூர்த்தி 2013 ஆம் ஆண்டு நிறைவடைய வேண்டி இருந்தது. எனினும் இந்த ஒப்பந்தத்தினை மேற்கொண்ட காலத்தினுள் பல்வேறுபட்ட பிரச்சினைமிக்க நிலமையின் கீழ் அது மிக அதிக நாட்கள் காலதாமதமாகியது என்பது உண்மையாகும். பல சந்தர்ப்பங்களில் அந்த அந்த காலங்களிலிருந்த நிர்வாக ஆலோசனைத் தாபனம் மற்றும் ஒப்பந்தக்காரருடன் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு சில சில முடிவுகளுக்கு வரப்பட்டது.<br>எனினும் அம் முடிவுகளையும் நடைமுறைப்படுத்தும் போது பல்வேறுபட்ட பிரச்சினைகள் தோன்றின.<br><br>ஒரு சந்தர்ப்பத்தில் ஒப்பந்தத்தினை நிறைவு செய்ய தீர்மானிக்கப்பட்டபோதும் ஒப்பந்தக்காரர் வழக்குத் தொடர எண்ணியது இந்த ஒப்பந்தத்திற்கு மீண்டும் கேள்வியினை அழைப்பதனால் செலவு அதிகரிக்கும் ஆகிய விடயங்களை கருத்தில் கொண்டு மீண்டும் அந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து இந்தச் சேவையினைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டதுடன் அங்கு தாமதக் கட்டணத்தினை அறவிட வேண்டாம் என வேண்டுகோள் விடுக்கடப்பட்டது. எவ்வாறான போதும் அவ் வேளையிலும் ஒப்பந்தத்தை நிறைவுசெய்ய முடியாமல் போனதுடன் ஒரு பகுதியையே நிறைவுசெய்ய முடிந்தது.<br><br>புதிய நிர்வாகம் நியமிக்கப்பட்ட பின்னரும் இது தொடர்பாக பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. அங்கு முதலாவது கலந்துரையாடலின் பின் மீண்டும் மண்ணை நிரப்பி செப்பனிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அங்கு அரசினால் மண்வெட்டுவது தொடர்பாக அமுல்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு இணங்க அவ்வாறு செய்யமுடியாமல் போனது. எவ்வாறான போதும் இவ்வேளையில் மீண்டும் ஒருமுறை கலந்துரையாடி உரிய விடயத்தினை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது .<br>மேலும். இந்த வாகன தரிப்பிடத்தின் ஒரு பகுதியை கட்டணம் செலுத்தும் உத்தேச வாட்டுத்தொகுதிக்கு பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த கட்டடத்தினை நிர்மாணிப்பது தொடர்பாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள காலம் எடுத்ததன் காரணமாக அப்பகுதியினை வாகனத் தரிப்பிடமாக பயன்படுத்துவது தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது.<br><br>எவ்வாறான போதும் இக்காலத்திலுள் இந்த நிலப்பகுதிக்குள் வாகனங்களை தரிப்பது இடம்பெற்றதுடன் அங்கு வைத்திய சாலைக்கு நட்டம் ஏற்படவில்லை என்பதனை குறிப்பிட வேண்டும்..<br>இதற்கு இணங்க ஒப்பந்தக்காரரின் பலவீனம் அதேபோல் நிர்வாக ரீதியில் ஏற்பட்ட சிக்கல்மிக்க நிலமை இதற்குத் தாக்கத்தினை ஏற்படுத்தியதுடன் இவ்வேளையில் செயற்றிட்டத்தினை நிறைவு செய்யக்கூடிய முறையில் தீர்மானத்திற்கு வந்து வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வாறான போதும் ஆலோசனை வழங்கும் தாபனத்தின் ஆலோசனை உள்ளடங்கலாக ஒப்பந்தக்காரரிடமிருந்து ஏதாவது நிதியினை அறவிடக்கூடிய நிலமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | வைத்தியசாலையின் கணினி மென்பொருள் அமைப்பினை ஸ்தாபிக்கும் விடயம் 2010 ஆம் ஆண்டில் ரூபா 24,953,859/- ஒப்பந்தப் பெறுமதியில் தனிப்பட்ட தாபனத்திற்கு கையளிக்கபட்டிருந்தது ஒப்பந்தக் காலம் 26 வாரங்கள் ஆகிய மேற் கூறிய ஒப்பந்தத்தின் பௌதிக மற்றும் நிதிச் செயலாற்றுகை முறையே 65% மற்றும் 26% ஆகியதுடன் 2014 ஆண்டில் வேலை கைவிடப்பட்டிருந்தது. அதன் மிகுதி வேலைகள் ரூபா 8,250,000/- ஒப்பந்தப் பெறுமதிக்கு 06 மாதங்களில் பூர்த்திசெய்ய வேறு ஒப்பந்த நிறுவனம் ஒன்றுக்கு 2014 டிசம்பர் மாதத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் முதலாவது ஒப்பந்தத்தின் விடயங்களை மேற்கொண்டிருந்த முதலாவது ஒப்பந்த நிறுவனத்தின் கூட்டு புதிய நிறுவனத்தினால் இந்த மென்பொருள் அமைப்பினை ஸ்தாபிக்கும் விடயத்தில் 04 வருடங்களை விட அதிக காலம் ஈடுபட்டும் 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி அளவிலும் அதனைப் பூர்திசெய்ய முடியாமல் போனது. இரண்டாவது ஒப்பந்தக் காரரின் தாமத காலம் ஒரு வருடத்தினை விட அதிகமாகக் காணப்பட்டதுடன் .பௌதீக செயலாற்றுகை 90% என அறிவிக்கப்பட்டிருந்தது எனினும் தாமதக் கட்டணத்தினை அறவிடும் நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் செயலாற்றுகை பிணைமுறியைக் கூடப்பெற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பெறுகை நடவடிக்கையின் வழிகாட்டல் கோவையின் 5.4.4 (i) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லையினை மீறி ஒப்பந்தப் பெறுமதியில் 50% ஆன ரூபா.4,140,000/- ஆன வேலையினை ஆரம்பிக்கும் முற்பணமான பிணை முறியினைப் பெற்றுக்கொள்ளாது வழங்கப்பட்டிருந்தது. | வைத்தியசாலைக்காக மென்பொருள் அமைப்பின் தேவை பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடலுக்கு உட்பட்ட விடயம் ஆகிய போதும் பின்னர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் ஆலோசனையின் கீழ் தேவையான திட்டமிடல் பத்திரத்தினை தயாரித்து விலைமனு கோரப்பட்டது இதற்கு இணங்க 2010 யூலை மாதம் P.C House தாபனத்திற்கு அந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் அவர்கள் அந்த விடயத்தில் 50% அளவினை நிறைவு செய்தபின் இடைநடுவில் தாபனத்தின் வழிகாட்டல் இடம்பெறாததன் காரணமாக வேறு தாபனம் ஒன்றினை சேவையில் ஈடுபடுத்துவது தேவையாக இருந்தது.<br><br>அங்கு புதிதாக விலைமனுவினைக் கோரி தாபனம் ஒன்றினை தெரிவு செய்வது மிகவும் கஸ்டமான விடயம் என தீர்மானித்த வைத்தியசாலை நிர்வாகம் இது வரை தாபனத்திற்கு சேவையினை வழங்கிய P.C House தாபனத்தினது பங்காளர்களான HBT தாபனத்திற்கு இந்த விடயத்தினை நிறைவு செய்ய சந்தர்ப்பத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானித்தது. அவர்கள் இவ்வேளையில் மென்பொருள் அமைப்பினை ஸ்தாபிக்கும் விடயத்தில் 75% விட அதிகமாக நிறைவு செய்துள்ளனர்.<br>வேறு விடயங்களை நிறைவு செய்வதற்காக வைத்தியசாலைப் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் இந்தத் தாபனத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது அதற்காக ரூபா 8,250,000/- மொத்த நிதியாக அங்கீகரிக்கப்பட்டதுடன் அதில் 50% ஐ வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.மென்பொருள் அமைப்பின் மிகுதிப் பகுதியினை மிகவும் விரைவாக நிறைவு செய்யும் நோக்கில் 06 மாத காலங்கள் போதுமானது எனக் கருதியபோதும் பிரயோக விடயத்தில் ( உரிய ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இணக்கம் செய்த போது ) அது ஒரளவு கஸ்டமான விடயமாகியது . அதற்கு இணங்க எதிர்பார்த்த காலத்தினுள் பூர்த்தி செய்ய முடியாமல் போனது உண்மையான விடயமாகும்.<br>எனினும் அந்த தாபனத்திற்கு நிதி செலுத்திய போது தற்போது செலுத்தப்பட்ட நிதியான 50% இற்காக 10% நிதியினை தடுத்துவைக்கப்பட்டு மிகுதி நிதி 50% செலுத்தப்படவில்லை இங்கு செயலாற்றுகை பிணையினைப் பெற்றுக்கொள்வதில் தவறு காணப்பட்டபோதும் நிதியினைச் செலுத்தும்போது அது உட்படுமாறு 10% நிதி தடுத்து வைக்கப்பட்டு உள்ளது. தற்போது தாபனம் இணங்கிய எல்லா மென்பொருள் அமைப்பும் வழங்கப்பட்டுள்ளதுடன் அவற்றினை நடைமுறைப்படுத்தும் போது தோன்றும் எல்லா பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு இணங்க தாமதக் கட்டணத்தினை அறவிடுவது தொடர்பான<br>நிபந்தனைகளை உள்ளடக்குவது பிரச்சினை மிக்கதாக உள்ளது. |
| (உ) | வைத்தியசாலையின் புதிய இருதய சத்திரசிகிச்சை(Cardiology Building) கட்டடத்திற்கு வெளி சுவரில் நீர் ஒழுக்கினை தடுக்கும் ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து 3 வருடங்களுக்குரிய உத்தரவாத்தச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தத்திற்கு வந்திருந்த போதும் உத்தரவாதச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளாது மீளாய்வு வருடத்தினுள் ரூபா.263,812/- மட்டும் தடுத்து வைக்கப்பட்டு முழு ஒப்பந்தப் பெறுமதியின் மீதியான ரூபா.2,374,312/- நிதி ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப்பட்டுருந்தது. | விலைமனுப் பட்டியலில் காணப்பட்ட நிபந்தனைகளில் 03 வருடங்கள் உத்தரவாத காலம் வழங்கவேண்டும் என நிபந்தனை காணப்பட்டதுடன் எங்களினால் ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் வழங்கும் கடிதத்தில் விலைமனுவில் காணப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு இணங்க அவர் கட்டாயமாக அந்த 03 வருட உத்தரவாத காலத்திற்கு உட்படுகின்றார். அவ் ஒப்பந்தக் காரரினால் 03 வருட உத்தர வாத காலத்திற்குரிய கடிதம் பின்னர் வழங்கப்பட்டுள்ளதுடன் 03 வருடங்கள் நிறைவடையும் வரை தடுத்துவைக்கப்பட்ட நிதி விடுவிக்கப்பட மாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன். |

4.5

<u>விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்</u>

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

வைத்தியசாலையின் பல்வேறுபட்ட பிரிவுகளில் மீளாய்வு வருட இறுதியில் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்பட்ட உபகரணங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| பிரிவு | சொத்து வகை | அளவு | பாவனைக்கு எடுக்கப்படாது காணப்பட்ட காலம் |
|---|---|---|---|
| இரசாயண கூடம் | இரசாயண கூட உபகரணம் | 55 வகையைச் சேர்ந்த 72 அலகுகள் | 2தொடக்கம் 25 வரை |
| சுகாதாரக் கல்விப் பிரிவு | உபகரணம் | 5 வகையைச் சேர்ந்த 4அலகுகள் | 13 ஐ விட அதிகம் |
| இரத்த வங்கி | உபகரணம் | 2 அலகுகள் | 1 ஐ விட அதிகம் |
| 02 ஆம் இலக்க வாட்டு | உபகரணம் | 2 அலகுகள் | 13 விட அதிகம் |
| வைத்திய அறிக்கைப் பிரிவு | உபகரணம் | 2 வகையைச் சேர்ந்த 6 அலகுகள் | 2 விட அதிகம் |

மேலே குறிப்பிட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத நிலமையில் காணப்பட்ட உபகரணங்களை ஒழுங்கான முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சுகாதாரக் கல்விப் பிரிவினுள் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் 3 அலகுகள் 7 வருடங்களை விட அதிக காலம் தொடக்கம் செயற்படும் நிலமையினை அறிந்து பயன்பாட்டிற்கு எடுக்கவோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

<u>இரசாயண கூடம்</u>

அட்டவணை 01இல் இலக்கம் 52 இல் குறிப்பிடப்படும் Frozen Microbre என்ற உபகரணம் தவறுதலாக அச்சடிக்கப்பட்டுள்ளது என அறியத்தருவதுடன் அதற்கு இணங்க உபகரணங்களின் வகை 56 அல்ல எனவும் 55 எனவும்.அதற்று உரிய 72 அலகுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

<u>சுகாதார கல்விப் பிரிவு</u>

இந்த எல்லா உபகரணங்களும் செயற்படும் நிலையில் காணப்படுகின்றபோதும், சில வகைகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் பயன்படுத்தப்படாமையும், சுகாதாரக் கல்வி நடவடிக்கைக்காக இதைவிட உயர்ந்த தொழிநுட்ப தன்மைகொண்ட உபகரணங்கள் பயன்படுத்தியதன் காரணமாக குறைவாகப் பயன்படுத்திய நிலமை காணப்பட்டது. இந்த உபகரணங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கின்றேன்.

## <u>இரத்த வங்கி</u>

குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்கள் இவ்வேளையில் அப்பிரிவில் பயன்படுத்தப்படாதபடியால் அகற்ற நடவடிக்கை எடுக்கின்றேன்.

<u>02 ஆம் இலக்'க வாட்</u>

இந்த உபகரணங்கள் தற்போது செயற்படும் நிலையில் காணப்படுகின்ற போதும். நவீன தொழில்நுட்பத்தின் முன்னேற்றகரமான முறை மற்றும் உபகரணங்கள் காணப்படுகின்ற படியால் இந்த உபகரணம் பயன்படுத்தப்படுவது இல்லை இந்த உபகரணங்களை ஒழுங்கான முறையில் அகற்ற நடவடிக்கை எடுக்கின்றேன்.

<u>வைத்திய அறிக்கைப் பிரிவு</u>

03 கணினிகள் மற்றும் UPS இயந்திரங்கள் 03 மீண்டும் பழுதுபார்த்து பயன்படுத்த முடியுமா என பரிசோதிக்கவேண்டி உள்ளபடியால் அகற்றப்படவில்லை. அந்தக் கணினி இயந்திரங்களை தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கு அனுப்பியுள்ளதுடன் அவற்றினை மீண்டும் பழுதுபார்க்க நிதியினைச் செலவழிப்பது பயனில்லாத படியால் அகற்றுவது சிறந்தது என அப்பிரிவினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அதற்கு இணங்க இவ் உபகரணங்களை ஒழுங்கான முறையில் அகற்ற நடவடிக்கை எடுக்கின்றேன்.

இவ்வாறு பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ள இன்வென்றிப் பொருட்களை இனங்கண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதே 2015 ஆண்டிற்குரிய நிலையான சொத்துக் கணிப்பீட்டின் ஒரு நோக்கம் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

| 4.6 | இனங்காணப்பட்ட நட்டங்கள்<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன . | |
|---|---|---|
| (அ) | மீளாய்வு வருடத்தின் டிசம்பர் 31 ஆந் திகதியில் 5 பிரதான களஞ்சியங்கள் மற்றும் உப களஞ்சியங்களில் காணப்பட்ட காலாவதியான மருந்துகள், சத்திர சிகிச்சைப்பொருட்களின் மொத்தச் செலவு ரூபா 5,415,699/- ஆகும் விபரங்கள் பின்வருமாறு. | பொருட் களஞ்சியம்<br>ஒலிவ் எண்ணெய்<br>பிறந்தவுடன் குழந்தையினைச் சுத்தப்படுத்துவதற்காக இது கொண்டுவரப்பட்டது. பின்னர்Infection Control பிரிவினால் இதை நிறுத்த ஆலோசனை வழங்கப்பட்டது எனவே இந்த மிகுதி ஒலிவ் எண்ணெயைப் பௌதீக சிகிச்சைப் பிரிவு பயன்படுத்த இணங்கி உள்ளது, ( அவர்களது நோயாளிகளுக்கு வெளியில் பூசுவதற்காக)<br>Dextran 40<br>இந்த மருந்து டெங்கு நோயாளிகளுக்காகப் பயன்படுத்தப்படுவதுடன். சில கால எல்லையினுள் டெங்கு நோயாளிகள் அதிகமாகுவதுடன் சில காலங்களில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடையும். பின்னர் இந்த மருந்து காலாவதியாக முன் அரச மருந்துக் களஞ்சியத்திற்கு அறிவித்தபோதும் அங்கு கிடைத்த ஆலோசனைக்கு இணங்க வேறு வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு முயற்சிக்கப்பட்ட போதும் அந்த வைத்திய சாலைகளிலும் அத் தினங்களில் இந்த மருந்து காணப்பட்ட படியால் அதனை மேற்கொள்ள முடியாமல் போனது.<br>மேலே குறிப்பிட்ட மருந்து தொடர்பாக தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையான போட்டோப் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. |

| காலாவதியான வருடங்கள் | காலாவதியான மருந்துகளின் செலவுகள் ( ரூ) |
|---|---|
| மீளாய்வு வருடம் | 866,713 |
| 1 தொடக்கம் 3 வருடங்களுக்கு இடையில் | 268,170 |
| 3 வருடத்தினை விட அதிகம் | 162,716 |
| கடந்த வருடங்களின் பாவனை தொடர்பான தெளிவின் பின் சரியான மதிப்பீட்டின் கீழ்கொள்வனவு செய்யாமையினால் காலங்கடந்த .நரம்புச் சத்திர சிகிச்சை பிரிவிற்கு கொள்வனவு செய்த சத்திர சிகிச்சைப்பொருட்கள். | 4,118,100 |
| | 5,415,699 |

காலாவதியான மருந்துகள் மற்றும் சத்திரகிச்சைப் பொருட்களை ஒழுங்கான முறையில் புத்தகங்களில் இருந்து அகற்ற,பொறுப்புச் சொல்ல வேண்டிய பகுதியினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு, மற்றும் காலாவதியாகும் இருப்பின் அளவினை குறைப்பதற்கு போதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சத்திர சிகிச்சை களஞ்சியம்

SUNES 001/SUNES 002/SUNES 003/SUNES 004/SUNES 005 நரம்பு சத்திர சிகிச்சைப் பிரிவிற்கு கொண்டுவரப்பட்ட பொருளாகும். அது காலாவதியாக முன் பயன்படுத்தி நிறைவுசெய்ய இயலுமா/ இயலாதா/ என்ற தீர்வினைப் பெற்றுக் கொடுக்குமாறு விசேட வைத்தியருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வழங்கலாளருக்கு காலாவதியாகும் தினத்தினை நீடித்துத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. எனினும் பல மாதங்கள் சென்றும் பதில் கடிதம் கிடைக்காததுடன் மாற்ற முடியாது என பின்னர் கடிதம் ஒன்று கிடைத்துள்ளது உரிய போட்டோ பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

SUCOSP005/SUCOSP008/SUCOSP051/SUCOSP054/SUCOSP055/SUCOSP 088

சிலsuture வகை பிரசவ மற்றும் கரப்பிணி சத்திர சிகிச்சைகளில் டெலிகேட் திசு தையல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது இவ் வகையான சத்திர சிகிச்சைகள் நாளாந்தம் இடம்பெறாதபடியால் மீதியாகின்றன. சத்திர சிகிச்சைக் களஞ்சியத்தினால் பணிப்பாளருக்கு அறிவித்து அதன் மூலம் வழங்கல் அலுவலகர் அறிவுறுத்தப்பட்ட போதும் மீண்டும் வழங்கலாளரினால் அவற்றைப் பெற விருப்பம் தெரிவிக்கவில்லை உதா: Polygalactin 91001/2 CRB

சில Suture வகையினை வரவழைத்த விசேட சத்திர சிகிச்சை வைத்தியர் வைத்தியசாலையில் இருந்து அகற்றப்பட்டுள்ளபடியால் அப் பொருட்கள் பாவனைக்கு எடுக்கப்படுவது இல்லை. மிகச் சிறிய அளவில் சில சத்திர சிகிச்சை வைத்தியர்கள் அவற்றினைப் பயன்படுத்தினர். (அந்தவைத்தியர் அகன்று செல்ல முன் சிலவற்றை மீண்டும் வழங்கலாளர்களுக்கு வழங்குவதற்கு ஆலோசனை வழங்கியபோதும் வழங்கலாளர் அதைப்பொறுப்பேற்க வில்லை..

பின்வரும் பொருட்கள் காலாவதியாகுவதை தவிர்க்க எடுத்த நடவடிக்கை.

1. Monofilament Polypropylene
2. Monofilament Polypropylene 8/0 9mm 60

மேலே குறிப்பிட்ட சிறுவர் சத்திர சிகிச்சை உபகரணங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள் முறைகள் கொழும்பு சிறுவர் வைத்திய சாலையில் ஆரம்பிக்கப்பட்டதால் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் பாவனை குறைவடைந்தது..இதன் பின் 2015 பெப்ரவரி மாதத்தில் அது அறிவிக்கப்பட்ட போதும் அந்த சத்திர சிகிச்சை உபகரணங்களை வைத்திய சாலைக்கு அனுப்புவதற்கு அங்கீகாரம் வழங்கியபோதும், அவ் வைத்திய சாலையினால் ஒரு வகையினைச் சேர்ந்த 05 டசின் அளவு மட்டுமே பெற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பின் மிகுதி அளவு பயன்படுத்தப்படாது காலாவதியானது .. இதனால் இந்த சத்திர சிகிச்சை உபகரணங்கள் சத்திர சிசிச்சை உபகரணக் களஞ்சியத்தில் மீதமாகின.. அதற்காக எடுத்த நடவடிக்கைகளுக்குரிய ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

மருந்துக் களஞ்சியம்

சில மருந்துகள் உயிர் பாதுகாப்பு மருந்துகளாகப் பயன்படுத்தப் படுகின்றன . எனவே. அந்த மருந்துகள் களஞ்சியத்தில் இருக்க வேண்டும்உதாரணம்: Anti Tetanus (Human Immunoglobulin) இது ஏற்பு வலிக்கு பயன்படுத்தப்படுவதாகும். சில மருந்துகள் பாவனைக்கு உகந்தவை அல்ல எனக் குறிப்பிட்டு சுற்றறிக்கைகளின் மூலம் அகற்றப்படுகின்றன. இதற்கு உரிய போட்டோ பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்துகளைப் பயன்படுத்திய விசேட வைத்தியர்கள் ஒய்வுபெற்றுச் சென்றதும். இந்த மருந்துகள் காலாவதி யாக ஒரு காரணமாகும் உதாரணம்: Ampicillin Injection.

சில மருந்துகள் அரச மருந்துக் களஞ்சியத்தில் பெற்றுக் கொண்டுள்ள படியால், மீண்டும் இந்த மருந்துகள் காலாவதியாக முன் அரச மருந்துக் களஞ்சியத்திற்கு அறிவித்தபோதும் அவர்களின் ஆலோசனைக்கு இணங்க பிற வைத்திய சாலைகளுக்கு அனுப்ப ஆயத்தமாகியதுடன் அந்த வைத்திய சாலைகளிலும் அக் கால எல்லையினுள் காலாவதியாகும் மருந்து தொகை காணப்பட்டது. எனவே அதனை மேற்கொள்ள முடியாது போனது.

சில மருந்துகள் விசேட நோய்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன இந்த விசேட நோயாளிகள் வருகை தாராத படியால் சில மருந்துகள் காலாவதியாகி உள்ளன. உதாரணம். Pullers earth

உள்ளக மருந்தகம் -1

Anti Venam Serumபெயர் கொண்ட மருந்து வைத்திய சாலை ஒன்றின் மருந்தகத்தில் கட்டாயம் இருக்க வேண்டிய உயிர் பாதுகாப்பு மருந்தொன்றாகும். அதற்குக் காரணம் இந்த மருந்து பாம்பு கடித்தவர்களுக்குப் பயன்படுத்தப்படுவதுடன், சில கால எல்லைகளில் தொடர்ச்சியாக இவ்வாறான நோயாளிகள் வருகை தருவர். சில காலங்களில் நோயாளிகள் குறைவாகக் காணப்படுவர். இதன் காரணமாக இந்த மருந்து காலாவதியாகி உள்ளது .Dextram 40/Ringer lactate Solution என்ற மருந்து டெங்கு நோயாளிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இதுவும் சில காலங்களில் அதிகமாகவும் மற்றும் குறைவாகவும் பயன்படுத்தப்படும். உதாரணம் : டெங்கு நோயாளிகள் குறைந்த தருணங்களில் மிகவும் குறைவாக இந்த மருந்து பயன்படுத்தப்படும்.

Pentalamininjection என்பது சத்திர சிகிச்சைக்கு இடையில் இரத்த அழுத்தம் அதிகரிக்கும் போது வழங்கப்படும் மருந்தாகும். இந்த மருந்தின் மூலம் இரத்த அழுத்தம் குறைக்கப்படும்.(இந்தச் சத்திர சிகிச்சை மூலம் காணப்படும் கட்டி, மற்றும் புடைகளை அகற்றும் சத்திர சிகிச்சை ஆகும்) இவ்வாறான நோயாளிகள் இக் கால எல் லையினுள் வருகை தாராதபடியால் அந்த மருந்துகள் காலாவதியாகி உள்ளன.

DopaminInJ என்பது இரத்த அழுத்தம் குறைந்த நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்தாகும் இந்த மருந்தின் மூலம் இரத்த அழுத்தம் அதிகரிக்கப்படுகின்றது இந்த மருந்துப் பாவனையில் Pulse rate அதிகரிக்கும். இதனால் அது அபாயகரமானதாகிய படியால் இந்த மருந்திற்குப் பதிலாக Dobodamin හා Adrenalin என்ற மருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது . இதனால் இந்த மருந்து காலாவதியாகி உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட சில மருந்துகள் அரசின் பிரதான களஞ்சியத்தில் இருந்து எங்களது வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்வாறு கொண்டுவரப்பட்ட மருந்துகள் காலாவதியாக முன் சில மாதங்களுக்கு முன் உள்ளக மருந்தகச் சாலையின் மூலம் வைத்திய சாலையின் மருந்துக் களஞ்சியத்தின் மூலம் அரசின் பிரதான மருந்துக் களஞ்சியத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலமை எவ்வாறானபோதும் அரசின் பிரதான மருந்துக் களஞ்சியத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு இணங்க பல வைத்தியசாலைகளுக்கு இந்த மருந்தினை அனுப்ப நடவடிக்கை எடுத்தபோதும் அந்த வைத்திய சாலைகளிலும் அக்கால எல்லையினுள் இந்த மருந்துகள் காணப்பட்ட படியால் அவர்கள் அதனைப் பெற்றுக் கொள்வதனை நிராகரித்துள்ளனர் அது தொடர்பான உரிய கடித ஆவணங்களின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

உள்ளக மருந்தகம்ii

Chlorpromizin 50 mg tablet/Imipramin/Phenobarbitone/Trifloperizin tablet/Haloperidol tab/ Benznexol 2mg/Prochlorperzin 5mg.

மேலே கூறப்பட்ட மருந்துகள் உளநோயாளர்களுக்காக அதிகமாகப் பயன்படுத்தப்படுவதாகும்.மேலும் நரம்புதொடர்பான சில சில நோய்களுக்கும் இது பயன்படுத்தப்படுகின்றது எனினும் இக்கால எல்லையினுள் இதற்குரிய நோயாளிகள் வருகை தருவது குறைந்துள்ளது மேலும் இந்த மாத்திரை மருந்து (1000/500) பைகளாகக் காணப்படுகின்றன. சிறிய அளவிலான மாத்திரைகள் தேவைப்படுமிடத்து அவற்றை அவ்வாறு பெற்றுக்கொள்ள முடியாது இந்த மருந்துப் பைகளைத் திறந்தவுடன் வேறுவைத்திய சாலைகளுக்கோ மருந்துக் களஞ்சியத்திற்கோ ஒப்படைக்க முடியாது.. Nalidixic acid என்பது மீள் உயிர்ப்பு மருந்தாகும் இந்த மருந்து வயிற்றுநோ மற்றும் சிறுநீரக நோய்களுக்கு உபயோகிக்கப்படும் மருந்தாகும். இக்கால எல்லையினுள் இந்த மருந்தினை வழங்க வேண்டிய நோயாளிகள் வருகை தருவது மிகவும் குறைவடைந்துள்ளது.

Chloroqrin 250mg மலேரியா நோய், மற்றும் ஆத்தறைட்டிஸ் ஆகிய நோய்களுக்கே இந்த மருந்து பயன்படுத்தப்படுகின்றது இக்கால எல்லையினுள் இந்த மருந்தினை வழங்க கூடிய நோயாளிகளை குறைவானதைக் காணக்கூயதாக இருந்தது.

Hyosynbutuabromide tab/Promethezin tab ஒழுங்குபடுத்துவதற்காகவும் மற்றும் திடீரென வாந்தி எடுக்கும் சந்தர்ப்பங்களில் பயன்டுத்துவதாகும் இந்த மருந்தினை வழங்கக் கூடிய நோயாளிகள் குறைவாக இக்காலத்தில் வருகை தந்தனர்.

Dexamethrzone0.5mg/Vit BO/Carbimazole/Verapamil மேலே குறிப்பிட்ட மருந்துகள் Thyroxin குறைப்பதற்கு மற்றும் விசேட தோல் நோய்களுக்கு வழங்கப்படுகின்றன இந்த மருந்தினை வழங்கக் கூடிய நோயாளிகள் குறைவாக இக்காலத்தில் வருகை தந்தனர்.

மேலே குறிப்பிடப்பட்ட எல்லா மருந்துகளும் வழங்கவேண்டிய விசேட நோயாளிகளின் எண்ணிக்கை குறைவும் வைத்தியர்களினால் சில மருந்துகளுக்குப் பதிலாக அதற்குச் சமமான புதிய மருந்துகளை பயன்படுத்தத் தொடங்கியமை ஆகிய விடயங்களினால் இந்த மருந்துகள் காலாவதியாகின.

| | | |
|---|---|---|
| (ஆ) | மீளாய்வு வருடம் உள்ளடங்கலாக கடந்த 04 வருடத்தினுள் வைத்திய வழங்கல் பிரிவினால் ரூபா .301,443/-செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 14 வகையைச் சேர்ந்த மருந்துப் அலகுகள் 5,553 தரத்தில் குறைந்திருந்ததுடன் அந்தப் பெறுமதியை வைத்திய வழங்கல் பிரிவிலிருந்து அறவிடவோ அல்லது அதற்குப் பதிலாக தரம் கூடிய மருந்தினைப் பெற்றுக் கொள்ளவோ மீளாய்வு வருடத்தின் இறுதியிலும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை | சுற்றறிக்கையின் மூலம் அகற்றுவதற்கு இருந்த மருந்து அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அளவு மற்றும் தொகுதி இலக்கத்துடன் அறிவிக்கப்படும். அதன் பிரதியானது அரசின் மருந்து வழங்கல் பிரிவின் (MSD) பணிப்பாளருக்கு அனுப்பப்படும் அவ்வாறு அகற்றப்படும் இருப்பு அரசின் மருந்து வழங்கல் பிரிவினால் (MSD) நாட்களை அறிவித்து அகற்றப்படும் அவர்கள் அதற்கு மீள்ளிப்புச் செய்யாததுடன் அதற்காகக் கொடுப்பனவினை மேற்கொள்ளும்போது அந்த அளவிற்காக ஏற்ப கழித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| 4.7 | <u>பதவியணியினர் நிர்வாகம்</u><br>பின்வரும் அவதானிப்புக்<br>கள் மேற்கொள்ளப்பட்டன | |
| (அ) | 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சி கணக்கு செயற்குழுவில், வைத்தி சாலையின் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், மற்றும் கணக்காளர் ஆகிய பிரதான பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்ப சுகாதார போசாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சு நேரடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணிக்கப்பட்டிருந்த போதும் , 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வரையும் அந்த பதவிகளுக்காக நிரந்தர அலுவலகர்கள் நியமிக்கப் பட்டிருக்கவில்லை. | தற்போது வைத்தியாலையில் பணிப்பாளர் பதவியினை வகிக்கும் அலுவலகர், அப் பதவிக்காக சுகாதார அமைச்சின் செயலாளரினால் இரண்டாம் தர அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளபடியால் அந்தப் பதவியில் வெற்றிடம் இல்லை என்பதனை தயவுடன் அறியத் தருகின்றேன். பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டு தகைமையுள்ள அலுவலகர் தெரிவு செய்யப்பட்ட போதும் அவர் இவ் வேளையில் அரச சேவையில் உள்ள அலுவலகர் ஒருவர் ஆகையால் அவரை அந்த தபனத்திருந்து விடுவிக்காததன் காரணமாக மீண்டும் அப் பதவி வெற்றிடமாகியது. இவ்வேளையில் அதில் பதில் கடமையாற்றுவதற்காக தாபனத்தின் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அவரிடமிருந்து திறமையான சேவை ஒன்று கிடைக்கின்றது. எனினும் தாபனம் உரிய அலுவலகர் ஒரு வரை நியமிப்பதற்காக ஆட்சேர்ப்புத் திட்டத்தினை மாற்ற பணிப்பாளர் சபைக்கு முன்வைத்துள்ளதுடன் அது அனுமதிக்கப்பட்டுள்ள படியால் தகைமை உள்ள அலுவலகர் ஒருவரை நியமிப்பதற்காகத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>மேலும் உதவி கணக்காளர் பதவியின் இரண்டாம் பதவிக்காக இவ்வேளையில் புதிய அலுவலகர் ஆட்'சேர்க்கப்பட்டுள்ளார். பிரதான கணக்காளர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை ஒன்றினை நடாத்தியுள்ளதுடன் எதிர் காலத்தில் பிரதான கணக்காளர் ஒருவர் ஆட்சேர்க்கப்படுவார். |
| (ஆ) | 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வாட்டு இலிகிதர் /முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 9 ஆகிய போதும் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் முறையே 9 பேர் மற்றும் 8 பேர்கள் ஆக 17 பேர்கள் வாட்டு இலிகிதர் பதவிக்கு ஆட் சேர்க்கப்பட்டிருந்தன 2014 டிசம்பர் மாத அரச நிர்வாகச் சுற்றிக்கை இல 25/2014 இற்கு இணங்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாது, மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் ஒன்று இல்லாது அங்கீகரிக்கப்பட்ட பணியாட்களைத் மீறி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 8 அலுவகர்களுக்கு 2015 செப்டெம்பர் தொடக்கம் டிசம்பர் வரையிலான காலத்தினுள் செலுத்தப்பட்ட சம்பளம், மற்றும் படிகளின் மொத்த ரூபா 1,771,766/- ஆக இருந்தது. , | 2014.12.31 ஆந் திகதியில் இந்த வைத்திய சாலையின் அனுமதிக்கப்பட்ட பணியாட்களுக்கு இணங்க முகாமைத்துவ உதவியாளர் பணிக்குழு 112 ஆகியதுடன் வாட்டு இலிகிதர் பணிக்குழு 11 ஆகும். 2015 ஆம் ஆண்டு அளவில் இந்த வைத்திய சாலையின் வாட்டு இலிகிதர்கள் 07 பேரும் முகாமைத்துவ உதவியாளர்கள் பணிக்குழுவில் 106 கடமையில் ஈடுபட்டிருந்தனர் . அதற்கு இணங்க 10 அலுவலகர்களின் வெற்றிடம் காணப்பட்டது.<br><br>எனினும் வைத்திய சாலையின் எல்லாப் பிரிவுகளும் கணினி மயப்படுத்தப்பட்டதன் பின் அம் முறையினை செயற்றிறன் ஆக்குவதற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் இலிகிதர்களை வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டது . அதற்காக அப்பிரிவு மற்றும் புதிதாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வேறு பிரிவுகளுக்காக போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 09 விண்ணப்பத்தாரிகள் நிரந்தர பணியாட்தொகுதிக்கும், 08 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்பட்டனர். இதற்காக 2015 ஆகஸ்ட் மாதம் 06 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது.<br><br>சேவையின் அத்தியாவசிய நிலைமையின் கீழ் வைத்திய சாலையின் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வாட்டு இலிகிதர்களின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையினை விட ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள அனுப்பப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | வைத்தியசாலை பணியாட்களின் சம்பள ஏற்றத்தினை அங்கீகரிக்க முன் , சித்தி பெற வேண்டிய தடைதாண்டல் பரீட்சை என்ன என்றும் மற்றும் அது சித்தியடையப்பட்டுள்ளதா என கவனத்தில் கொள்ளப்பட்டிருக்காததுடன் சம்பள ஏற்றப் படிவத்தில் அது தொடர்பாகக் குறிப்பிடும் தேவையானது இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இவ் விடயம்தொடர்பாக மிகக் கூடிய கவனம் செலுத்தப்படும். |
| 5. | கணக்குகளின் பொறுப்பும் நல்லாட்சியும் | |
| 5.1 | கூட்டிணைந்த திட்டம்<br><br>2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்காக தயாரிக்கப்படிருந்த இணைந்த திட்டம் 2015 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2014-2018 கால எல்லைக்காக தயாரிக்கப்பட்டிருந்த இணைந்த திட்டம் 2015 ஆண்டிற்காக புதுப்பிக்கப்பபடிருக்க வில்லை என்பதனை ஏற்றுக்கொள்ளுகின்றேன் . வைத்தியசாலையின் புதிய முகாமைத்துவம் நியமிக்கபடப்பட்ட பின் இவ்வேளையில் வெளிவாரி ஆலோசனையாளர்களின் சேவையினைப் பெற்றுக்கொண்டு 2016-2020 கால எல்லைக்காக இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுக்' கொண்டிருக்கின்றது |
| 5.2 | செயல்நடவடிக்கைத் திட்டம்<br><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன | |
| (அ) | நோக்கங்களைக் கொண்ட ஒவ்வொரு விடயங்களுக்கும் உரியதாக மதிப்பிடப்பட்ட பெறுமதி நடைமுறைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட படி ஒவ்வொரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்களுக்கு உரிய மதிப்பிடப்பட்ட பெறுமதி நடைமுறைத் திட்டத்தில் உள்ளடக்கி திருத்தப்பட்ட போதும் முழுமையான நடைமுறைத் திட்டத்தினை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | கூட்டிணைந்த இணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க எதிர்பார்த்த இலக்கு மற்றும் நோக்கத்தினை நிறைவேற்றும் முன்னேற்றம் மற்றும் வரவு செலவுத்திட்டத்திற்கு இணங்க அதற்காக செலவு செய்த நிதியை இணங்காணக் கூடிய முறையில் தவணை அடிப்படையில் முன்னேற்ற அறிக்கையினை தயாரித்து அவற்றின் பிரதிகள் உரிய அமைச்சுக்கு மற்றும் அரச முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணைந்த திட்டம் மற்றும் நடைமுறைத் திட்டத்திற்கு இணங்க எதிர்பார்த்த இலக்கு மற்றும் நோக்கத்தினை நிறைவேற்றும் முன்னேற்றத்தினை இனங்காணுவதற்கு ஏற்ற முறையில் செயலாற்றுகை அறிக்கையினை இதுவரை வைத்தியசாலையினால் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள படிசுற்றறிக்கைக்கு இணங்க செயலாற்றுகை அறிக்கையினை 2016 ஆம் ஆண்டு தொடக்கம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டின் முதல் 2 தவணைகளுக்கு முரிய செயலாற்கை அறிக்கை இப்போது தயாரிக்கப்பட்டுள்ளது.. |
| (இ) | மீளாய்வு வருடத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த நடைமுறைத் திட்டத்தில் உள்ளடக்கப்படிருந்த ரூபா 230 மில்லியன் ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்த அபிவிருத்தி மற்றும் நிர்மாண விடயங்கள் 3 மீளாய்வு வருட இறுதியிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் நடைமுறைத் திட்டங்களில் உள்ளடக்கப்படும் விடயங்களை அந்தத் திட்டத்திற்கு இணங்க பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | தயாரிக்கப்பட்டிருந்த இணைந்த திட்டத்திற்கு இணங்கிய வகையில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைமுறைபடுத்தப்பட வேண்டும்,எனக் குறிப்பிடப்பட்டிருந்த வைத்தியர்களுக்குப் போசனைசாலையினை ஸ்தாபித்தல், இருதய நோயாளிகளுக்காக உயர் தரத்தினைக் கொண்ட இரசாயணகூடம் ஒன்றினை ஸ்தாபித்தல் , புதிய நிதி மற்றும் நிர்வாக கட்ட்டம் ஒன்றினை ஸ்தாபித்தல் ஆகிய விடயங்கள் மீளாய்வு வருட நடைமுறைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நடைமுறைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மத்திய குளிரூட்டி அமைப்பினை மீண்டும் தயாரித்தல் மற்றும் மின்சாரம் வழங்கும் அமைப்பினை மேம்படுத்துதல் ஆகிய விடயங்கள் இணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை, அதற்கு இணங்க இணைந்த திட்டத்திற்கு ஏற்ற முறையில் நடைமுறைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனைந்த திட்டத்திற்கு இணங்கிய வகையில் நடைமுறைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை என்பதனை ஏற்றுக்கொள்ளுகினறேன். எதிர்காலத்தில் இணைந்த திட்டத்திற்கு இணங்கிய வகையில் நடைமுறைத் திட்டத்தினை தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| 5.3 | <u>பெறுகைத் திட்டம்</u><br><br>மீளாய்வு வருடத்தினுள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத 2620 வகையான பொருட்களை அவ் வருடத்தினுள் கொள்வனவு செய்ய ரூபா .95,940,345 நிதி செலவு செய்யப்பட்டிருந்தது அங்கீகரிக்கப்பட்டபெறுகைத் திட்டத்திற்கு இணங்க வைத்திய உபகரணங்கள் 27 அவகுகளின் மதிப்பிடப்பட்ட செலவு 91% தொடக்கம் 2902% வரை என்ற எல்லையைத் தாண்டிக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது அதற்கு இணங்க பெறுகைத் திட்டம் பயனுள்ள நிர்வாக விடயத்திற்காக பயன்படுத்துவதற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் கொள்வனவு செய்யும் திட்டத்தில் உள்ளடக்கப்படாமைக்குக் காரணம் வருட மத்தியில் எழுந்த அவசரமான தேவைகளின் அடிப்படையிலே மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு நடவடிக்கையாகும். வைத்தியசாலையினைப் பேணிச்செல்லும் போது நோய் சிகிச்சையில் எழுந்த அவசரமான நிலமை மற்றும் சேவைகளை பேணிச்செல்ல ஏனைய சேவைகளை தொடர்ச்சியாகப் பேணிச்செல்ல வேண்டிய படியால் இவ்வாறான அவசர தேவைகளின் கீழ் முன்னுரிமையில் கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொருட்களில் பிரதானமானது CT Scannerஇயந்திர உபகரணம் கொள்வனவு செய்வதாகும் இது காணப்பட்ட இயந்திரம் திடிரென செயலிளந்தமை மற்றும் பழுதுபார்ப்பு நடவடிக்கையினை மேற்கொள்வது பொருளாதார ரீதியில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதனால் மேற்கொள்ளப்பட்ட அவசரமான கொள்வனவு நடவடிக்கையாகும் நோயாளர் நிவாரண நடவடிக்கைக்காக அதனை அவ்வேளையில் மேற்கொள்ள வேண்டி இருந்தது.<br><br>1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு இணங்க அந்த வருடத்தினுள் கிடைக்கப் பெற்றுள்ள மொத்த மூலதன ஏற்பாட்டிற்காக நிதி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் ஒவ்வொரு பிரிவுகளுக்குமாக வெவ்வேறாக அங்கீகாரம் வழங்கப்படவில்லை அதற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த ஏற்பாட்டினுள் இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>வைத்திய உபகரணங்களின் வி லை எல்லைகள் மிகவும் பெருமளவு வீச்சில் காணப்படுகின்றன. அது ஒவ்வொரு நாட்டிற்கு இணங்க மற்றும் அவர்கள் அந்தப் பொருடகளுக்காக வழங்கும் தரச் சான்றிதழ், ஆராய்ச்சிக்கு இணங்க வேறுபடும். எனவே கேள்வியினைக் கோரி நிறைவு செய்து சிபாரிசினைப் பெற்றுக்கொடுக்கம் வரை உறுதியான பெறுமதியினை வெளியிட முடியாது.<br>பல மதிப்பீடுகள் கேள்வியின் பெறுமதியின் வீச்சில் அமைந்துள்ளதுடன் அது கொள்வனவு செய்த பெறுமதியை விடக் கூட அல்லது குறைய முடியும். |
| 5.4 | <u>வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு</u><br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன | |
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதி PED/12 ஆம் இலக்க அரச முயற்சி சுற்றறிக்கையின் 5.2.1 பிரிவின் படி நடைமுறைத்திட்டத்திற் கிணங்க கைப்பற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுக்கு உரியதாக செலவுகளை உள்ளடக்கி வருடாந்த வரவுசெலவுத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | தவறினை ஏற்றுக் கொள்ளுகின்றேன். எதிர்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வு வருடத்திற்காக ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்காத 6 செலவு விடயங்களுக்காக ரூபா 34,881,433/- செலவு செய்யப்பட்டிருந்தது. 2 விடயங்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 3,450,000/- ஏற்பாடு முழுமையாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை.. | தவறினை ஏற்றுக் கொள்ளுகின்றேன். எதிர்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | 5 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை வருமானங்களுக்கிடையே 49%தொடக்கம் 707% வரையிலான ஏற்றத்தாழ்வும் வீழ்சியும், 8 செலவு விடையங்களின் மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைச் செலவுகளுக்கிடையே 61% தொடக்கம் 245% வரையிலான ஏற்றத்தாழ்வும் வீழ்சியும், காணப்பட்டதுடன் அதற்கிணங்க வரவு செலவுத் திட்ட அறிக்கையை உற்பத்தித்திறன் மிக்க முகாமைத்துவ நிர்வாக விடயம் ஒன்றாக பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. | பிரையோக ரீதியான வரவு செலவுத் திட்ட அறிக்கை உண்மைச் செலவு/ வருமானத்துடன் 100% இணங்காததுடன் வைத்திய சாலையில் காலத்தின் தேவைக்கு ஏற்படும் நோயாளர் சிகிச்சைக்கு( உதாரணம் டெங்கு போன்ற) இணங்க ஏற்றத்தாழ்வு இடம் பெறும் எல்லையும் மாறுபடும் எவ்வாறான போதும் வரவு செலவுத் திட்ட அறிக்கையை உற்பத்தித்திறன் மிக்க முகாமைத்துவ நிர்வாக விடயம் ஒன்றாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 5.5 | <u>தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்</u><br><br>எதிர்வரும் 05 வருடங்களுக்காக தயாரிக்கப்பட்ட இணைந்த திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதி ஒன்றுடன் பொது முயற்சிகள் செயற்குழுவிற்கு ஒவ்வொரு மாதத்திலும் 10 ஆந் திகதி சமர்ப்பிக்குமாறு 2016 பெப்ரவரி மாதம் 10 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் வைத்திய சாலைச் சபையின் தவிசாளருக்கு கட்டளையிட்ட போதும் 2016 ஆகஸ்ட் 22 ஆந் திகதி அளவிலும் அந்தக் கட்டளைக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பொது முயற்சிகள் செயற் குழுவின் ஆலோசனைக்கு இணங்க இவ் வேளையில் வெளிவாரி ஆலோசனையாளர் ஒருவரின் சேவையினைப் பெறுக்கொண்டு இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் மிக விரைவாக அந்த இணைந்த திட்டத்தினைத் தயாரித்து பொது முயற்சிகள் செயற்குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| 6 | <u>முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</u><br>கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளும் கட்டுப்பாடுகளும் குறைபாடு தொடர்பாக இடைக்கிடையே வைத்தியசாலையின் தவிசாளர் அறிவுறுத்தப்பட்டார் பின்வரும் நிருவாக துறைகள் தொடர்பாக. விசேட கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது. | (அ),(ஆ),(இ),(ஈ),(உ)<br>அறிக்கையில் காட்டப்பட்டுள்ள முறைமைகளும் கட்டுப்பாடுகளும் தொடர்பாக கவனத்தினைச் செலுத்தி தேவையான நடவடிக்கையினை எடுப்பதற்கு இவ்வேளையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.. |

| | முறைமைகளும் கட்டுப்பாடுகளும் துறைகள் | கவனிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | வைத்தியசாலைக்குரிய எல்லா நிலையான சொத்துக்களும் பௌதீக ரீதியில் இனங்கண்டு பெறுமதி மதிப்பிடப்பட்டு ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | மருந்து மற்றும் சத்திர சிகிச்சைப் பொருட்கள் களஞ்சியம் அதேபோல் உப களஞ்சியங்களின் இருப்புப் புத்தகம் ஒழுங்காகப் பேணப்பட்டிருக்கவில்லை.. |
| (இ) | பணியாட்களின் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு, பதவிஉயர்வு, தரப்படுத்துதல் மற்றும் சம்பள அளவு தொடர்பாக ஒழுங்கான ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் அங்கீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | ஒப்பந்தக் கட்டுப்பாடு | ஒப்பந்தம் தொடர்பாக தொடர்ச்சியாக கண்காணிப்பு,மேற்பார்வை மற்றும் கவனத்திற்கு உட்படுத்தப்படாமை. |
| (உ) | கொள்வனவு கட்டுப்பாடு | தேவையினை அறிந்து கொள்வனவு மேற்கொள்ளப்படாமை மற்றும் நிபந்தனைக்கு இணங்க வழங்கலாளர்களின் சேவையினைப் பெற நடவடிக்கை எடுத்திருக்காமை. |

# 6. எதிர்கால தொலைநோக்கு



# 6.1 நிறுவனத்தின் செயற்றிறன் மேம்பாட்டை அதிகரிக்க எதிர்பாரக்கும் இடைக்கால நடைமுறைகள்

| நோக்கங்கள் | செயற்பாடுகள் |
|---|---|
| 1. மருத்துவமனை நோயாளர்கள் அதிதிகள் மற்றும் காரியாலய பணிக்குழுவுக்கான அடிப்படை வசதிகளை முன்னேற்றுதல். | i. மருத்துவ மனையில் பணம்செலுத்தும் வாட்டு வசதிகளை முன்னேற்றுவதற்காக புதிய கட்டணம் செலுத்தும் வாட்டுத் தொகுதியினை நிர்மாணித்தல்.<br>ii. மருத்துவமனையில் சேவைபுரியும் தாதி உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்குவதற்காக புதிய தாதி தங்குமிட விடுதி நிர்மாணித்தல்.<br>iii. நிர்வாக மற்றும் நிதிப் பிரிவுக்காக புதிய கட்டடம் நிர்மாணம் செய்தல்.<br>iv. மருத்துவமனை பராமரிப்பு வேலைத் தளத்திற்காக புதிய கட்டடம் ஒன்றை அமைத்தல், .<br>v. வெளிநோயாளர்களின் வசதிக்காக சேவைகளைப் பெறக் கூடிய வகையில் வெளிநோயாளர் பிரிவு இரசாயண கூடத்தினை விருத்தி செய்தல். |
| 2. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனையில் மருத்துவ மற்றும் ஏனைய ஆராய்ச்சிகள் நடாத்த ஊக்குவித்தல். | i. ஆராய்ச்சி மேற்கொள்ளும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்காக அரசு அனுமதித்த ஆராய்ச்சிகளை வழங்குதல்.<br>ii. மருத்துவமனை நூலகத்தில் கணினி வலையமைப்பு வசதிகளை முன்னேற்றுதல். |
| 3.மருத்துவ மனையில் வழங்கும் சேவைகளுக்குரிய தரத்தினை மேம்படுத்துதல். | i. விசாரணைக் கருமபீடம் மற்றும் தொலைபேசி பரிவர்த்தனை மூலம் மருத்துவ மனையில் பெறக் கூடிய சேவைகள் கிளினிக் மற்றும் மருத்துவ மனைக் கட்டணம் தொடர்பான விபரங்களை பொதுமக்களுக்கு வழங்கத் திட்டமிடல்.<br>ii. நோயாளிகளுடன் சிறந்த தொடர்பாடல்களை நடாத்துவது பற்றி மருத்துவமனைப் பணிக்குழுவிற்கு அறிவூட்டுவதற்கு செயலமர்வு மற்றும் விரிவுரைகளை நிகழ்த்துதல்.<br>iii. மருத்துவமனை பணிக்குழு உறுப்பினர்களுகிடையே குழு உணர்வினை விருதி செய்வதற்காக செயலமர்வு மற்றும் விரிவுரைகளை நிகழ்த்துதல்.<br>iv. மருத்துவ மனையின் ஊடாக நோயாளிகளுக்கு அவசியமான சகல மருந்துகளும் மற்றும் ஏனைய பொருட்களை வழங்கத் தேவையான செயற்பாடுகளை ஸ்தாபித்தல்.<br>v. வதிவிடநோயாளிகளுக்காக சுகாதார வசதிகளை முன்னேற்றுதல்.<br>vi. மருத்துவ மனையில் நோயாளிகளுக்கும் மற்றும் அதிதிகளுக்கும் தங்கியிருக்கும் இடத்தினை உள்ளடக்கியவாறு ஊடகத்தொகுதி ஒன்றினை நிர்மாணிப்பது மற்றும் அதன் மூலம் மருத்துவ மனையினால் வழங்கும் சேவைகள் பற்றியும் நோய்கள் பற்றியும் செய்திகளை ஒளிபரப்புதல். |
| 4. நோயாளிகளுக்கும் பணிக்குழுவுக்கும் நலன்புரி வசதிகளை அதிகரித்தல் . | i. நோயாளிகளுக்கும் பணிக்குழுவுக்கும் நலன்புரித் திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தல். |

Sri Jayewardenepura General Hospital

Thalapathpitiya, Nugegoda, Sri Lanka

Tel : +94112778610-9 Fax: +94112778661

e-mail:planningsjgh@gmail.com

srijayewardenepurahospital@gmail.com

Website: www.sjghsrilanka.org